ஒக்டோபர் 10 - 16, 2004
October 10 - 16, 2004
24 பக்கங்கள்
16.00
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

வார மலர்



எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பால்

## ஆலோசனைக் கவுன்ஸில் பிசுபிசுப்பு!

9/10/2004



தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்



## அடுத்த நகர்வு என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜெயலலிதாவுடன் மோதும் ராமதாஸ் தேர்தலை முன்னிட்ட உத்தி?

தமிழ்நாட்டு அரசியலில் முதிர்ந்த அரசியல்வாதி என்றால் கருணாநிதி. அதாவது கட்சித்தலைவர்களாக இருப்பவர்களில் நீண்ட அரசியல் அனுபவம் உள்ளவர் அவரே. ஜெயலலிதா அதற்கு அடுத்த இடத்தில் உள்ளார். 1980களில் அ.தி.மு.க வின் பிரசார செயலாளராக எம்.ஜி.ஆருக்கு கீழ் ஜெயலலிதா பணிபுரிந்தவர்.

இவர்கள் இருவரும் சமீபகால தேர்தல்களில் போடும் கணக்குகள் அவ்வப்போது பிழைத்து அவர்களுக்கு பெரும் தொல்லையைத் தேடித்தந்துவிடுகின்றன. உதாரணமாக 1996 இல் பதவி இழந்த ஜெயலலிதாவின் கதை முடிந்தது என்றே சகலரும் நம்பினார்கள். ஆனால் 1998 லோக்சபாத் தேர்தலில் தமிழகத்தில் முதல்வர் கருணாநிதி – மூப்பனார் கூட்டணியைத் தோற்கடிப்பதில் பி.ஜே.பி – ஜெயலலிதா கூட்டணி வெற்றிகண்டது. எனினும் கருணாநிதியின் ஆட்சியைக் கலைக்க வாஜ்பாய் இணங்காததால் ஜெயலலிதா வாஜ்பாய் அரசைக் கவிழ்த்தார்.

தொடர்ந்துவந்த 1999 லோக்சபாத் தேர்தலில் கருணாநிதி முதன்முறையாக பி.ஜே.பியுடன் சேர்ந்து வெற்றி அடைந்தார். இந்தமுறை ஜெயலலிதாவின் கணக்குப் பிழைத்தது. கருணாநிதி போட்ட கணக்குச் சரியாகியது. இந்தநிலையில் 2001 சட்டசபைத் தேர்தல் வந்தது.

முதல்வர் கருணாநிதிக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக பலரும் கருதினார்கள். 1996, 1998 தேர்தல்களில் மூப்பனாருடன் கூட்டணி வைத்திருந்ததை உதறித்தள்ளிவிட்டு பி.ஜே.பியுடன் சேர்ந்தது பெரும் கெட்டித்தனம் என நினைத்துக்கொண்ட கருணாநிதி 2001 தமிழக சட்டசபைத் தேர்தலை இறுமாப்புடன் சந்தித்தார். தனது கூட்டணியில் இருந்த ம.தி.மு.க வுக்கு போதிய இடங்கள் தராமல் அதனைக் கூட்டணியைவிட்டு வெளியேற்றினார். இங்கு கருணாநிதி தப்புக்கணக்குப் போட்டார். ஜெயலலிதாவோ, காங்கிரஸ், பா.ம.க., கம்யூனிஸ்ட், மூப்பனார் என வலுவான கூட்டணி அமைத்து மீண்டும் தமிழக முதல்வரானார்.


டாக்டர் ராமதாஸ்

அடுத்தமுறை வந்தது, 2004 ஏப்ரல் லோக்சபாத் தேர்தலில் 20 ஆண்டுகள் காங்கிரஸை விரோதித்து வந்த கருணாநிதி மீண்டும் காங்கிரஸுடன் உறவுகொண்டார். பா.ம.க, ம.தி.மு.க கட்சிகளும், கம்யூனிஸ்ட்களும் இணைந்து மெகா கூட்டணியாக உருவெடுத்து தேர்தலில் அமோக வெற்றிகண்டது. இந்தமுறை ஜெயலலிதாவின் கணக்குப் பிழைத்துப்போனது.

ஆக, இப்படி ஒவ்வொருமுறை ஜெயலலிதாவுடைய அல்லது கருணாநிதியுடைய கணக்குப் பிழைத்துப்போவது சரித்திரம். 1998 இல் கருணாநிதி, 1999 இல் ஜெயலலிதா, 2001 இல் கருணாநிதி, 2004 இல் மீண்டும் ஜெயலலிதா எனத் தப்புக் கணக்குப்போடுவது மாறிமாறி நடக்கிறது.


ஜெயலலிதா

ஆனால், வேடிக்கை என்னவென்றால் தமிழக அரசியலில் 1998 க்குப்பிறகு நடந்த 4 தேர்தல்களிலுமே தப்புக்கணக்கே போடாத அரசியல்வாதி ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவர்தான் பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் ராமதாஸ்.

வன்னியர் சமூகத்தினருக்காக எண்பதுகளின் பிற்பகுதியில் பா.ம.கவைத் தொடங்கிய ராமதாஸ் 1996 வரை சரியாக தமிழக அரசியலில் காலூன்ற முடியவில்லை. காங்கிரஸ் கட்சி 1996 இல் த.மா.காவாக உடைந்து சிதறியபோது அந்த வெற்றிடத்தில் வெற்றிகரமாக உள்நுழைந்து கொண்டவர்கள் ராமதாஸும் – வைகோவும்.

முதன்முதலில் 1998 தேர்தலில் பி.ஜே.பி – ஜெயலலிதா கூட்டணியில் இணைந்து வெற்றிகொண்டனர். பின்னர் 1999 இல் தி.மு.க – பி.ஜே.பி கூட்டணியிலும், 2001 இல் ஜெயலலிதா – காங்கிரஸ் கூட்டணியிலும், 2004 இல் தி.மு.க – காங்கிரஸ் அணியிலுமாக அணிமாறி, அணிமாறி வெற்றி பெறும் அணியில் தான் இருப்பதை எப்படியாவது ராமதாஸ் சாதித்துக் கொள்கிறார். அதுதான் அவரது அரசியல் சாணக்கியம். சந்தர்ப்பவாதி என்கிற பெயரைச் சம்பாதித்துக்கொண்டாலும் அவர் அதைப் பற்றி அலட்டிக்கொள்வதாக இல்லை. வெற்றிபெறும் அணியில் இருந்தால்போதும் அவருக்கு. கருணாநிதி, ஜெயலலிதா கூடத் தப்புக்கணக்குப் போடும் வேளைகளில் இவரால் மட்டும் எப்படி எல்லாத்தேர்தல்களிலும் வெற்றி பெறும் அணியிலேயே இருக்க முடிகிறது. சந்தர்ப்பவாதமே காரணம் என்று சொன்னாலும் கருணாநிதி, ஜெயலலிதா, வைகோ சகலருமே சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் தானே. அவர்கள் போடும் கணக்கு அவ்வப்போது பிழைத்துப் போகிறதே? உண்மைதான் மருத்துவராக இருந்து அரசியலுக்கு வந்த ராமதாஸ் சாணக்கியமாக அரசியல் நடத்துவது பெரும் விந்தையே.

குறிப்பாக பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தை குறிவைத்தே ராமதாஸின் அரசியலே நடக்கிறது. இது யூனியன் பிரதேசமாதலால் தனி முதல்வரும் அரசும் உண்டு. வன்னியர்கள் கணிசமான அளவுவாழும் பாண்டிச்சேரி, புதுச்சேரி, புதுவை எனவும் அழைக்கப்படுகிறது.

1967 க்குப்பின் தமிழகத்தில் ஆட்சிக்கே வரமுடியாது திண்டாடும் காங்கிரஸ் கட்சி புதுவையில் இன்னும் வலுவான ஆளும் கட்சியாக இருக்கிறது. தி.மு.கவோ, அ.தி.மு.கவோ நினைத்தால் கூட அசைக்கமுடியாத அளவு வலுவான நிலையில் பாண்டிச்சேரியில் காங்கிரஸ் உள்ளது.

ஆனால், புதுவையில் காங்கிரஸை அகற்றிவிட்டு எப்படியாவது மூக்கை நுழைக்கபா.ம.கதொடர்ந்து முயல்கிறது. 2001 சட்டசபைத் தேர்தலில் பி.ஜே.பியை கைவிட்டு அ.தி.மு.க – காங்கிரஸ் கூட்டணியில் ராமதாஸ் சேர்ந்தார். இந்த அணிவெல்லாது எனச் சகலரும் கருதிய நிலையிலேயே ராமதாஸ் இந்த அணியில் சேர்ந்தார். கடைசியில் வெற்றி இந்த அணிக்கே கிடைத்தது.

எனினும் தனிப்பட்ட ரீதியில் ராமதாஸுக்கு தோல்வியாகவே முடிந்தது. ஏனெனில், புதுவைச் சட்டசபைக்கு பா.ம.கவுக்கு கூடுதல் இடங்களை ராமதாஸ் கேட்டார். ஆனால், 1991 முதல் இன்றுவரை புதுவையில் ஆளும் கட்சியாக இருக்கும் காங்கிரஸ் அதற்கு இணங்கவில்லை. கடைசியில் கூட்டணி தமிழகத்துக்கு மட்டும் என முடிவு செய்யப்பட்டது. பா.ம.கவும் – காங்கிரஸும் தமிழகத்தில் நண்பர்களாகவும், புதுவையில் எதிரிகளாகவும் போட்டியிட்டன. கடைசியில் காங்கிரஸ் வென்று ஆட்சிக்கு வந்தது.


மீண்டும் 2004 தேர்தலில் புதுவைலோக்சபாத் தொகுதியை ராமதாஸ் கேட்டார். காங்கிரஸ் மறுத்தது. ராமதாஸும், கருணாநிதியும் வலியுறுத்தி புதுவை தொகுதியை விட்டுத்தர காங்கிரஸை நிர்ப்பந்தித்தனர். கடைசியில் வேறுவழியின்றி காங்கிரஸ் இணங்கியது. இப்போது மத்திய அரசில் ராமதாஸின் மகன் டாக்டர் அன்புமணி சுகாதார அமைச்சாரக உள்ளார்.

இந்த நிலையில் ராமதாஸ் எப்போது ஜெயலலிதா அணிக்குத் தாவுவாரோ என்று கருதப்படும் நிலையில் ராமதாஸ் சமீபகாலமாக ஜெயலலிதாவை கடுமையாக விமர்சிக்கத் தொடங்கியுள்ளார். இது பலருக்கும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியுள்ளது.

ஆனால், ராமதாஸ் சாணக்கியர். எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் ஜெயலலிதா வெல்லமுடியவே முடியாது என்பதை உணர்ந்து கொண்டுள்ளார்.

எனவே தொடர்ந்து தி.மு.க – காங்கிரஸ் அணியில் தொடர்ந்து இருக்க முடிவெடுத்துவிட்டார். என்று தெரிகிறது. இதனால் தான் தி.மு.க.வினர் கூட விமர்சியாத அளவு அ.தி.மு.கவை ராமதாஸ் விமர்சிக்கிறார்.

இதற்கிடையில் தி.மு.க. கூட்டணியில் மற்றொருபங்காளியான ம.தி.மு.கவின் துயரங்கள் இன்றும் தீர்ந்த பாடில்லை. மத்திய அரசு வைகோ விருப்பப்படி பொடாச் சட்டத்தை நீக்கிவிட்டாலும், முன்கூட்டியே பொடாவில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அப்படியே தொடரப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. ஆக என்ன நோக்கத்துக்காக பொடாவை நீக்க வைகோ விரும்பினாரோ, அந்த நோக்கம் நிறைவேறவில்லை.


கருணாநிதி

முன்தேதியிட்டு பொடாச்சட்டத்தை நீக்க வேண்டும் என வைகோ தனது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார். இந்த பொடாவால் தான் வைகோ பி.ஜே.பி கூட்டணியை விட்டுவெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. இதே காரணம் காங்கிரஸ் கூட்டணியிலிருந்தும் வெளியேற வைக்குமா என்பது சுவாரஸ்யமாக நோக்கப்படும் விடயம்.

**-எஸ். சுரேந்திரஜித்-**

# களுத்துறை தமிழ்க்கைதிகளின் சிறைமலர் ஒக்டோபர் இதழ்

களுத்துறை சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் 'சிறைமலர்' ஒக்டோபர் மாத கையெழுத்துப் பிரதி வெளிவந்துவிட்டது.

மண்மீட்புப் போரில் ஒரு வீர காவியத்தை எழுதி, தமது உயிரை ஆகுதி செய்த வீரமறவர்களான குமரப்பா, புலேந்திரன் உட்பட பத்து வேங்கைகளின் நினைவாக அவர்களது நினைவுத்தூபி அழகாக வரையப்பட்ட முன் அட்டையுடன் சிறைமலர் ஒக்டோபர் மாத இதழ் மலர்ந்துள்ளது.

மலரைப்புரட்டினால் உள்ளே தேசியத்தலைவரின் சிறப்புச் சிந்தனை மற்றும் ஆசிரிய தலையங்கம், கவிதைகள், சிறப்புக்கட்டுரை எனப் பல ஆக்கங்களால் மலர் பொலிவு பெறுகிறது.

சிறைமலர் ஆசிரியர் ரகு தனது ஆசிரியர் தலையங்கத்தில், 'தாழை மலர்ந்தால் அதன் மணத்தை யாராலும் சிறையிட்டு வைக்க முடியாது. அதைப் போலத்தான் உங்களுக்குள் உயிர் பெறும் உயிர்த்துடிப்பான சிந்தனைகளையும் சிறைப்படுத்தமுடியாது.

சுடர் ஒளிப் பத்திரிகை எங்களைப் பல வழிகளிலும் ஊக்கப்படுத்த முன் வந்துள்ளது. இதனை ஒவ்வொருவரும் பயன்படுத்த முன்வாருங்கள்'' என்று அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

'நாளைய சுதந்திர தமிழீழத்துக்காய் இன்றைய கவிவரிகள் 'என்ற தலைப்பின் கீழ் ஆழமான சிந்தனைகளை எம்முன் விதைக்கும் வகையில் அனலிடையான் எழுதிய கருத்தாழம் மிக்க கவிதையும் பிரசுரமாகி உள்ளது.

29.09.2004 சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகி இருந்த தமிழின்பன் லூக்காஸின் 'எம்மையும் பாரீர்' என்ற கவிதை அதன் சுவை காரணமாக சிறை மலரில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இந்த இதழில் அனலிடையான் சிறப்புக்கட்டுரை ஒன்றையும் எழுதி உள்ளார். வீரவேங்கைகளான 12 வீர வேங்கைகளின் நினைவு நாளை முன்னிட்டு 'பயணத்தின் [illegible]' என்ற பெயரில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

முப்பெருந்தேவியரது புகழ்பாடும் நவராத்திரி விரதம் தொடர்பான ஆக்கம் ஒன்றும் பிரசுரமாகி உள்ளது. நவராத்திரிச் சிறப்புக்களை அறிவானந்தம் ஊடாக வெளிக் கொணர்ந்துள்ளார் இந்து மதக்குரு பிரம்மஸ்ரீ சி.ஐ.இரகுபதி சர்மா.

'உண்மைச்சம்பம்' தொடரில் மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த மயில்வாகனம் விஜயரட்ணம் தனது கைதின்போது தான் பட்ட துன்பச் சூழ்நிலைகளை மிகவும் உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தி உள்ளார்.

'நினைவில் உறைந்த நினைவுகள்' விடுதலைப் போராட்டவேளையில் நிகழ்ந்த சுவை மிகு சம்பவங்களை மீண்டும் மனக்கண் முன் கொண்டுவருகிறது. இதனை எழுதியவர் ரகு. இது ஒரு தொடர் ஆக்கம்.

2.10.2004 வரையான ஒரு மாத காலச் சம்பவம் பற்றிய 'நிகழ்ந்தவற்றில் நினைவுக்கு' என்ற அம்சத்தில், சிறையில் நிகழ்ந்த சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

செஞ்சிலுவை சர்வதேசக்குழுவினர் சிறைக்கு வருகைதந்தது, எப்.ஆர்.சியினர் வந்து மருந்து மற்றும் உடைகளை வழங்கியமை, 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிமலகுமார் பிணையில் விடுதலையானது, 10 வருட சிறைத்தண்டனை அனுபவித்துவரும் எஸ். கேதீஸ்வரன் (கண்ணன்) மன நோயினால் பாதிக்கப்பட்டு நாகொட அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு சொல்லப்பட்டமை, தியாக தீபம் திலீபனின் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டு விளையாட்டுப்போட்டியும் நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டமை ஆகியவை 'நிகழ்ந்தவற்றில் நினைவுக்கு' ஆக்கத்தில் இடம் பெற்றுள்ளன.

மலரின் இறுதியில் 'மறத்தமிழிச்சி மாலதி' என்ற கவிதை இடம் பெற்றுள்ளது. போராட்ட வரலாற்றிலே முதல் களப்பலியான பெண்புலி வேங்கையான மாலதியின் உருவப்படம் அழகாக வரையப்பட்டு மலரின் பின் அட்டையை சிறப்பிக்கிறது.

தமது கற்பனைத் திறமையால் படங்களை வழமைபோன்று அழகாகத் தீட்டி உதவியவர்கள் சுஜெயன், ஜெகதீஸ்

சிறை மலர் விமர்சனப் பார்வை
ஸ்ரீமதி வசந்திசர்மா இரகுபதிசர்மா
தமிழ் அரசியல் கைதிகள் பெண்கள் பிரிவு
பெண்கள் சிறைச்சாலை
வெலிக்கட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

### சீக்கிரம் வந்துவிடு!

உன்
புகைப்படத்தோடும்
டெலிபோன் குரலோடும்
என் குழந்தைப் பருவம்
கழியப் போகிறதா.....?
கடற்கரை மணலில்
அப்பாவின் கைபிடித்து
நடக்கும் பையன்களை
பார்க்கையில் அலைகள் – என்
மனதுக்குள்......
வீட்டின் சோக்கேசுக்குள்
பொம்மைகள் ஏராளம்...
எதிர் வீட்டுப் பையன்
அப்பாவின் தோளில்
உப்பு மூடை போகையில்
சோக மூடைகளால்
கனக்கிறது மனது...
சிநேகிதர்கள்
அப்பாக்களை
அறிமுகப்படுத்தும்
வேளை
நான் மட்டும்
அழுகைக்கு
அறிமுகமாகியபடி...
அப்பா...
வெளிநாட்டிலிருந்து
சீக்கிரம் வந்துவிடு – உன்
குரலோடு குடும்பம் நடத்தும்
அம்மாவின்
இளமை ......முடியும் ...
முன்னாவது!!!

*அ.பிரியன்*
*கிளிநொச்சி.*

### புரியாத புதிர்!

நடையதுவோ கதகளி
இடையதுவோ பிருத்வி
பார்வையது அக்னி
பேச்சதுவோ அணுவீச்சு
கண்களது கதிர்வீச்சு
விரல்களல்ல மென்பஞ்சு
இமைகளல்ல சீனச்சுவர்
கூந்தலது தொங்கு தோட்டம்
அழகில் நீ நயாகரா
கலையில் நீ தாஜ்மகால்
இதயம் மட்டும் ஏனடி
ஈரமில்லா சகாராவாய்

*தே.சந்திரமோகன்*
*விசுவமடு*

### உணர்கிறேன்!

என் பார்வைப்புல வீச்சுக்குள்
நீயிருந்த போதெல்லாம்...
உணர முடியாது போன
என்னை...
நீ என்னைக் கடந்துசென்ற
ஒவ்வொரு விநாடியும்...
உணர்த்தியது.

*யோ.துளசிநிலா*
*நல்லூார்.*

### சுதந்திரத் தூக்கம்

நாம் –
சுதந்திரக் காற்றைச்
சுவாசித்தோம்
சுயாதிபத்திய நெறி கொண்ட
சுந்தர பூமியை நேசித்தோம்;
ஆனால்,
சுதந்திரமோ, தந்திரமாய்
நம்மைத்தான் நாளுக்கு நாள்
சுவை பார்த்துக் கொள்கின்றது
ஆனையுண்ட விளாங்கனியை
அலாக்காகப் பற்றிக்கொள்ள....
அத்துணை ஆசையா....?
ஆனை பார்த்த குருடர்களே,
ஆளுக்காள் முட்டிமோதி
அம்பலத்திலாடுகின்றனர்;
இந்த ஆட்டத் தொடர்....
அவர்களுக்கு
அரங்கேற்ற வேளை!
அடுத்தவர்க்கோ.... அது,
குரங்காட்டும் சாலை!
இதனிடையே –
இரவுப்பொழுதே சுகமென்று,
இறால் வடிவில் போர்வைக்குள்
இமை மூடித் துயில்வார் சிலர்!
விடியற் பொழுது,
விரையும் வேளை தெரியாமல்,
விழித் தெழுந்த சேவல்கள்
வளைந்தும், நெளிந்தும்,
வயிறலைத்துக் கூவுகின்றன!
வேளா வேளைக்கு
விடியலைத்
தாமே கொணர்வதாய்.....
தம்மைத் தாமே
வியந்து கொள்ளும்
திருப்தி, சேவல்களுக்கு!
குரல்வளந் தீட்டும்
சேவலை மிகைத்தவாறு
குறட்டை ஒலியெழுப்பும்
ஆமை நிகர்த்த மனிதர்கள்,
சேவல்களைச் சலித்தவாறு
போர்வைக்குள் புதைந்து,
புரண்டு, சுருண்டும் !
இதுவும்,
இரவுத் தேவதையளித்த
இதமான... மிதமான.....
சுதந்திரத் தூக்கமே

*– ஏறாவூர் அனல் அக்கதர் –*

### மாற்றம் ஏன்?

நினைவின் நிலவே
நின்முக மலர்வில்
கிழிஞ்சல்களாகியது
ஏழை என் மனது!
மூன்றாம் பிறையாக
தேயவைத்தாய் உன் அன்பை
ஏனிந்த ஏமாற்றத்தை
எனக்களித்தாய்!
நினைவுகள்
ஜென்மங்கள் ஈரேழானாலும்
மறையாது
என்னை விட்டு!
அகலாத
உன் ஞாபகச் சுவடுகளால்
கவி புனைவேன்
தினம் உனக்காய்!

*எஸ்.விமலா*
*கல்மடுநகர்.*

### உறங்காத விழிகள்!

வேதனை ஆணிகளை
ஆழமாக அடித்திறக்கும்
பாவப்பட்ட ஜீவன்களாய்
தினம் நாம்!
துன்பத்தின் வேதனையால்
உதிரமே சொரிகின்றது
விழிகளினால்!
விழித்தபடியே
எங்களுக்கான
இராத்திரிப்பொழுதுகள்
கரைந்து போகின்றது
துக்கமே
எச்சமும் மிச்சமுமாக,
என்று வரும்
இனிய கனவுகள் காணும்
நிம்மதித் தூக்கம்?
தாயின்
பாசமடியில்
தலை சாய்க்கும்
நாளுக்காக
ஏங்கித் தவிக்கிறோம்.
விழிகளில்
தூக்கமில்லை
துக்கமே முகிழ்ந்து
நிறைந்து கிடக்கிறது
எப்போது நாங்களும்
நிம்மதியாய் தூங்குவது?

*கல்லடி றொபட்*
*களுத்துறைச்சிறை.*

### உன்னால்.........

அன்பே! அழுகின்றேன்
கண்களில் நீரும் இல்லை
தொழுகின்றேன்
ஆண்டவன் அவனும் இல்லை
வாழ்கின்றேன்
வாழ்வில் நிம்மதி இல்லை
சிரிக்கின்றேன்
சிரிப்பில் அர்த்தமில்லை
சிந்திக்கின்றேன்
ஜீவனுள் சக்தியில்லை
ஊாவுகின்றேன்
நடைப் பிணமாய்
இத்தனையும்
நீ தந்த வரங்களாய்...

*சூட்டி, இருபாலை.*

### கனமான அக்கணம்

ஆண்களென்னும்
அதிகாரிகளின்
அட்டகாச சேட்டைகள்
கண்டதும் காதல் கொண்ட
கண்மூடிக் கொள்கைகள்.
காதலென்னும் காத்திருப்பில்
வீணெனவே செலவாகும்
கடிகார நேரங்கள்.
அலசி அலசி நித்தம்
வாதம் பண்ணியும்
ஓயாத என் நாக்கும்
மூடாத என் உதடும் – சட்டென
தாள் போட்டு
ஒட்டிக் கொண்டன
நானுன்னைக் கண்ட
கணம் முதல்........!

*சு.பிரீந்திகா*
*புத்தளம்.*

### பூவையின் ஆதங்கம்!

கண்ணா
முதுமைத்தோற்றத்தின்
முன்னிருந்த
வினாடிகளை
தலைமுழுகிடாது.
மீட்டிக்கொள்....
அப்போதுதான் – என்
வசந்தத்திலேனும் – நீ!
வாழும் – வினாடிகளை
நீட்சிக்கலாம்
பணத்துக்காய் – அன்று.
பரதேசியானாய்...
இன்றோ!
அவள்
கழுத்தறுப்பிற்காய்...
காலத்தை
வருத்திக்கொள்கிறாய்.
புரிந்திருக்கும் – உனக்கு.
காதல் – கசப்பென்று.
இருந்தாலும்
திசைமாறிய – உன்
காதலுக்காய் – நான்
வருந்தவில்லை.
ஏனென்றால் – நீ
ஏமாற்றியதை
என்னால்...
ஜீரணிக்கமுடிந்தது.
என்னை
ஏமாற்றியதையும்
உன்னை – அவள்
நழுவிப்போனதையும்
நீயோ
மறக்கமாட்டாய்....
அதற்காகத்தான்.
அவளை – மறந்து
எந்தன்...
வசந்தங்களையேனும்,
யாசித்துப்பார்...
உன் போலிவேசம்
கலையலாம்
சிலவேளை!

*செயின் தம்பி ஸியாம்*
*கல்முனை – 06.*

### உன்னால் முடியும்!

சிந்தனையின்வட்டத்துள்
மூழ்கித் தவிக்கும்
உன் நிலை புரிகிறது
எனக்கு!
இருந்தும் சிறு
வட்டத்துள் வாழ
நினைக்கும் – உன்
அருகே வர
இஷ்டமில்லை எனக்கு!
முன்னேற்றத்தின் படிகள்
உன்முன்னே
இன்னும் ஏணியாய்..!
வானம் தொட்டுவிடும்
தூரம் தான்!
முயன்றுபார்
உன்னால் முடியும்
உன் கனவை
நனவாக்க!

*எஸ்.சதா*
*கொழும்பு.*

### என் கவிதைகள்

மசேட்டும்...
ஜின்ஸ்கமாய்
வலம் வந்த காலத்தில்
அரும்பு மீசையாய்
துளிர்விடத் தொடங்கிய
காதல்!
உயிர்த்துளிகளாய்
பேனாவின் மையால்
காகிதத்தில் வரைந்த
கவிதையை
அப்படியே
மறு ஆத்மாவோடு
அனுப்பி வைத்தேன்!
அவளுக்கும்...
சுடர் ஒளிக்கும்!
அந்தோ பரிதாபம்!
கவிதைப்புனல் – என்னை
அங்கீகரித்தது போல
ஏற்றுக்கொள்ளவில்லையே
அவள்
என்னையும் – என்
கவிதைகளையும்!

*வ.அபியா*
*இராஜகிரிய.*

### பார்வை

கண்ணாடி முன்
கிடத்தினேன் முகத்தை
ஆயிரம் புள்ளிகள்
ஆங்காங்கே!
எவள் என்னை
எங்கே பார்த்துத்
தொலைத்தாளோ....

*கு.க.தவசீலன்*
*விசுவமடு.*

### சாட்சி சொல்லும்!

*என் சிரம் சாட்சி சொல்லும்*
*உனைக் கண்டு தானாக*
*அசைத்(ந்)த நினைவுகளை!*
*என் கண்கள் சாட்சி சொல்லும்*
*உந்தன் அழகில்*
*பிரமித்துப் போன*
*உணர்வுகளை!*
*என் செவிப்புலன்கள்*
*சாட்சி சொல்லும்*
*உன் புகழ் பிறர் பாட*
*கேட்டு மகிழ்ந்ததை!*
*என்இரத்த நாளங்கள்*
*சாட்சி சொல்லும்*
*உனக்காக என் இரத்தத்தை*
*மையாக்கி விட்டதை!*
*என் கரங்கள் சாட்சி சொல்லும்*
*உனக்காய் எழுதத் துடித்த*
*கடிதங்களை!*
*என் கால்கள் சாட்சி சொல்லும்*
*உன்னைக்காண*
*நடந்த தூரங்களை!*
*என் இதயம் சாட்சி சொல்லும்*
*என் இதயம் உன்னிடம்*
*சங்கமமாகி விட்டதை!*
*என் நித்திரா தேவி*
*சாட்சி செல்லும்*
*உன் நினைவால்*
*நித்திரையறுத்துத் தவித்ததை!*
*என் உயிர் சாட்சி சொல்லும்*
*என்னுயிர் என்னிடம்*
*இல்லை என்பதை!*

*தருமபாலன்*
*யாழ் பல்கலைக்கழகம்*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்களின் நறுமணத்தில் மயங்கிவிட்ட சிறுத்தை



மிருகக் காட்சிச் சாலையில் வளர்க்கப்படும் விலங்குகளுக்கு அவற்றின் குணாதிசயத்திற்கு ஏற்ற முறையில் கூண்டுகள் அமைக்கப்படுவது அவசியம். அந்தக் கூண்டுகளில் சுத்தம் பேணப்படுவது முக்கியம். பெல்ஜியம் மிருகக்காட்சிச் சாலையில் வளரும் சிறுத்தையின் கூண்டுக்குள் நறுமலர்க் கன்றுகளை நட்டு வளர்க்கின்றார்கள். அந்த மலர்களின் நறுமணத்தில் மயங்கிய சிறுத்தை மலர்களை முகர்ந்து பார்க்கும் காட்சி.

# மின்கம்பக் காகங்கள் சூரியனுக்கு பிரியாவிடை



சூரியன் மறையும் வேளை பறவைகளுக்கு துன்பகரமானது. அடுத்து வரும் இரவை எவ்வாறு கழிப்பது என்ற பீதியால் அவை துவண்டுபோய்விடும். ரஷ்யாவின் டைஸின்கோ கிராமத்தில் மாலையில் சூரியன் மறையும் நேரம் மின்சாரக் கம்பத்தில் கூட்டமாகக் கூடிவிட்ட காகங்கள் சூரியனுக்குப் பிரியாவிடை கூறும் காட்சி.

மசாலா மிக்ஸ்

# ஜனாதிபதி புஷ்ஷுக்கு டபிள்யூ வரவேற்பு



அமெரிக்க ஜனாதிபதி புஷ் இரண்டாவது தடவையாக பதவிக்கு வருவதற்காக பெரும் பிரயத்தனம் எடுக்கிறார். மினி சொட்டா மாநிலத்திற்கு புஷ் தேர்தல் பிரசாரத்திற்கு வந்த போது அவருடைய ஒரு இளம் ஆதரவாளர் ஆங்கிலத்தில் ''டபிள்யூ'' எழுத்தைத் தனது தலையில் கொண்டைப் பின்னலாக வடிவமைத்து வரவேற்ற காட்சி.

# துருவக் கரடி மகிழ்ந்திட வயலின் இசைவிருந்து!



ஆர்ஜன்டீனாவில் தற்போது இலையுதிர்காலம். அதனை முன்னிட்டு நாடு முழுவதும் குதூகலமான முறையில் விழாக்கள் நடைபெறுகின்றன. புவனஸ் அயர்ஸ் மிருகக் காட்சிச் சாலையில் துருவக்கரடி ஒன்று கண்ணாடியிலான நீச்சல் தடாகத்தில் நீந்தி விளையாடுகிறது. அது மகிழ்வுறும் விதத்தில் இந்த அழகி வயலின் இசை வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# 'கௌபோய்' சிலைக்கு இறுதிக்கட்ட ஒப்பனை



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் திரைப்படவிழா நடைபெற்றது. விழாவில் காட்சிக்கு வைப்பதற்காக 52 அடி உயரமான கௌபோய் சிலை ஒன்று மரத்தில் உருவாக்கப்பட்டது. ஹொலிவூட் படங்களில் 'கௌபோய்' வேடத்தில் தோன்றி புகழ் பெற்ற நடிகர்கள் பலர் இருக்கின்றார்கள். மேற்படி சிலையை உயர்த்தி நிறுத்து முன் அதற்கு ஒரு மேஸ்திரி இறுதிக்கட்ட ஒப்பனை செய்யும் காட்சி.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



செப். 13, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் தனுஷ். சரியான விடையைக்கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

*1. என். சாந்தி, பாலத்தோப்பூர், தோப்பூர். 2.ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான், 31, கல்லூரி வீதி, திருகோணமலை. 3.ஆர்.ஜெகான், ரத்தோட்டை வீதி, நடுத்தோட்டம்.4.தி. கவிதா, 97/ 26, கனம்பிட்டிய வீதி, காலி. 5. வி.சுரேன். கே.கே.எஸ் வீதி, தாவடி.*

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

முன்பு சிறந்த நண்பர், தந்தை, சகோதரன் வேடங்களில் நடித்த இவருக்கு கதா நாயகன் ஆசை வந்ததினால் திரையுலகிலிருந்து காணாமல் போனார். மீண்டும் சமீபத்தில் அக்ஷன் கிங் அவர்களின் ஒரு படத்தில் நடிக்க இவருக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.



இந்த முகத்திற்குரிய நடிகரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் எழுதி கீழ்வரும் எங்கள் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள்

2 ஆவது லெப் மாலதி நினைவு நாள் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாக இன்று 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

இது தொடர்பான நிகழ்வுகள் கிளிநொச்சி மைதானத்தில் நடைபெறுகின்றன.

விடுதலைப் போராட்டம் வெறும் மண் மீட்புப் போராட்டமாக மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமான சமூக மாற்றத்தையும் இலக்காகக் கொண்டது. ஆகவேதான் போராட்டம் கட்டி வளர்க்கப்பட்ட ஆரம்ப காலகட்டத்திலேயே தேசியத் தலைவரால் பெண்களும் போராட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.



விடுதலைப் போராட்டத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் உள்ள உரிமைகளையும், அதற்கான தகமைகளையும் உலகத்தின் முன்னால் கம்பீரமாக நிலை நிறுத்திக் கொண்ட நாள் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள் ஆகும்.

காலம் காலமாக பிற்போக்குத்தனத்திற்குள் சிக்கியிருந்த பெண்கள் இருட்டுக்குள் இருந்து வெளியே வரவும், தம ' பலத்தைத் தாமே உணரவும், தமது பலத்தின் மூலமாக ஒரு தேசிய இனத்தின் ஆன்மாவைக் கட்டியெழுப்பும் பாணியில் பங்கேற்கவும் வடிவமைக்கப்பட்டது.

அடக்குமுறை நெருக்கடிகளுக்குள் வாழ்கின்ற உயிரினம் நிச்சயமாக புரட்சிக்காய் கிளர்ந்தெழுகின்ற மனோபலம் பெறும்.

அவ்வாறே தமிழீழ பெண்களும் ஏற்கனவே இருந்த சமூக அழுத்தங்களோடு இனவாத அடக்குமுறையையும் எதிர்கொள்ள வேண்டியவர்கள் ஆனார்கள். இந்த சூழ்நிலை தான் போராட வேண்டிய சூழ்நிலையை தமிழீழப் பெண்களுக்கு ஏற்படுத்தியது.



மாலதி

அதற்கான வாசலும் அகலத் திறந்து அவர்களை வரவேற்றது. காலத்தின் வேகமான ஓட்டமும், அதன் சேவையும் மாற்றங்களை உள்வாங்கத் தயாராகின. தவிர ஆளுமையின் தேவையும், அதன் வீச்சும் ஆண் பெண் என்ற பேதங்களை கீழே தள்ளிச் சாய்த்தன.

அந்த வகையில் தான் பல படிமுறை வளர்ச்சிகளை தாண்டி நிமிர்ந்த விடுதலைப் போராட்டத்தின் நிழலில் தமிழீழப் பெண்களின் வளர்ச்சியும் அசைக்க முடியாத தனி இடத்தைப் பெற்று உயர்ந்தது.

விடுதலைப் போராட்டத்தின் கள முனைகளிலும் சமூகத்திலும் பெண்கள் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளனர்.

எந்த ஒரு விடயத்திலும் கருத்தாட்டலே செயற்பாட்டைத் தீர்மானிக்கும். எனினும், தமிழீழப் பெண்கள் விடயத்தில் அவர்களின் செயற்பாடுகளே அவர்கள் பற்றிய சமூகத்தில் தவறான சில கருத்தாட்டல்களை மாற்றி அமைந்தன.

அதிலும் குறிப்பாக பெண்களின் ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கு அவர்களின் களமுனைச் செயற்பாடுகள் முக்கிய பங்கு வகித்தன. தன்னம்பிக்கை, தலைமைத்துவம், முடிவெடுத்தல் போன்ற பல ஆற்றல்களை போர்க்களம் அவர்களுக்குப் புகட்டியது. அது மட்டும் அல்ல உலகின் கவனத்தையும் அவர்கள் பக்கம் திருப்பியது.

அடம்பன் தாக்குதல்களுக்குப் பின்பு இந்திய இராணுவத்துடனான போரில் பெண் போராளிகளும் பல மோதல்களை எதிர் கொண்டனர்.

தமிழீழப் பெண்களின் முதல் வீரவித்து 2 ஆம் லெப் மாலதி அப்பொழுது தான் தன்னையும் விதையாக்கிக் கொண்டாள்.

தமிழீழப் பெண்களின் ஒட்டுமொத்தமான

(20 ஆம் பக்கம் பார்க்க)




வல்லிபுர ஆழ்வார் கோவிலில் முழங்கும் தவில் ஓசையினைப் போல் தெளிவாக ஒலிக்கும் டயலொக் GSM, தமது பரந்த தொலைத்தொடர்பு வலையமைப்பால் உங்களுக்கு சிறந்த சேவையை வழங்கும்.

இப்போது யாழ்ப்பாணம், பருத்தித்துறை, பலாலி, சாவகச்சேரி, கோப்பாய், மானிப்பாய் ஆகிய இடங்களுக்கு டயலொக் GSM வலையமைப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

டயலொக் GSM

எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்குவழி அரசியலே சமாதானத்துக்கு அச்சுறுத்தல்

## அஹிம்சை முதல் ஆயுதப்போர் வரை ஒரு மீள்பார்வை

*சமாதான முன்னெடுப்புகளும், சவால்களும் எனும் தொனிப் பொருளில் அண்மையில் திருகோணமலையில் கருத்தரங்கும், கலந்துரையாடலும் நடைபெற்றன.*

*இக் கருத்தரங்கில் அரசியல் ஆய்வாளர் அ.யோதிலிங்கம் உரை நிகழ்த்தினார்.*

*தமிழர்களின் அரசியல் வரலாற்றை நான்கு கட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு காலகட்டத்தின் போதும் ஏற்பட்ட விளைவுகள் பற்றி அவர் விளக்கினார்.*

*முதல் இரு கட்டங்கள் பற்றிய அவரின் உரையின் தொகுப்பு கடந்த வாரம் பிரசுரமாகி இருந்தது. ஏனைய இரு கட்டங்கள் பற்றிய தொகுப்பு இந்தவாரம் பிரசுரமாகிறது.*

மூன்றாவது கால கட்டம் 1949-1968

தமிழர் தாயகத்தை வரையறுத்து அத்தாயகத்துக்கு அதிகாரம் அளிக்கக் கோருகின்ற சமஷ்டிக்கோரிக்கை மூன்றாவது கால கட்டமான 1949-1968 காலகட்டத்தில் தமிழர் அரசியலில் அமைந்தது.

தமிழரசுக்கட்சி இக்கட்டத்தினை நகர்த்திய அரசியல் இயக்கமாக இருந்தது. தந்தை செல்வா இக்கட்டத்தினைச் சிறப்பாக நகர்த்திய தலைவராக விளங்கினார்.

இக்கட்டத்தில்தான் இன அரசியல் தமிழ்த் தேசிய அரசியலாக மாற்றம் அடைந்தது. குடாநாட்டுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தமிழர் அரசியல், வடக்கு - கிழக்காகப் பரந்தது. கோரிக்கைகளை, மனுக்களை அனுப்புதல், நாடாளுமன்ற விவாதங்களில் கலந்து கொள்ளுதல் என இருந்த தமிழர் அரசியல் வழிமுறைகள் மக்களை இணைத்த போராட்டமாக, அரசியல் வழிமுறைகளாக வளர்ச்சி அடைந்தன. மத, பிரதேச, சாதி வேறுபாடுகளையும் மேவி தமிழர் தேசியம் வளர்ச்சி அடைந்தது.

1956ஆம் ஆண்டுகாலிமுகத்திடலில் சத்தியாக்கிரகப் போராட்டம், 1957இல் திருமலை யாத்திரை, 1961இல் வடக்கு - கிழக்குத் தழுவிய சத்தியாக்கிரகப் போராட்டம் என மக்களின் பங்குபற்றுதல்களும் போராட்டங்களும் எழுச்சி அடைந்தன.

மறு பக்கத்தில் போராட்ட நிர்ப்பந்தங்கள் காரணமாக பண்டா- செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி - செல்வா ஒப்பந்தம்(1965) என்பன கைச்சாத்திடப்பட்டன. இந்த ஒப்பந்தங்கள் அதிகார இயங்கு நிலையில் ஒரு பன்மைத் தன்மையைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தென்னிலங்கை அரசியல் அதற்குத் தயாராக இருக்கவில்லை. இதன் விளைவு ஒரு ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. மற்றையது உறை நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஒப்பந்தங்களின் தோல்வி, போராட்டங்கள் மிருகத்தனமாக அடக்கப்பட்டமை என்பன தமிழ் மக்களுக்கு இலங்கை அரசமைப்புக்குள் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கையை இழக்கச் செய்தன. அவர்கள் இலங்கை அரசமைப்பில் இருந்து விடுபட்டு ஈழப் போராட்டத்தினை முன்னெடுக்க முனைந்தனர். இது தமிழர் அரசியலில் நான்காவது கட்டமானது.

### நான்காவது கட்டம் (1968க்குப்பின்னர்)

இப்போராட்டம் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதாக இருந்தது. இதனால் நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகி ஆயுதப் போராட்டத்துக்குச் சென்றதாக இருந்தது.

1972 அரசமைப்பு இதனை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது. இந்த அரசமைப்பு முழுமையாக தமிழர்களை அந்நியப்படுத்தியது. பெயரளவில் தமிழர்களுக்குக் காப்பீடாக இருந்த 29ஆவது சரத்து நீக்கப்பட்டமை, துணைக்காப்பீடுகளாக இருந்த நீதிப் புனராய்வு அதிகாரம், பிரித்தானிய கோமறைக்கழகத்துக்கு (பிரிவின் கவுன்ஸிலுக்கு) முறையிடும் உரிமை என்பன நீக்கப்பட்டமை அதிகார வர்க்கத்தின் ஒற்றைத்தன்மையைக் காட்டியது. இன ரீதியான அடையாளப்படுத்தலுக்கு அரசமைப்பு அந்தஸ்துக் கொடுத்து, மேலும் சிங்கள மொழி, பௌத்த மதம் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதன் மூலம் தமது அடையாளங்களுக்கு அப்பால் என்று பெரும்பான்மையினரால் சிறுபான்மை இனங்கள் புறந்தள்ளப்பட்டன.

1972ஆம் ஆண்டு அரசமைப்பு இலங்கை அரசு மீது தமிழ் மக்களுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் இழக்கச் செய்தது. இதுவும் ஈழப் போராட்டம் மேலும் எழுச்சியுறச் செய்தது.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் அரசமைப்பு எழுச்சியுற்ற போராட்டத்தை நசுக்க முனைந்தது. ஆறாவது திருத்தச் சட்டம் அதனை முதன்மைப்படுத்தியது. இதற்கு மேலாக நாடாளுமன்றம் பிரசவித்த பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழ் மக்களுக்கு கூட்டுத்தண்டனையை வழங்க வழிகோலியது. இவற்றை விட பன்மைத் தன்மையைத் தடுக்கும் முயற்சிக்கும் காரணமானது.

மறுபுறத்தில் புலிகளினால் ஆயுதப் போராட்டம் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. இது தேசியத்திலிருந்து சர்வதேசத்துக்கும் பரவியது. இதன் தாக்கம் மாவட்ட அபிவிருத்திச் சபைகள், மாகாண சபைகள் என்பவற்றைத் தோற்றுவித்தது. ஆயினும் தமிழர்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படவில்லை.

இவ்வாறு தமிழர் அரசியல் சர்வதேசம் வரை சென்றதால் தான் சர்வதேச சமூகத்தின் தலையீடு இடம் பெற்றது. இது யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்தது. சமாதானத்துக்கான அடித்தளமும் போடப்பட்டது. இறுக்கமடைந்து காணப்பட்ட ஒற்றைத் தன்மை பன்மைத் தன்மையாவதற்கு முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதன் போது பல்வேறு சவால்கள் எழுந்தன.

முட்டுக்கட்டையுடன் நகரும் சமாதானச் செயல்திட்டத்தின் வளர்ச்சிக்கட்டங்களை ஆராய வேண்டியுள்ளது. யுத்தத்தினை நிறுத்துதல், அழிவுகளைச்சீர்செய்தல், யுத்தம் ஒன்று எதிர்காலத்தில் வருவதைத் தடுத்தல் என்பவற்றைச் சமாதான செயற்பாடுகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

இந்த நோக்கங்களை யுத்தத்தை நிறுத்துதல், சமாதானத்துக்கான அடித்தளத்தினை உருவாக்குதல், இயல்பு நிலைக்கு கொண்டுவந்து நிரந்தரத் தீர்வு காணல் என்ற மூன்றுகட்டங்களினூடாக அடைந்து கொள்வதே சர்வதேச ரீதியாகப் பின்பற்றப்படும் வழிமுறைகள் ஆகும்.

யுத்தத்தினை நிறுத்துவதும், சமாதானத்துக்கான அடித்தளத்தினை உருவாக்குவதும் என்ற முதலாவது கட்டத்தில் யுத்தத்தில் ஈடுபட்ட இரு தரப்பினரினதும் உண்மையான வலு நிலைகள் அங்கீகரிக்கப்பட்டு இருதரப்பினரும் சமத்துவப் பங்காளிகள் என ஏற்றுக்கொள்ளப்பட்டே யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

இன ரீதியான விடுதலைப் போராட்டங்கள் ஆரம்ப கட்டங்களில் இருக்கின்ற போது சர்வதேசசமூகம் தலையிடுவதில்லை. மாறாக விடுதலைக்காகப் போராடிய ஒரு தரப்பு ஒரு அரசினை அமைக்கக்கூடிய பலமான நிலையில் இருக்கின்ற போது தான் தலையிடுகிறது. ஆட்சி அதிகாரத்தில் நியாயமான வகையில் போராட்டத்தரப்பு பங்குகொள்வதற்கான வாய்ப்பினையும் உருவாக்கிக் கொள்கிறது. இதற்காகத் தான் யுத்த நிறுத்தம் மேற்கொள்கிற போது இரு தரப்புக்களினதும் வலுநிலைகளையும் அங்கீகரித்து இருதரப்புக்கும் சம அந்தஸ்துக் கொடுக்கிறது. இரு தரப்பினதும் வலு நிலைகளை அங்கீகரித்தே யுத்த நிறுத்த நிபந்தனைகளும் உருவாக்கப்படுகின்றன.

யுத்த நிறுத்த நிபந்தனைகளை உருவாக்குதல், யுத்தத்தினை நிறுத்துதல், இந்த நிபந்தனைகளைக் கண்காணிக்கும் முறைகளை உருவாக்குதல், இரண்டாம், மூன்றாம் கட்டப் பணிகளுக்கு பெயரளவில் ஒத்துக்கொள்ளுதல் என்பவற்றுடன் முதலாவது கட்டம் முடிவடைகிறது.

இரண்டாவது கட்டத்தில் யுத்த அழிவுகளைச் சீர்செய்வதற்கான பணிகள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. விடுதலைக்காகப் போராடிய தரப்பே இங்கு அதிக அழிவுகளைச்சந்தித்து இருக்கும். இது சீராவதன் மூலமே பாதிக்கப்பட்டோருக்கு நம்பிக்கை ஏற்படுகிறது. மக்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் புனர்நிர்மாணப்பணிகள் ஒப்படைக்கப்படுகின்றன. இதன் மூலம் சில தற்காலத் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. இதுவே இடைக்கால நிர்வாகம் எனப்படுகிறது. எனவே இரண்டாவது கட்டத்தில் பிரதான செயற்பாடு யுத்த அழிவுகளைச் சீர் செய்யும் வகையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இடைக்கால நிர்வாகத்தினை உருவாக்கிக் கொடுப்பதேயாகும்.

நிரந்தர தீர்வுகான பணிகள் மூன்றாவது கட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. அரசமைப்பு ரீதியாக போராட்டத்தரப்பு அதிகாரப் பங்கீட்டினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு எற்படுகிறது. ஒரு அரசமைப்புக்குள் இதற்கு சமஷ்டி ஆட்சி முறையே சிபார்சு செய்யப்படுகின்றது. முரண்பாட்டின் தன்மை, விடுதலைப்போராட்டத்தின் வலுநிலை என்பவற்றின் அடிப்படையில் சமஷ்டி ஆட்சியில் அதிகாரப் பங்கீடு நிர்ணயிக்கப்படுகிறது.

இலங்கையின் சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை முதலாவது கட்டம் நிறைவு பெற்றுள்ளது. யுத்த நிறுத்தம் முதல் புரிந்துணர்வு உடன்படிக்கை வரை இதைச் சொல்லலாம். இதற்கான பேச்சுகளும் இதனுள் அடங்கும்.

இரண்டாவது கட்ட நகர்வே தற்போது சவாலாக உள்ளது. இதற்கு விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி யோசனையை முன்வைத்தனர். அதனை அடிப்படையாக வைத்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்கலாம். ஆனால், தென்னிலங்கை அரசியல் அதற்குத் தயாராக இல்லாமையே பின்னடைவுக்குக் காரணமாக இருக்கின்றது. இது இரண்டாவது நகர்வில் தளர்வையும் முன்னையதை தக்க வைத்துக் கொள்வதில் கடின நிலையையும் காட்டுகிறது. சர்வதேச சமூகம் சிரமப்பட்டே பேணுதலை மேற்கொண்டு வருகின்றது. சர்வதேச சமூகம் இல்லையேல் சமாதானம் குழம்பியிருக்கும். இந்நிலையில் மூன்றாவது கட்டமான நிரந்தரத் தீர்வை எட்டுவது நினைக்க முடியாததாக இருக்கும்.

இரண்டாவது கட்டத்தினை எப்படி நகர்த்துவது? அதாவது இடைக்கால நிர்வாக சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பதே உண்மையில் இன்றைய சவால். இதற்குரிய மார்க்கங்களையும்? துணை மார்க்கங்களையும் சமாதான விரும்பிகள் கண்டாக வேண்டும்.

சமாதானத்துக்கு தோன்றியுள்ள பிரதான சவால் தென்னிலங்கை அரசியல் தான். இதனை விளங்கிக் கொள்வதற்கு சிங்கள சமூக உருவாக்கத்தையும், அதனாலான அரச உருவாக்கத்தையும் நாம் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிங்கள சமூகம் அதன் பௌத்த கருத்தில் உருவானது. இதன் அடிநாதமாக இலங்கைத்தீவு பௌத்தர்களுக்கு என்கிறது.

ஏனையவர்கள் வேண்டுமானால் வாழ்ந்து விட்டுப் போகலாம். ஆட்சி அதிகாரங்களில் பங்கு எடுக்க முடியாது என்ற சிங்கள சமூகத்தின் கருத்து நிலைகள் அரசியல் இலாபம் கருதி கட்டி எழுப்பப்படவில்லை. மாறாக மரபு ரீதியாக வளர்க்கப்பட்டவை. மத நம்பிக்கைகள், ஐதீகங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலே இது குறித்த வரலாறுகள் எழுதப்பட்டன. பௌத்த நிலையங்களின் தலைமைகள் இதற்கு உதவியாக அமைகின்றன. இதனைப் பேணிப்பாதுகாப்பவர்களாக மதகுருமார்கள், சிங்கள ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள் என சிங்களவர்க்கம் இருக்கிறது. இதற்கு மேல் குந்திக்கொண்டவர்களாக சிங்கள அரசியல் வாதிகள் காணப்படுகின்றனர்.

ஆனால், மறுபுறத்தில் போர் – இதனால் சர்வதேச நிர்ப்பந்தம், திறந்த பொருளாதாரத் தேவை, நெருக்கடிகள் என்பன சமாதான செயற்பாட்டுக்கு நிர்ப்பந்தித்தன. இது அரசியல் வாதிகளுக்கு ஒரு இருண்ட நிலை. ஆட்சி அதிகாரத்தினைக் காப்பாற்ற சமாதான செயற்பாட்டுக்குச் செல்ல வேண்டிய நிலை. அதேவேளை அரசியல் இருப்பினைப்பாதுகாக்க சமாதானத்துக்கு எதிராகவும் செயற்பட வேண்டும்.

இத்தகைய இரண்டக நிலையினால் ஆட்சிக்கு வருபவர்கள் சமாதான செயற்பாடுகளில் நேர்மையாக ஈடுபடுவதில்லை. மாறாக எதிர்த் தரப்பினை பலவீனப்படுத்துவதில் அக்கறை காட்டினர். இரு பிரதான கட்சிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இதன் வெளிப்பாடாகவே ஐக்கிய தேசியமுன்னணி விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சர்வதேச இராணுவ வலைப்பின்னலை உருவாக்குவதில் கவனம் செலுத்தியது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கிழக்கில் பிளவினை ஏற்படுத்தி புலிகளைப் பலவீனப்படுத்துவதில் கவனம் செலுத்தியது. இந்தக் குறுக்கு வழி அரசியல் ஒருபோதும் சமாதான முன்னெடுப்புக்கு உதவப்போதில்லை.

சமாதான முன்னெடுப்புச் சார்பாக மக்களைத் திருப்ப வேண்டிய பணிகளை இரு கட்சிகளும் செய்யவில்லை. மேலும், சிங்கள மக்களை அக்கருத்து நிலையில் இருந்து விடுவித்திருக்க வேண்டும். சமாதானப் பிரசாரத்தை அவர்கள் மத்தியில் நிறுவனமயப் படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், இரு கட்சிகளும் பௌத்த சிங்களக் கருத்துகளோடு மோதுவதற்குத் தயாராக இருக்கவில்லை. சில சந்தர்ப்ப செயல்களைச் செய்து சமாதான செயற்பாட்டில் முதல் கட்டத்தினை ஐ.தே. முன்னணி தாண்டியது. அதற்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசு தான் சென்ற தேர்தலி[illegible] அடைந்த தோல்வி. ஐக்கிய மக்கள் சு[illegible]திரக்கூட்டமைப்பு சமாதான செயற்பாட்டுக்குச் செல்ல முடியாமலும் அரச அதிகார இருப்பினைக் காப்பாற்ற முடியாமலும் திணறிக்கொண்டிருக்கிறது. பங்காளிக் கட்சியான ஜே.வி.பி யின்நிலை வேறு. இனவாத தென்னிலங்கை அரசியலின் தற்போதைய நிலை தான் இது.

இந்த நச்சு நிலையை விடுபடச் செய்வதே சமாதான விரும்பிகள் செய்ய வேண்டிய முதலாவது பிரதான பணி.

சமாதான முன்னெடுப்புக்கான முதற் கட்டமாக மத்தியில் உறுதியான அரசாங்கம் இருக்க வேண்டும். இரு பிரதான சிங்களக் கட்சிகளின் உறுதியான உடன்பாடே இதற்கு வழி கோலும். சர்வதேச சமூகம் இதற்காக அழுத்தம் கொடுக்கலாம்.

ஆனால், இரு கட்சிகளும் உடன்பாட்டுக்கு வருதல் தொடர்பாக தமிழ், முஸ்லிம், மலையக மக்களிடம் ஒரு அச்சமும் இருக்கிறது. தென்னிலங்கைச் சக்திகள் ஒன்[illegible]ணைந்து தம்மை ஒதுக்கிவிடுவர் என்ற [illegible]சமே அது. இந்த அச்சத்தை நீக்குவதும் ச[illegible]வதேசத்தின் கடமை ஆகும்.

பிரதான சவால்களுக்குப் புறம்பாக துணைச்சவால்களையும் புறந்தள்ளுவதற்கு இல்லை. இதில் பிரதானமானது, சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக முஸ்லிம் தரப்பின் நிலைப்பாடுகள்.

இதற்கான நடைமுறைச் செயற்பாடுகள் சற்றுக்கடினமாக இருக்கலாம். ஒரு பக்கத்தில் ஏகத் தன்மை கொண்ட விடுதலைப் புலிகள் இயக்கமும், மறு பக்கத்தில் தேர்தல் போட்டி அரசியலுக்கு முகம் கொடுக்கும் முஸ்லிம் கட்சிகளும் இருக்கும் போது இதனை முன்னெடுப்பது கடினமாகத் தான் இருக்கும். ஆனால், அவசியம் என்பதை வரலாறு நிருபித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையேயான ஒப்பந்தம் இதற்கு அடித்தளமாக உதவலாம்.

இரண்டாவது துணைச்சவால், இந்தியா ஏனைய சவால்களை முடிவுக்குக் கொண்டு வந்தால் அதன் சவாலைச் சமாளிப்பது கடினமாக இருக்காது. இலங்கையின் கூட்டு உத்தரவாதம் வழங்கலின் மூலம் இதனைத் தவிர்க்க முடியும். இதற்கு இந்தியாவும் பரஸ்பரம் நலனுக்குத் தயாராக வேண்டும். இதற்கான அழுத்தங்களை சர்வதேச சமூகம் செய்ய வேண்டும். மேற்படி கூற்றுக்கள் தமிழ்த்தரப்புப் பார்வை என்று கூறலாம். இந்த வகையான பார்வையை ஏனைய சமூகங்களும் முன் வைக்க வேண்டும். இதற்கு அப்பால் சர்வதேச சமூகமும் முன் வைக்க வேண்டும்.

இத்தகைய பல்வேறு பார்வைகளிலிருந்து பொதுவான உண்மைகளைக் கண்டு கொள்ள முடியும். இதுவே, தீர்வுகளைக் கொண்டுவர உதவக் கூடும்.

-எஸ். எஸ். ஆர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் வேதாளம்



'செய்தியுடன்வருகிறேன்' என்று கூறி விட்டு சென்றவேதாளத்தார் இத்தனை நாளாகியும் எதுவித தொடர்பும் தரவில்லையே...! மற்றவர்கள் போல் 'வெட்டுகிறேன் – பிடுங்குகிறேன்' என்றுவிட்டு பத்தோடு பதினொன்றாக இவரும் கம்பிநீட்டிவிட்டார் போலும். 'இனி வேறு யாரையும் தேட வேண்டியது தான்' என்று அலுத்து–சலித்து இருந்தபோது, திடீரென... விசுக் சப்தம். நன்றாக முழுகி, படிய தலை வாரி, அசத்தலான ஆடை அணிந்து... கழுத்திலே ரை கட்டி... ரிப் ரொப்ஆசாமியாக ஒரு செய்தியாளர் தோரணையில் எங்கள் முன் நின்றார் வேதாளம். அன்று பார்த்ததுக்கு இன்று கொஞ்சம் அழகாக எடுப்பாகத் – தெரிந்தார்.

''எங்கே ஐயா போனீர்? அன்று போனவர் தான். பின்னர் தகவல் எதுவும் இல்லையே? எப்போ வருவீர் என்று ஒரு தகவல் தந்திருக்கலாம் தானே'' என்றோம்.

''எப்போவருவான், எப்படி வருவான், எவ்வாறு வருவான் என்றெல்லாம் சொல்ல மாட்டான் இந்த வேதாளம். ஆனால், வர வேண்டிய நேரத்தில் கரக்டாக வந்தே தீருவான்;'' என்று ரஜனியின் 'பஞ்ச்' வசனம் பேசினார் வேதாளம்.

''ஆஹா, நீர் ரஜனி ரசிகரோ? சரி... சரி... எடுத்து வந்த விடயங்களை அள்ளிவிடும் பார்ப்போம்'' என்றோம்.

''அங்கு இங்கெல்லாம் சுற்றி வந்தேன்'' என்று கதையை வளர்த்தார் வேதாளம். ''விஷயத்துக்கு வாருமய்யா, தலைக்கு மேலே வேலை இருக்கிறது'' என்றோம்.

''என்ன முடிவெட்டப் போகப்போகிறீர்களா?'' என்றார்.

அவரது பழைய ஜோக்கைக்கேட்டுச் சிரிப்பு வரவில்லை. எரிச்சல் தான் வந்தது. ' சரியானலொள்ளுப் பிடித்த வேதாளம் போலும்' என்று நினைத்துக்கொண்டோம்.

'தொடர்ந்தார் வேதாளத்தார்.

''தமிழ்க்கூட்டமைப்பு எம்.பி ஒருவரை மாற்றப் போவதாகக் கதை என் காதில் விழுந்தது. எனவே, கூட்டமைப்பின் எம்.பிக்கள் சிலரைச் சந்தித்து இதுபற்றிக் கேட்டுப்பார்த்தேன்'' என்றார் வேதாளம்.

''ஆமாம், நாமும்கேள்விப்பட்டோம். ஈழத்துக்கு அரசனான எம்.பியை மாற்றி பிரபல நடிகரின்பெயர் கொண்ட வரை எம்.பி ஆக்க சிலர் நினைப்பதாக, கதை அடிபடுகிறது தான்'' என்றோம்.

''பெரும்பாலான கூட்டமைப்பு எம்.பிக்கள் ஈழத்துக்கு அரசனானவர்மீது வெறுப்பிலே தான் இருக்கிறார்கள். 'யாருடன், எப்போ, என்னத்தை, எப்படிப்பேசுவது என்று தெரியாது. செல்லுமிடங்களிலெல்லாம் சங்கடத்தை விலைக்கு வாங்குகிறார்' என்று புறணிபாடுகிறார்கள். 'அப்படியானால் உங்கள் கூட்டத்தை கூட்டி ஆளை மாற்ற வேண்டியது தானே?' என்று கேட்டேன். 'நாங்கள் அப்படி திடீர்முடிவு எடுக்க முடியாது. எமது றிமோட்களின் அனுமதி பெற வேண்டும். அவர்களிடம் கேட்டிருக்கிறோம். கவனிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்' என்றனர் கூட்டமைப்புக்காரர்கள்'' என்றார் வேதாளம்.

''அப்படியா! என்ன ஆளய்யா நீர்? Investi gation Journalism தெரியாத ஆளாக இருக்கிறீர். அவர்கள் சொன்ன் றிமோட்டுகளுடன் உடனடியாக தொடர்பு கொண்டு இது பற்றி கேட்டிருக்கவேண்டியது தானே?'' என்றோம் எரிச்சலுடன்.

''கேட்டேனே...! உடனடியாகவே தொடர்பு கொண்டு கேட்டேனே'' என்றார் வேதாளம்.

''ஓ கேட்டுவிட்டீரா..? Sorry அவசரப்பட்டுத் திட்டிவிட்டோம். மன்னித்துக்கொள்ளும்'' என்றோம்.

மனதுக்குள் வேதாளத்தார் உற்சாகமாகத் தான் வேலை செய்கிறார் என்பதை நினைத்துச் சந்தோஷப்பட்டுக்கொண்டோம்.

''சரி.. அவர்கள் என்ன சொல்கிறார்கள் இதுபற்றி''? என்று கேட்டுவைத்தோம்.

''ஈழத்துக்கு அரசனானவர் காலம் காலமாகத் தமிழினத்துக்கும்– விடுதலைப்போராட்டத்துக்கும் விசுவாசமாகச் செயற்பட்டதற்கு தலைவர்பிரபாகரன், அவருக்கு வழங்கிய வெகுமதி அந்த நியமன எம்.பி பதவி. அதனை திருப்பிப்பறிக்கும் எண்ணம் எமக்கு இல்லவே இல்லை என்றார் அந்த றிமோட் பிரதிநிதி'' என்றார் வேதாளம்.

''அத்துடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் தொடர்பில்கொஞ்சம் அதிருப்தியிலேயே இருக்கிறார்களாம் அந்த றிமோட் பிரதிநிதிகள்'' என்று குண்டு ஒன்றைத் தூக்கிப்போட்டார் வேதாளம்.

''என்ன? அவர்கள்தயவிலே வென்று எம்.பி ஆனவர்கள் பற்றி அவர்களுக்கே அதிருப்தியா? என்னய்யாகுழப்புகிறீர்?'' என்றோம்.

''ஆம். கூட்டமைப்புக்காரர்களில் பழைய கட்சிக்காரர்களும், பழைய தமிழ்க் குழுக்காரர்களும் Double game விளையாடுவது தெரிந்துவிட்டது அவர்களுக்கு. இந்தியாவுக்குத் தலை, இலங்கை அரசுக்கு வால், அவர்களுக்கு உடம்பு என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பகுதிகளாகக் காட்டுகிறார்களாம் என்று கடுப்பிலேஇருக்கிறார்கள் அவர்களை உருவாக்கிவிட்டவர்கள்'' என்றார் வேதாளம்.

''ஆமாம் தமிழ்க்கூட்டமைப்பாளரின் நடவடிக்கைகளைப் பார்த்து எமக்கும் கொஞ்சம் சந்தேகம் தட்டிய விடயம்தான். இது..சரி. நீர் தொடரும்'' என்றோம் நாம்.

''இவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஈழத்தின்அரசன் இடைஞ்சலாக இருக்கிறாராம். அதனால் தான் அவரைக் கழற்றிவிடப் பார்க்கிறார்கள். அது நடக்காதுஎன்று ஆணித்தரமாகச் சொல்கிறார்கள் அவர்கள். அதுமட்டுமல்ல ஈழ அரசன்தனியார் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி மலையகக் கட்சிக்காரர்களுடன் சில உறைக்கக்கூடிய கருத்துக்களைச் சொல்லி வாதாடினார். அந்த நிகழ்ச்சி அந்த வாரத்தில் ரணகளமாக மாறியது. ஆனால், அடுத்தவாரத்தில் அதே நிகழ்ச்சியில் கலந்து கொண்ட முன்னாள் தமிழ்க்குழு உறுப்பினர் மலையகக் கட்சிக்கு ஆதரவாகவும், ஈழ அரசர்கூறிய கருத்துக்கள் தவறானவை என்பது போலவும் விமர்சனம் செய்தாராம். இதுவும் அவர்களுக்கு கவலையைக் கொடுத்திருக்கிறது. திருந்தி விட்டார்கள் என்று தான் நினைத்தோம். திருந்தவே மாட்டார்கள் போல் தான்தெரிகிறது. என்று வருத்தம் தெரிவிக்கிறார்கள் அவர்கள்'' என்றார்.

''அப்படி என்றால் இவர்களைக் கொஞ்சம் தட்டி வைப்பது என்பது அவர்களுக்கு கஷ்டமானகாரியமல்லவே?'' என்றோம் நாம்.

''ஆமாம். இவர்களது நடவடிக்கைகளை கையாளும் முக்கிய தலைவர் வெளிநாடு சென்றிருக்கிறார். அதுவரை இந்த கூட்டமைப்புக்குழுவினரின் நடவடிக்கைகள் ஆழமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எமது மொழிக்குச் செல்வமான அந்தத்தலைவர் நாடு திரும்பியதும் இவர்கள் அழைக்கப்படுவார்கள். நல்லடோஸ் காத்திருக்கிறது?'' என்றார் வேதாளம்.

''சரி வேறு விடயத்திற்கு தாவுமேன்'' என்றோம்.

'வேறு என்ன விடயம்?' என்று நீட்டி முழக்கி சிந்தித்தவரிடம், ''ஜனாதிபதி காட்டிய சமாதானம் மற்றும் மீள் இணக்கப்பாடு மீதான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் கூட்டம் பற்றி ஏதாவது உண்டா?'' என்று கேட்டோம். எனது கையிருப்பு இவ்வளவுதான் என்று கூறிவிட்டு [illegible]





## வீறாப்பு பேசியவரின் வீம்பு புஸ்வாணமானது

''எல்லாத் தொழிற்சங்கவாதிகளுமே தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றி விட்டனர். அவர்களுக்கு விமோசனம் பெற்றுக் கொடுக்க எங்களால் மட்டுமே முடியும். ஜனாதிபதியிடம் சண்டை பிடித்தாவது சம்பள உயர்வைப் பெற்றுத் தருவோம்'' என்று வீறாப்புப் பேசினார் போஸ்டர் சந்திரன்.

இவருடைய பேச்சுக்களும், அறிக்கைகளும் வெறும் வெற்று வேட்டுக்கள் என்பதும் ஆட்களை மயக்கும் பம்மாத்து என்பதும் அப்போது வெளிப்பட்டுவிட்டனவாம். இவர் மலையகத்தில் கால் ஊன்றுவதற்காக தொழிலாளர்களை மயக்கி ஒரு மாயா ஜாலம் காட்டவே இப்படி நாடகம் போட்டுள்ளார் என்றும் கூறுகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்க வேண்டும் என்று கோரியும் இவ்விடயத்தில் அரசாங்கம் தலையிடவேண்டும் என வலியுறுத்தியும் அட்டனில் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றதாம்.

மலைச் சந்திரனின் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 12 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டனவாம்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு போஸ்டர் சந்திரனுக்கும் அழைப்பு அனுப்பட்டதாம். அவருடைய ஆதரவாளர்கள் எல்லோரும் வந்து கலந்து கொள்வார்கள் என்று ஆவலுடன் இருந்தார்களாம். ஆனால், அவரும் வரவில்லையாம். அதே நேரம் ஆதரவளர்களையும் போகவேண்டாம் என்று அறிவித்துவிட்டாராம். இது என்னடா மேடையில ஏறிபெரிய பெரிய பிரசங்கம் வைத்தார், வீறாப்புப்பேசினார். இப்பொழுது என்னவென்றால் இப்படி பல்டி அடித்துவிட்டார்.

வழமையாகவே சேவல் கொடியார்கள் தான் இப்படிக் காலை வாரிவிடுவார்கள். காட்டிக்கொடுப்பார்கள்.

ஆனால், சிவப்புக் கொடியைப்பிடித்துக் கொண்டு போஸ்டர் ஒட்டும் சந்திரனின் வீரம், புரட்சி எல்லாம் எங்கோ ஓடிவிட்டனவாம். மற்றவர்கள் மீது வசைபாடுவதில் கெட்டிக்காரான போஸ்டர் சந்திரனும் இப்படிக்காலை வாரிவிடலாமா?

தோட்டத் தொழிலாளர்களையே இப்படி ஏமாற்றும் போஸ்டர் சந்திரனை நம்பி பத்தனை கலைக்கூட்டத் தம்பிமார் சிலர் அங்கும் போஸ்டர் ஒட்டப்பார்த்தனராம். இப்போது வேஷம் கலைந்து விட்டதால் பத்தனை தம்பிமார் விழித்துக்கொண்டனராம்.

பாவம் போஸ்டர் சந்திரனின் வீறாப்பும், வீம்பும் புஸ்வாணமாகிவிட்டனவாம்.

## வாய்ச் சவடால்களால் வந்த வம்பு

கைவாரு ராஜா எனக்கூறப்படுபவரும், கம்பளையில் வெற்றி நாயகன் எனக் கருதப்படுபவருமான அந்த அமைச்சர் அதிஉயர் மன்றில் கம்பீரமாகச் சென்றார். அவரின் பின்னால் ஒரு கூட்டம்.

''நாங்கள் சொன்னால் சொன்னது தான். இப்ப பாருங்க 40 ரூபாவுக்கு சம்பா, 27 ரூபாவுக்கு நாடு. கப்பல் கப்பலாக இறக்கி விட்டோம்'' என்று சவடலாகக் கூறினார்.

''என்ன சார், நேற்று மாலைதான் ரேடியோவில் சொன்னார்கள், அரிசி வந்துவிட்டது என்று. சதொசவிலும், கூட்டுறவுக்கடைகளிலும் குறைந்த விலையில் அரிசி கிடைக்கும் என்று பிரசாரப்படுத்தினார்கள். நாங்கள் கடை திறப்பதற்குமுன் கடைவாசலில் நின்றோம். ஆனால், கடை திறந்தவுடன் அவர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா?'' என்னர் கூட்டத்தினர்.

''கடைக்காரர்கள் அப்படி என்ன கூறினார்கள்?'' இது அமைச்சர்.

''இப்பொழுது தான் வருகின்றீர்களா எல்லா, அரிசியும் முடிந்துவிட்டது. இனி அடுத்த கப்பல் வந்தால்தான் அரிசி' என்றனர். அப்படியானால் ஒரே இரவில் இரவோடு இரவாக அரிசியை விநியோகித்துவிட்டனரா? ஊழல் மோசடியை ஒழிப்போம் என்று மார்தட்டினீர்கள். ஆனால், உங்களுடைய சகாக்கள் இரவோடு இரவாக கறுப்புச் சந்தையில் தனியார் கடைகளுக்கு ஏற்றிவிட்டனர். இதுதான் உண்மை'' என்று போட்டுஉடைத்தனர்.

''என்ன செய்வது நீங்களும் அரிசி முடியும் முன்போய் இருக்கவேண்டும் இல்லையா?'' என்று கேட்டவர், ''கவலைப்படாதீர்கள் கூடிய விரைவில் அடுத்த கப்பல் வந்துவிடும்'' என்றாராம்.

அருகில் இருந்த போஸ்டல் காரர் ஒருவர் இதற்குத்தான் அரிசி இறக்கவேண்டாம் என்றோம். இப்போது மாட்டிக்கொண்டார் என நக்கல் அடித்தனராம். ஜெயமானவரின் வாய் சவடால் வம்பில் முடிந்துவிட்டதாம்.


உ
சிவமயம்
ஓம் சங்கராய பரணம்





தமிழ் உலக மக்களுக்கு இன்றும், என்றும் எனது பரிபூரண துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.
தெய்வத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை, உங்கள் குறைகள் என்ன?
குடும்பப் பிணக்கா, பிரிந்தவர் ஒன்று சேர வேண்டுமா? உங்கள் பிள்ளைகள் நல்வாழ்வு பெற வேண்டுமா? இன்னும் உங்கள் குறை நிறைகளுக்கு.

வெளிநாட்டவருக்கு விஷேட சலுகை உண்டு
இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை.

பேராசிரியர். டாக்டர். பி.கே. சாமி.
இல. 62, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு – 13.
தொலைபேசி: 2342436, 2342464, 2431137, 2470615. பெக்ஸ்: 0094112344831

பலராது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...
செப்டெம்பர் 22 - 27 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

வவுனியாவில்...
ஒக்டோபர் 09 - 10 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...
ஒக்டோபர் 12 - 17
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel No. 021 2223181
021 222 5399
பதிவுகளை முன்கூட்டியே செய்துகொள்ளுங்கள்

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

ஒக்டோபர் 10 – 16, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com

## பிசுபிசுத்துப் போன ஆலோசனைக் கவுன்ஸில்

'தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயார், புலிகள்தான் பேச்சுவார்த்தைக்கு வர மறுக்கின்றார்கள்' என்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரசாரம் செய்து வந்த ஜனாதிபதி கடைசியாக அவிழ்த்து விட்ட 'ஸ்ரண்ட்' தான் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்.

புலிகளுடன் சமாதானப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் அனைத்துக் கட்சிகளுடனும் பேசி அவற்றின் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவே தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் நிறுவப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இம்மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற இதன் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சகலகட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால், ஆளும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மட்டுமே இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டதால் ஜனாதிபதியின் திட்டம் பிசுபிசுத்துப் போய்விட்டது.

பிரதான கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகள் இந்த கூட்டத்தை பகிஷ்கரித்திருந்தன.

''இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள். ஐக்கிய தேசியக் கட்சி ஆதரிக்கும்'' என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறிவிட்டார். இந்த ஆலோசனை கவுன்ஸில் தேவை அற்றது என்றும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவையும் இதே நிலைப்பாட்டையே வெளியிட்டன. அதாவது சமாதானத்தை குழப்புவதற்கும், தாமதிப்பதற்கும் தான் தேசியக் கவுன்ஸில் என்பதே இவற்றின் நிலைப்பாடு.

20 வருட காலமாக புரையோடிப் போய் இருக்கும்இலங்கையின்இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண வேண்டுமானால் தென்னிலங்கை அரசியல் சக்திகள் ஒன்றுபட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் கிடையா.

ஏனெனில் கடந்த காலங்களில் ஒரு கட்சி செய்ய முயற்சிப்பதை மற்றைய கட்சி குழப்பி அடிப்பதையே இலங்கை வரலாறு கொண்டிருந்தது.

ஆனால், தென்னிலங்கை சக்திகளின் ஒற்றுமையின் நோக்கம் தான் இங்கு பிரச்சினையாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப் படக் கூடாது என்பதற்காக தென்னிலங்கைச் சக்திகள் ஒன்றுபடுவதை அனுமதிக்க முடியாது.

ஜனாதிபதியால் சமீபத்தில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்ட தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலும் இத்தகையதே என்று சந்தேகம் கொள்ளவைக்கிறது.

ஜனாதிபதியின் கூற்று இதனை நிரூபிக்கிறது. தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அமைக்கப்பட்டது தொடர்பாக ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய இலங்கைக்குள் நாட்டின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் பெரும்பான்மை மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை ஏற்படுத்துவதே தனது நோக்கம் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டில் உள்ள எந்த சமூகத்தையோ அல்லது கட்சியையோ, ஒதுக்கி விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்றும் ஜனாதிபதி கூறி இருக்கிறார்.

ஆகவே, தேசிய ஆலோசனை கவுன்ஸில் நிறுவியதுக்கான ஜனாதிபதியின் உள் நோக்கம் புரிகிறது.

எதிர்க்கட்சிகளின் பகிஷ்கரிப்புக் காரணமாக, ஆளும் கூட்டமைப்புக்குள் சமாதான முயற்சிகள் தொடர்பான ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் ஓர் கவுன்ஸிலாக இது மாறிவிட்டது.

ஆளும் கூட்டமைப்புக்குள் சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்தொருமைப்பாடு கிடையாது. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வழங்கப்படக் கூடாது என்பதில் ஜே.வி.பி தீவிரமாக இருந்து வருகிறது. இதனால் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக ஆளும் கூட்டமைப்புக்குள் முரண்பாடு நிலவுகிறது. இந்த கவுன்ஸில் அதனையாவது நிவர்த்தி செய்தால் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி எதனையாவது திட்டவட்டமாக அறிவிக்க முடியும்.

# அடுத்த நகர்வு என்ன?

நாட்டில் என்னதான் நடக்கிறது இப்போது?

நோர்வேப் பிரதிநிதிகள் அவ்வப்போது வந்து போகிறார்கள். ஆங்காங்கே கொலைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள். பேச்சு மூலம்தான் சமாதானம் என்று சந்திரிகா அம்மையார் மேடைக்கு மேடை முழங்குகின்றார். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைப் புலிகளிடம் வழங்கினால் எதிர்ப்போம் என்று ஜே.வி.பியும் ஹெல உறுமயவும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன. ஊர்காவல் படையினரை விடுவிக்கக் கோரி திருமலையில் உண்ணாவிரதம் நடக்கிறது. போராளிகளை விடுவியுங்கள் ஊர்காவல் படையினரை விடுவிக்கிறோம் என்கிறார்கள் புலிகள். இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையில் ஓயாது ஓடித்திரிகின்றது கண்காணிப்புக் குழு. புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பழுது வந்து விடக்கூடாதே என்பது அதன் கவலை. இடையிடையே பொந்துக்குள் இருந்து கருணாவின் குரல் வேறு கேட்கிறது. தூதரகங்களுக்கு முன்னால் டக்ளஸ் சவப்பெட்டி ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்.

இந்த நாட்டில் இப்போது இவைதான் நடந்து கொண்டிருக்கின்றன. சமாதான முயற்சிகள் எந்தப் பக்கத்தில் இருக்கின்றன என்றே தெரியவில்லை. ஆரவாரத்துடன் ஆரம்பமான சமாதானப் பேச்சு ஒன்றரை வருடங்களுக்கு முன்னரே நின்றுவிட்டது. யார் கண் வைத்தார்களோ பேச்சு, பேச்சளவில் மட்டும்தான் இருக்கிறது. அதைத் தாண்டி எந்த முன்னேற்றமும் இல்லை. இப்போது, சண்டையும் இல்லை; சமாதானமும் இல்லை; பேச்சும் இல்லை. அதைத் தவிர மேலே சொன்ன மற்றெல்லாம் நடக்கிறது. ''என்னமோ நடக்கிறது. சண்டை மட்டும் இல்லை. அது போதும்'' - என்பதைப் போன்று மக்கள் தம்பாட்டில் தம் வேலைகளில் கவனமாயிருக்கிறார்கள். ஆனாலும் உள்ளூர அடுத்தது என்ன என்ற கேள்வியும் எழாமலில்லை.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதில் இழுபறி தொடர்கிறது. இது பற்றிக் கதைக்க என்று கூறிக்கொண்டு ஜனாதிபதி கூட்டிய தேசிய ஆலோசனைச் சபையும் பிசுபிசுத்துப் போய் விட்டது. அனைத்துக் கட்சிகளிடையேயும் சமாதானம் பற்றிய பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதுதான் இந்த ஆலோசனைச் சபையின் நோக்கம். ஆனால், அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் இடையில் உள்ள முரண்பாடுகளை நீக்குவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் போன்று அது நடந்து முடிந்துள்ளது. முக்கிய எதிர்க்கட்சிகள் எவையும் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் பேச்சு மூலம்தான் சமாதானம் என்று ஜனாதிபதி சொல்லித் திரிகிறார். எப்படி? அதற்கான எந்த விளக்கமும் ஜனாதிபதி தரப்பால் முன்வைக்கப்படவில்லை.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி, அதன் மூலம் மக்கள் அங்கீகாரத்தைப் பெற்று, அரசமைப்பை அதன் ஏற்பாடுகளுக்கு மீறி மாற்றி அமைத்தால் என்ன என்று ஜனாதிபதி ஆலோசிக்கிறார் எனச் செய்திகள் வருகின்றன. எப்படியும் தமிழர்களுக்கு ஒரு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என்ற இக்கட்டினால் ஜனாதிபதி இப்படியும் யோசிக்கிறார். தமிழர்களுக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று வழங்கப்படவேண்டும் என்பதில் சர்வதேசத்தின் பார்வையும் சாதகமாகவே இருக்கிறது. இது ஜனாதிபதிக்கு மேலதிக அழுத்தம். எனவேதான் அவர் வேறு வேறு வழிகளையெல்லாம் யோசிக்கிறார்.

ஆனால், ரணில் அரசை அகற்றிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னிருந்து இன்றுவரை அவர் யோசித்துக் கொண்டுதான் இருக்கிறாரே தவிர உருப்படியாக எதையும் செய்யவில்லை. விளைவு ''காலத்தைக் கடத்துகிறார் ஜனாதிபதி'' என்று எதிர்க் கட்சிகள் கொதிக்கின்றன. தேசிய ஆலோசனைச் சபை கூட அந்த முயற்சியின் ஓர் அங்கம்தான் என்கின்றன அவை. புலிகளும் கூட இந்த ஆலோசனைச் சபையை நிராகரித்துள்ளனர் நேரடிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாமல் இழுபட்டுச் செல்வது மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்றும் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

தொடர்ந்தும் காலம்தான் இழுபட்டுச் செல்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் நிலைமை என்னகும்?

இது பற்றி புலிகளின் அரசியல் விவகாரக் குழு ஜெனீவாவில் கூடி ஆராய்ந்துள்ளது. லண்டனில் இருந்து மதியுரைஞர் பாலசிங்கமும் அங்கு சென்று பேசி விட்டுத் திரும்பியிருக்கிறார். இன்றைய அரசியல் நிலைமை பற்றியும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றியும் விரிவான கலந்துரையாடல்கள் அங்கு நடந்துள்ளன. அரசமைப்புக்கு உட்பட்டு ஜனாதிபதியால் கொடுக்கக் கூடியது, முடியாதது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. மேற்கொண்டு என்ன செய்வது என்றும் யோசித்திருக்கிறார்கள்.

நோர்வே அனுசரணையாளர்களும் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவை ஜெனீவாவில் சந்தித்துள்ளனர். நிலைமைகள் பற்றிப் பேசியிருக்கிறார்கள். அது குறித்து அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் கூட விளக்கப்பட்டுள்ளது.

புலிகளின் அரசியல் விவகாரக் குழு மூன்று வாரங்கள் ஐரோப்பாவில் தங்கியிருக்கப் போகின்றது. அச்சமயத்தில் பல்வேறு நாடுகளுக்கும் செல்லும் தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் அங்கெல்லாம் தமிழர் தரப்பு நியாயங்களை விளக்குவார்கள்.

இது புலிகளின் இராஜதந்திர நகர்வுகளின் அண்மைக்கால விரிவாக்கத்தின் ஒரு படி.. சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னர் கிளிநொச்சி இலங்கையின் இரண்டாவது இராஜதந்திர மையமாகியது. பல நாடுகளின் தூதுவர்களும் அங்கு சென்று புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிவந்தனர். தமிழர் போராட்டத்தின் மிக முக்கிய நகர்வுகளில் ஒன்று இது.

இதற்கு முன்னர் வெளிநாடுகளுக்குப் போய் வந்த சமயங்களிலும் புலிகளின் பிரதிநிதிகள் அந்த நாடுகளின் அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இம்முறை தமது தரப்பு நியாயங்களை எடுத்துரைப்பதற்காகவே புலிகள் அந்த நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர்.

அதாவது புலிகளின் இராஜீய விஜயம் இது. அண்மைக் காலங்களில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியமும், மேற்கு நாடுகள் சிலவும் புலிகளை காரசாரமாக விமர்சித்திருந்தன. இதற்கான விளக்கங்களை கொடுப்பது புலிகள் குழுவில் நோக்கமாக அமையலாம். மனித உரிமைகள் குழுக்களின் உயர் தலைவர்களையும் புலிகளின் குழு சந்தித்துப் பேசியுள்ளது. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

மனித உரிமைகள் விடயத்தில் புலிகள் அக்கறையுடன் செயற்பட ஆரம்பித்திருப்பதை இது காட்டுகின்றது. இந்த விடயத்திலேயே மேற்கு நாடுகள் இதுவரை புலிகள் மீது குற்றஞ்சாட்டி வந்தன.

இவையனைத்தும் எதனைக் காட்டுகின்றன?

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஏற்படும் காலங்கடத்தலைப் புலிகள் தமக்குச் சார்பாக கையாள்வதில் கவனம் செலுத்துகிறார்கள். என்பதைத்தான் தமது கட்டமைப்புக்களை மேலும் இறுக்கி நிர்வாகப் பரப்புக்களை விஸ்தரிப்பதில் அவர்கள் நாட்டம் காட்டுகிறார்கள். ஒரு தீர்வைத் தராமல் அரசு காலத்தைக் கடத்தி ஏமாற்ற முற்பட்டால், அப்போது குய்யோ முறையோ என்று கத்திக் கொண்டிருக்காமல் தமிழர் தயாகப் பரப்பைத் தனித்து இயக்குவதற்கு வேண்டிய அனைத்தையும் தயார்ப்படுத்துவதில் அவர்கள் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டார்கள். அதற்கான சர்வதேசச் சூழலை ஏற்படுத்துவதிலும்கூட.

தமிழர்களின் பலத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு புலிகளின் இந்த நடவடிக்கை அவசியமுமாகின்றது.

வடக்கு - கிழக்கில் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புலிகள் ஏற்கனவே திறமையான தனி நிர்வாகத்தை நடத்தி வருகின்றார்கள். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு - கிழக்கில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கூட ஒளிவு மறைவு இன்றிப் புலிகளின் நிழல் நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. சமாதானப் பேச்சுக்கள் கால தாமதம் ஆக ஆக புலிகள் தமது இத்தகைய கட்டமைப்புக்களை இறுக்கி வருகிறார்கள்.

அரசு விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காவிட்டால், புலிகள் தனி நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை அரசின் அனுமதியில்லாமலேயே வடக்கு -கிழக்கில் நிறுவிக் கொள்வதுதான் அவர்களின் அடுத்த நகர்வாக இருக்கும்.

அது காலத்தின் கட்டாயமும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்; தடுமாறுகிறது முஸ்லிம் காங்கிரஸ்

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் விடயத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முரண்பட்ட நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றனர். அதனால், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் எவ்வாறு பிரதிபலிக்கப்போகின்றன என்ற சந்தேகம் எழுந்துள்ளது.


ஜனாதிபதி

மேற்படி தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் கடந்த 4 ஆம் திகதி திங்கட் கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அந்த அங்குரர்ப்பணக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பிரதான கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. ஆகியனவும் அரசின் சிறுபான்மை பங்காளிக் கட்சிகளான இ.தொ.கா, ஈ.பி.டி.பி, நுஆ, தேசிய முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் பங்குபற்றின.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய, மலையக மக்கள் முன்னணி ஆகியவை அக்கூட்டத்தில் பங்குபற்றாது, ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை நிராகரித்துவிட்டன.

அவற்றுள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரம் தான் அந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை என்பதற்காக தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை நிராகரித்து – புறக்கணித்துவிட்டது என்று அர்த்தமல்ல என தெரிவித்துள்ளது. அதன் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸனலி எம்.பி. இதனை செய்தி ஊடகங்களில் தெரிவித்திருந்தார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எல்லா விடயங்களிலும் போலவே தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் விவகாரத்திலும் தானும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பும் காரியத்தில் இறங்கியுள்ளது.

## எதிலும் சுய நலம்

முஸ்லிம் காங்கிரஸ் எந்தவொரு விடயத்திலும் ஓர் உறுதியான தீர்மானத்தை மேற்கொண்டு – அதன் பிரகாரம் செயற்படுவதற்கு முன்வருவதாக இல்லை. தீர்மானம் எடுக்கும்போது சமூக நலன்களை விட கட்சியினதும், அதன் தலைமைத்துவத்தினதும் சுய அரசியல் லாபங்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

அதனால்தான் முஸ்லிம் சமூகம் தனது அரசியல் இலக்கை அடைந்து கொள்வதில் பல்வேறு சவால்களையும், தடைகளையும் எதிர்நோக்கி – தடுமாறிக்கொண்டிருக்கிறது.

ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டிருக்கின்ற 'சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான தேசிய ஆலோசனைப் பேரவை' ஒவ்வொரு தரப்பினராலும் வெவ்வேறாகப் பார்க்கப்படுகிறது.

"இலங்கையில் புரையோடிப் போய் இருக்கின்ற இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் அமைதி வழியில் தீர்வு காண்பதற்காக, அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற் கொண்டு – அதன் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காகவே தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அமைக்கப்படுகின்றது" என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கிறார்.

"தேசிய ஆலோசனைக்கவுன்ஸில்என்பது காலத்தை வீணடிக்கும் ஓர் ஏற்பாடு. புலிகள் கோருகின்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு ஐ.தே.க நிபந்தனையற்ற ஆதரவு வழங்கும். அவ்வாறில்லாமல் இக்கவுன்ஸிலை ஐ.தே.க. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது" என அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடித்துக் கூறிவிட்டார்.

இனப்பிரச்சினையோடு நேரடியாகச் சம்மந்தப்பட்டுள்ள தமிழ் சமூகத்தின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் "ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் தமிழரை ஏமாற்றுவதற்காக அரங்கேற்றப்படும் நாடகம்" என வர்ணித்துள்ளன.

ஆனால், முஸ்லிம் சமூகத்தின் அதிக பட்ச ஆதரவைப் பெற்ற – ஏகபிரதிநிதிகள் எனக்கூறிக்கொள்கின்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஆலோசனைக் கவுன்ஸில் விடயத்தில் ஓர் உறுதியான நிலைப்பாட்டிற்கு வர முடியாது – தடுமாறிக்கொண்டிருக்கிறது.

## முன்னுக்குப் பின் முரண்

கவுன்ஸில் தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணானவையாகவே இருக்கின்றன. ஜனாதிபதியின் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் என்ற முன்மொழிவு வெளிவந்தபோது, அதனை ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நிராகரித்திருந்தது.


ரவூப் ஹக்கீம்

"சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதை மேலும் தாமதப்படுத்தவும், சிக்கலாக்கவுமே ஜனாதிபதி – தேசிய ஆலோசனைக்கவுன்ஸிலை அமைப்பதற்குத் திட்டமிடுகிறார்" என சிறிலங்கா முஸ்லிம்காங்கிரஸ் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் எம்.பி. கண்டனக் குரல் எழுப்பியிருந்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

– அஸ்லம் எஸ்.மௌலானா –

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20 04 1934

மறைவு 11 09 2004

அமரர் நடராசா தங்கவேலாயுதம்

**கடந்த 11.09.2004 அன்று காலமான எமது அன்புத் தெய்வம் தங்கவேலாயுதம் அவர்கள்**

காலஞ்சென்ற நடராஜா தங்கம்மா தம்பதிகளின் தவப் புதல்வனும் அழகம் மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றோரான நவரத்தினசாமி, பாக்கியம், சின்னமாமயில்,ஜானகியம்மா ஆகியோரதும் தர்ம லிங்கம், துரைசாமி, அருமைத் துரை ஆகியோரது அன்புச் சகோதரனும் மகேந்திரராஜா, தெய்வேந் திரராஜா(சுவிஸ்), சாந்தகுமார்(இந்தியா), நந்தகுமார்(நாட்டுப்பற்றாளர் நந்தன்) சிவகுமார்(சுவிஸ்), பரமானந்தம், சிவானந்தம்(மாவீரர் கப்டன் நவநீதன்),விஜயராசா(லண்டன்), ஜெயராசா (போராளி அமலன்) ஆகியோரது பாசமிகு தந்தையாரும் பாக்கியலக்ஷமி, ஜெயலக்ஷமி, இதயராணி, தேவகுமாரி சந்திரசிறி, சிவா, நிரோஜினி ஆகியோரது ஆசை மாமனாரும். சுகந்தினி, கலா, பாரத், ஸ்ரீ ரம்யா, அனிதா, அனுஷியா அஸ்வினா, தவக்குமார், தயாளினி, பிருந்தா, சாளினி, விஜய்ஆனந்த் ஆகியோரது பேரனுமாவார். இவரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை(11.10.2004)திங்கட்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளதால் அந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும். கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

ஆலடி ஒழுங்கை,பொலிகண்டி,
வல்வெட்டித் துறை.

தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனை செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

இந்த வாரம் முதல் 'சுடர் ஒளி'யில் தவறாமல் வெளியாகும்.

# தொடரும் தவிப்பு

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

அன்றைய பொழுது என்றும் போல்தான் விடிந்தது அந்த மக்களுக்கு. வழக்கம் போல் பரபரத்துச் செல்லும் காவல் வாகனங்கள். வேலை நேரம் முடிந்து ஆள் மாற்றும் காவலரண் காவலர்கள். சுற்றுப் பாதையில் திருப்பிவிடப்படும் பேரூந்துகள். முணுமுணுக்கவும் பயந்து ஒதுங்கிச் செல்லும் மக்கள். எதுவும், எதுவும் மாறவில்லை. 8 வருடங்களாக இவற்றைப் பார்த்துப் பழகிப்போன 'கரையான்சாவடி' மக்களுக்கு அன்றைய தினத்தின் முக்கியத்துவம் புரியவில்லைதான்.

எனினும், நேரம் செல்லச் செல்ல கூடிய மக்கள் கூட்டம் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்த்தியது. கும்பல் கும்பலாக ஆட்டோக்களிலும் வாடகை வாகனங்களிலும் மக்கள் வந்த வண்ணம் இருந்தனர். அத்தோடு பத்திரிகையாளர்களின் கூட்டம் வேறு. அப்பா! இத்தனை டி.வி.காமராக்களா? அட! என்னதான் நடக்குது? ஆவல் தாங்காமல் கேட்ட உள்ளூர்வாசிக்குப் பதில் அளித்தார் கூட்டத்தில் ஒருவர். ''இன்றைக்குத் தீர்ப்பு வருதுங் க''

காலை 9.00 மணிக்குள் அந்தப் பகுதியே நிரம்பிவிட்டது. ''என்ன அண்ணே! சால்வையெல்லாம் கட்டிக் கொண்டு வந்திருக்கீங்க?''ஜீப்பில் வந்த ஒருவரிடம் மற்றொருவரின் கேள்வி.

''விடுதலையாகி வர்ற நம்ம பசங்கள வரவேற்கத்தான்.''

ஜீப் மனிதரிடம் இருந்து வேகமாக வந்தது பதில்.

''சரிதாண்ணே'' - மகிழ்ச்சியுடன் சிரித்தார்.

''அண்ணே, அங்க பாருங்க பெரிய அதிகாரி வர்றாரு! அப்பா என்ன பந்தாண்ணே அந்தாளுக்கு! பொலிஸ் பாதுகாப்பு வேற''

''அது கிடக்கட்டும். போய் என்னான்னு பார்ப்போம் வா!''

கூடியிருந்தோர், பத்திரிகையாளர்கள் என அனைவரும் காவல் தடுப்பை நோக்கி ஓடினர்.

தடுப்பிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் போடப்பட்டிருந்த சாமியானா பந்தலில் வந்து நின்றார் அந்த மனிதர். கூடவே துப்பாக்கி ஏந்திய பொலிஸார் இருவர். ஏற்கனவே அந்தப் பந்தலில் இருந்த பொலிஸாரும் எழுந்து நின்றனர். அவர்களில் ஒருவரை அழைத்து ஏதோ சொன்னார்.

தடுப்பு நோக்கி விரைவாக வந்த அந்தப் பொலிஸ் கன்ஸ்டபிள், ''பத்திரிகையாளர் அட்டை வைச்சிருக்கிறவங்க மட்டும் உள்ள வாங்க. ஐயா கூப்பிடுறாரு'' என்றார்.

அவ்வளவுதான்! முண்டியடித்துக் கொண்டு நுழைய முயன்றனர் பத்திரிகையாளர்கள். அவர்களை ஒழுங்குபடுத்தி அட்டையை வாங்கிப் பரிசோதித்து, உடல் சோதனை நடத்தி அனுப்புவதற்கே பத்து நிமிடமாகிவிட்டது.

தன் முன் கூடி நின்ற பத்திரிகையாளர்களைப் பார்த்து புன்னகைத்தார் அந்த மனிதர்.

''வணக்கம். நீதிபதி வந்துட்டாருன்னு சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன்.அனேகமா பெரிசா யாருக்கும் எந்தத் தண்டனையும் இருக்காதுன்னு நினைக்கிறேன். ஏற்கனவே 8 வருடத்துக்கு மேல உள்ள இருந்துட்டதால பாதிப்பேருக்கு மேல வெளியே வந்திடுவாங்கன்னுதான் நினைக்கிறேன். பார்ப்போம்! அப்பப்ப வந்து என்ன நடக்குதுன்னு உங்களுக்குத் தகவல் கொடுத்துட்டே இருக்கேன். கவலைப்படாதீங்க.''

சொல்லிவிட்டு கிட்டத்தட்ட அரை கிலோமீற்றருக்கு மேல் தள்ளியிருந்த சிறை மற்றும் நீதிமன்ற வளாகத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

தடுப்பருகே மீண்டும் வந்த பத்திரிகையாளர்கள், காத்திருந்தோரிடம் செய்தியைச் சொல்ல, குப்பென்று ஒரு மகிழ்ச்சி பரவியது கூட்டத்தில்.

''என்ன அம்மா! பிள்ளை வரப் போறானா?''

ஐம்பது வயசு மதிக்கத்தக்க அப் பெண்மணியிடம் கேட்டார் ஒருவர். முகங் கொள்ளா மகிழ்ச்சியுடன் சிரித்தார் அப் பெண். ''இங்க பாருடா அம்மாவுக்குச் சந்தோசத்தை; அம்மா அந்தப் பிள்ளை வந்தவுடன் இந்தப் பிள்ளையை மறந்திடாதீங்க.''

''அட போப்பா! உனக்கு எப்போதும் கிண்டல்தான்!''

உணர்வுகளை மறைக்க முயன்று தோற்றது அந்த அன்னையின் முகம்!

''என் பிள்ளை வரப்போறான்! என் பிள்ளை வரப்போறான்!''

இதைத்தவிரவேறு சிந்தனையே இல்லை அந்தத் தாய் மனதில்.


ஒன்றா, இரண்டா? இந்த 8 வருடங்களாக, தானும், தன் குடும்பமும், எல்லாவற்றுக்கும் மேல் தன் பிள்ளையும் பட்டதுன்பம் எல்லாம் முடிவுக்கு வரப் போகிறது.

ஆசை ஆசையா பெத்து, கண்ணுக்கு கண்ணா, அருமையா, நோய் நொடி அண்டாம, ஒரு கெட்ட பழக்கம் இல்லாம, உயர்ந்த குணங்களோட, ஒழுக்கமா வளர்த்த பிள்ளைய அநியாயமா பிரிஞ்சு இந்த 8 வருடமும் பட்டது போதும். இன்றோடு எல்லாம் முடிஞ்சு போச்சு! இனி மேல் என் பிள்ளையும் எல்லோரையும் போல வெளியே நடமாடலாம். இயற்கையை ரசிக்கலாம். ஆடலாம் ; பாடலாம்; அவன் விருப்பப்பட்டதைச் செய்யலாம்.

நினைக்க நினைக்க மனம் குதூகலித்தது.

''எத்தனை தூங்கா இரவுகள்! எவ்வளவு கண்ணீர்; ஏக்கம். எத்தனை அவமானங்கள்.'' எல்லாம் முடிவுறும் நாள் வந்து விட்டது. 8 வருட கொடுமையான காத்திருப்பு நிறைவடையப் போகிறது. இதோ மிஞ்சிப் போனாலும் இன்னும் 9 அல்லது 10 மணி நேரம். ''என் பையன் வந்திடுவான்.''

கண்கள் நிரம்பி விட்டன.



8 வருட கொடுமையான காத்திருப்பு...
எல்லாம் முடிவுறும் நாள் வந்துவிட்டது.

'''அம்மா! என்னம்மா அப்படி யோசனை!''

''ஒண்ணுமில்லப்பா!'' கண்களைத் துடைத்தபடி கூறினார்.

''நீதிபதி தீர்ப்பு வாசிக்க ஆரம்பிச்சாச்சாம்! பெரிய அதிகாரி இப்பத்தான் வந்து சொல்லிட்டுப் போறாரு.''

''என்னப்பா ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே வந்திட்டாருன்னு சொன்னாரு. இப்பதான் வாசிக்க ஆரம்பிச்சிருக்கிறாராமா?''

''என்னவோம்மா! பெரிய அதிகாரி மெனக்கெட்டு வந்து சொல்லிட்டுப் போறாரு!''

''எப்படி - சாய்ந்திரத்துக்குள் வாசிச்சு முடிச்சிருவாராப்பா?''

கிண்டலும் கோபமும் தொனித்தது கேள்வியில்.

''அம்மா - ஏன்மா வீணா பதட்டப்படறீங்க? அமைதியா இருங்கம்மா! எப்படியும் வாசிச்சுத் தானே ஆகணும்.''

போய் ஒரு காலியான ஆட்டோவில் கண்மூடி அமர்ந்து கொண்டார் அந்த தாய்; அற்புதம்.

தனிமை அற்புதத்தின் நினைவுகளைப் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

8 வருடத்திற்கு முந்திய அந்த இரவின் நிகழ்வும் அதைத் தொடர்ந்த சம்பவங்களும் இன்னும் பசுமையாய் நினைவில் இருக்கிறன.

***

10.06.1991, சோலையார்பேட்டை!

ஏலகிரி மலையின் அடிவாரத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமம். நிலவின் ஒளியில் அசையும் மரங்களுக்கு நடுவே ஊரே உறங்கிக் கொண்டிருந்தது. ஏனோ அந்த நடுநிசியிலும் அற்புதத்திற்கு உறக்கம் வரவில்லை, புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.

அற்புதத்திற்கு அப்போது வயது நாற்பதுகளில். ஐந்தடிக்கும் குறைவான உயரம். சற்றே குண்டான உடல்வாகு.

கட்டிலுக்கு அருகே தரையில் பாய் விரித்துப் படுத்திருந்தாள். கட்டிலில் கணவர் குயில்தாசன். அற்புதத்திற்கு நேர் எதிர்மறையான உருவம் குயில்தாசனுக்கு. ஆறடிக்கும் அதிகமான உயரம். உயரத்திற்கேற்ற பருமன் என இராணுவ அதிகாரி போன்ற மிடுக்கான தோற்றம் அவருக்கு.

ஜன்னல் வழியே நிலவின் ஒளி எட்டிப் பார்த்தது. தூரத்தே கடந்து செல்லும் வாகனங்களின் ஓசை அவ்வப்போது மெல்லிதாய்க் கேட்டது. இரவின் பலவித மெல்லிய சத்தங்களைக் கேட்டவாறே உறங்க முயற்சித்தாள் அற்புதம். மனதில் பலவித சிந்தனைகள். தஞ்சையில் பணிபுரியும் மூத்தமகள் அன்புவின் திருமணம் பற்றி, சென்னையில் இருக்கும் மகன் அறிவு குறித்து, படித்துக் கொண்டிருக்கும் இளைய மகள் அருள் பற்றி..... எனப் பலதும் யோசித்தவாறே படுத்திருந்தாள்.

சட்டென்று ஏதோவொரு சத்தம் கவனத்தை ஈர்த்தது. நெருங்கி வரும் ஒரு வாகனத்தின் ஓசை. உற்றுக் கவனித்தாள்! பெரிதாகிக் கொண்டே வந்த சத்தம், அவர்கள் வீட்டு வாசலில் நின்றது. இதென்ன இந்நேரத்தில் யார் நம் வீட்டிற்கு வருகிறார்கள்? நம் வீட்டிற்குத் தானா அல்லது எதிர் வீட்டிற்கா? எழுந்து அமர்ந்தாள். ஜன்னல் வழியாகப் பார்ப்போமா?..... அதற்குள் நான்கைந்து பேர் இறங்கி நடக்கும் 'பூட்ஸ்' கால்களின் ஒலி இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கேட்டது.

அடுத்து கதவைத் தட்டும் ஓசை. ''நம்வீட்டுக் கதவைத் தான்.... யாரது இந்நேரத்தில்...?'' சரேலென எழுந்தாள்.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்...

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை நிராகரிப்பது என மு.கா.எடுத்த எடுப்பில் தீர்மானித்ததனாலேயே ஜனாதிபதியினால் கடந்த 17 ஆம்திகதி அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துக்கு மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் பதில் அனுப்பாது புறக்கணித்திருந்தார்.

எனினும், இப்போது மேற்படி கவுன்ஸிலை முஸ்லிம் காங்கிரஸ் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், அது தொடர்பில் மேலும் தெளிவு தேவைப்படுவதாகவும், அது தொடர்பாக நேரடியாகக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பம் தருமாறும் தலைவர் ரவூப் ஹக்கீம் கடந்த இரண்டாம் திகதி ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் கேட்டிருந்தார்.

ரவூப் ஹக்கீமின் இந்த அறிவிப்பு அரசியல் வட்டாரத்தில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. அத்துடன் பலத்த சந்தேகங்களும் எழுந்துள்ளன.

### தன்னிச்சையான முடிவு

தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு ஓரிரு நாட்களுக்கு முன்னர் முஸ்லிம் காங்கிரஸ் தனது முடிவை மாற்றிக்கொண்டது ஏன்? ஆரம்பத்தில் எடுத்த எடுப்பில் கவுன்ஸிலை நிராகரித்ததும், இப்போது அதனை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டதும் எந்த அடிப்படையில்?

இவ்வாறு முன்னுக்குப்பின் முரணாக முடிவுகள் எடுக்கப்பட்டமை தலைமைத்துவத்தின் பலவீனமும், அரசியல் சுயலாபத்தின் பிரதிபலிப்புமாகும் என கட்சி முக்கியஸ்தர்கள் சிலர் குற்றஞ்சாட்டி – கண்டித்துள்ளனர்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயத்தில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது தொடர்பில் மு.கா. தலைமைத்துவம் கட்சியின் அரசியல் பீடத்தைக் கூட்டி ஆராய்ந்து – மசூறா அடிப்படையில் ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பதற்கான ஏற்பாட்டைச்செய்யாது – தன்னிச்சையாகவே செயற்பட்டது எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு இறுதி நேரத்தில் ரவூப் ஹக்கீம் சந்தர்ப்பம் கேட்டிருந்தார். அதற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கவில்லை.

விரும்பினால், கவுன்ஸில் அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு வருகை தந்து, அங்கு மேலதிக விவரங்களை அறிந்து கொள்ளுமாறு ஹக்கீமுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் தலைமை இந்தளவுக்கு கேவலப்படுத்தப்படும் நிலைக்கு அதன் அரசியல் புத்திசாதுரியமற்ற நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன. இது முஸ்லிம் சமூகத்திற்கு பெரும் சாபக்கேடும், தலைகுனிவுமாகும்.

### மு.கா.அச்சம்

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை ஐ.தே.க.எதிர்க்கிறது என்பதனாலேயே அதன் தோழமைக் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸும் முதலில் அக்கவுன்ஸிலை நிராகரித்தது எனச் சொல்லப்பட்டது. பின்னர் ஐ.தே.க. பங்கேற்காதபோதிலும் கவுன்ஸில் அமைக்கும் முயற்சி கைவிடப்படாததனால் மு.கா.தனது முடிவை மாற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

ஏனெனில், அந்த ஆலோசனைக் கவுன்ஸிலில் அரசின் பங்காளிக்கட்சிகளான நுஆ, தேசிய முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அங்கம் வகிக்கின்றபோது, இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் சமூக விடயங்களைக் கையாளும் சந்தர்ப்பமும், அதிகாரமும் அவ்விரு கட்சிகளுக்குமே கிடைக்கும். அதனால் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முக்கியத்துவம் குறைந்து விடலாம் என்கின்ற ஐயமே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இப்போது தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை நாடிச் செல்லக் காரணமாகும்.

முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சிகளில் ஈடுபடுவதை விட முஸ்லிம் தலைமைகள் தத்தம் அரசியல் சுயநலத்துக்கான காய்களை நகர்த்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றன.

எனவே, உடனடியாக இவ்வாறான போக்குகளைக் கைவிட்டு, முஸ்லிம் சமூகத்தின் விடுதலைக்காக கிடைக்கின்ற வாய்ப்பு, வசதிகள், சந்தர்ப்பங்கள் அனைத்தையும் நன்கு பயன்படுத்திக்கொள்வதற்கு முஸ்லிம் தலைமைகள் முன்வர வேண்டும். தேசிய ஆலோசனைக் கவுன்ஸில்விடயத்தில் முஸ்லிம் தலைவர்கள் கருத்தொருமிப்புடன் கூட்டிணைந்து செயற்படத்தயாராக வேண்டும்.

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விளம்பர முகவர்
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட தூர சைக்கிள் ஓட்டமும் இரவில் ஓயாத கால்வலியும்

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

***கேள்வி:-ஆண்.வயது 22.சிறுவயதிலிருந்து சுய இன்பப்பழக்கம் உண்டு. இதனால் என்னவோ எனது ஆண் உறுப்பு சிறுத்து இருக்கின்றது.சமீபத்தில் பெற்றோர் பெண்பார்த்து இருக்கின்றார்கள். எனக்கும் திருமணம் செய்ய ஆசை. ஆனால் எனது இந்தக் கெட்ட பழக்கத்தினால் திருமண வாழ்வு பாதிக்கப்படுமா?என்னால் என் மனைவியை திருப்திபண்ண முடியுமா?எனது உறுப்பு சிறிதாக இருப்பதை பெரிதாக மாற்ற முடியுமா? இதற்கு ஊடகங்களில் பிரசாரப்படுத்தும் மருந்துக்களை வாங்கி பலன் பெறலாமா?***

***பதில்:***— முன்னரும் இப்பகுதியில் கூறியது போலவே சுயஇன்பத்தால் எது வித பாதிப்பும் ஏற்படாது. இது பால் உணர்வின் வெளிப்பாடுகளில் சாதாரணமாக எந்த ஜீவராசியிலும் காணக்கூடிய செயல் ஆகும். ஆனால்,சுயஇன்பத்தின்போது, முக்கியமாக பின்னர் – மனதில் ஏற்படுகின்ற குற்ற உணர்வுகள் – உண்மையாக பெண்ணைக் கண்டவுடன் – அல்லது திருமணமாகி– இல்லறம் நடத்தும்போதும் – பால் உணர்வுகளை மழுங்க வைக்கின்றன.

அதாவது தப்புச்செய்த எமக்குச் சரியாக பால்உறவு கொள்ளமுடியுமா என்ற சந்தேகத்தை மனதில் அடிக்கடி எழுப்பி, சஞ்சலப்படுத்தி – பால் உணர்வு ஏற்பட்டவுடன் நரம்புத் தளர்ச்சியை உண்டாக்கிவிடுகின்றது. அதனால் முதலிரவிலும் அதற்குப் பின்னரும் வெற்றிகரமாக பால் உறவுகொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

இதற்கு எமது சுய இன்பத்தால் ஏற்பட்ட உடல் பல வீனம் நிச்சயமாக காரணமல்ல. உள்ளத்தில் ஏற்பட்ட குற்ற உணர்வுதான் முக்கிய காரணம்.தப்பு என்று நாமாக நினைத்துக்கொண்டு நம்மை நாமே தண்டித்துக்கொள்கின்றோம்.

இந்த மனச்சூழலில் இருந்து விடுபட்டால் நிச்சயம் உங்களால் இன்பகரமான இல்வாழ்க்கையை நடத்தமுடியும்.

அடுத்தது ஆண் உறுப்பு எந்த வித நோய்களாலும் அல்லது செய்கைகளாலும் சிறுத்துப் போவதில்லை. சாதாரணநிலையில் அது சுருங்கி இருக்கும். இன்பகரமான சிந்தனைகள் மனதில் வரும் பொழுது நரம்பு மண்டல தூண்டுதலால் உறுப்பில் உள்ள இரத்த நாளங்கள் விரிவடைந்து SPONGE போல உள்ள உறுப்பின் பகுதிக்குள் நிறைந்து –பால் உறவுகொள்ளத்தக்கவகையில் விறைத்து நீளும்.

எனவே, ஆண் உறுப்பின் அளவு பற்றி பெரிதாக மனதை அலட்டிக்கொள்ளாதீர்கள். உங்களைப் போல் பயந்த சுபாவம் உள்ளவர்களை கவரும் விதமாக – உறுப்பை நீளமாக்கும் மருந்துகள் இன்டர் நெட் தொடக்கம் தொலைக்காட்சி வரை பிரசாரப்படுத்தப்படுகின்றன. நம்பி ஏமாறாதீர்கள்.



***கேள்வி:-எனது தகப்பனார் தொழிலின் நிமித்தம் நீண்ட நேரம் சைக்கிள் ஓடுகின்றார். பின்னர் இரவில் தங்கமுடியாத கால் வலியால் அவதிப்படுகின்றார். வலிக்கு அடிக்கடி 'பனடோல்' எடுக்கின்றார். இந்தநோயை மாற்றமுடியுமா?***

பதில்:— உங்கள் தகப்பனார் நீண்ட நேரம் சைக்கிள் மிதிப்பதால் கால் தசைகளில் வலிஏற்படுவது எதிர்பார்க்கக் கூடிய ஒரு விடயமே. என்றாலும் சிலநோய் களின் குணங்கள்கூட இம்மாதிரியான கால் தசை வலிகளைத் தரும்.

நீரிழிவு உள்ளவர்களின் கால்கள், கைகள் ஆகியவற்றுக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு இரத்த ஓட்டம் குறைவதால் கூடியதூரம் நடந்தாலோ, நீண்ட நேரம் சைக்கிள் மிதித்தாலோ தேவையான இரத்த ஓட்டம் இல்லாததால்–தசைகளுக்கு செயல்பட தேவையான ஒட்சிசன் கிடைப்பதில்லை. இதனை ISHAEMIA வலி என்பார்கள். மற்றும் நீரிழிவு நோயாளர்களின் உணர்வு நரம்புகள் பாதிக்கப்படுவதால் PERIPHERAL NEURITIS என்ற நோயுண்டாகும். இந்தநிகழ்வாலும் இரவில் கால்களில் வலி உண்டாகலாம்.

இது தவிர முதுகெலும்பில் ஏற்படும் கோளாறுகள், தண்டுவம் என்கின்ற SPINAL CORD உள்ள முதுகெலும்பு குழாய்ப் பகுதி VERTE BRAL CANAL இடுப்பு மட்டத்தில் வயது,தொழில் காரணமாக – குறுகி – தண்டு வடத்தை அழுத்துவதாலும் இரவில் படுக்கும் போது கால் வலி உருவாகும்.

பீடி, சுருட்டு, சிகரெட் புகைப்பவர்களின் இரத்தக்குழாய்களில் முக்கியமாக காலுக்கு செல்லும் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு BURGER'S DISEASE என்ற நோய் கூட இரவில் கால்தசைகளில் வலிக்குக் காரணமாகின்றது.

எனவே, உங்கள் தந்தையை ஒரு விசேட மருத்துவ நிபுணரிடம் கூட்டிச்சென்று பரிசோதியுங்கள். அதுதவிர VITAMIN E 600NS மாத்திரைகள், INDOMETHACIN25 MGமாத்திரைகள் தினமும் உபயோகித்து வரலாம்.

***கேள்வி:- பெண் வயது 13.அடிக்கடி தொப்புள் அடியில் வலிக்கின்றது. நான் பருவமடைவதற்குத்தான் இப்படி ஏற்படுகிறது என்று வைத்தியர் கூறினார். நான் பருவமடைந்த பின்னரும் வலி அடிக்கடி ஏற்படுகிறது. ஆலோசனை கேட்கின்றேன்.***

***பதில்:***— உங்கள் வைத்தியர் கூறியபடி பருவமடையுமுன் சிறு பெண்களுக்கு இப்படி வயிற்று வலி ஏற்படுவதுண்டு. சூலகத்திலிருந்து மாதாமாதம் – முட்டை வெளிவர ஆரம்பிக்கும் போது (இந்தநிலை – மாதவிலக்கு ஏற்படமுன்னரே சில பெண்களுக்கு ஏற்படும்) வலி தோன்றலாம். சிலருக்கு வலியுடன் வாந்தி, காய்ச்சல் கூட ஏற்படுவதுண்டு,ஓரிரு நாட்களில் வலி குறைந்துவிடும். பின்னர் கிட்டத்தட்ட ஒரு மாதத்தின் பின்னர் இதே குணங்குறிகளுடன் வலி காணப்படும்.

பருவமடைந்த பின்னர் இந்த நோயாளர் எல்லோருக்கும் வலி மறைந்து விடுவதில்லை. 20 – 25 வயது வரை இருமாதவிலக்குகளுக்கு உள்ள இடைவெளியில் சூலகம் முட்டையை உதிர்க்கும் காலங்களில் இந்த வலி ஏற்படலாம். பின்னர் படிப்படியாக இந்த வயிற்றுவலி மறைந்துவிடும்.

என்றாலும் இப்படி வரும் வலியை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. சிறுநீர் தொற்று, அப்பெண்டிசைட்டிஸ் என்ற குடல் வளரி அழற்சி, கருப்பையில் கட்டி, சூலகத்தில் கட்டி போன்ற நிலைகளில் கூட இம்மாதிரி வயிற்று வலி ஏற்படலாம்.

எனவே சிறுநீர்ப்பரிசோதனை, இரத்தப்பரிசோதனை, வயிற்றை அல்றா சவுண்ட் ஸ்கேனிங் (ULTRA SOUND SCANNING) என்ற மிகை ஒலி ஸ்கேன் பரிசோதனை போன்ற பரிசோதனைகள் செய்யப்பட்டு நோயின் காரணியை அறிய முயல வேண்டும். இவை யாவும் வயிற்றுவலிக்கு காரணிகள் அல்ல என்று அறிந்த பின்னர் தான், இது உடலியல் சம்பந்தப்பட்ட வயிற்றுவலி என நிதானிக்கப்பட்டு – வலி குறைக்க மாத்திரைகள் உபயோகிக்கப்படவேண்டும். எனவே காலம் தாழ்த்தாமல் உங்கள் பெற்றோரிடம் சொல்லி ஆவன வைத்திய ஆலோசனையைப்பெறவும். ஒரு மகளிர் நோய் வைத்திய நிபுணரை GYNAECOLOGIST சந்திப்பதே பொருத்தமானது.


# கன்னத்திலிருந்து விழி வெண்படலத்திசு

மனிதனின் உடல் உறுப்புகளில் மிக முக்கியமானது கண்கள். இந்தக் கண்களில் ஏற்படும் நோய்களில் ஒன்று விழிவெண்படலக் கோளாறு. கோர்னியா என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்த விழி வெண்படலம் கண்களில் உள்ள லென்ஸ் பகுதியைப் பாதுகாக்கும் வகையில் அதற்கு மேல் சவ்வுப்படலம் போல அமைந்துள்ளது. சில நேரங்களில் விபத்து அல்லது நோய்த் தாக்குதல் காரணமாக இந்த விழிவெண்படலம் பாதிக்கப்படும் நிலை சிலருக்கு ஏற்படலாம்.

விழிவெண்படலம் மிகச்சிறிய திசுக்களால் ஆனது. இத் கண்களில் சவ்வுப்படலம் போல படர்ந்து காணப்படும். விழி வெண்படலத்தில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டால் அது தன்னைத் தானே சரிசெய்து கொள்ளும். அதாவது விழி வெண் படலத்தின் திசு சேதம் அடைந்துவிட்டால் அது தானாகவே வளரும் தன்மை கொண்டதாகும்.

விழி வெண்படலம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்க இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.


1.இரு கண்களில் ஒரு கண்ணில் மட்டும் பாதிப்பு ஏற்பட்ட நிலை இருந்தால், நல்ல நிலையில் உள்ள கண்ணில் இருந்து விழி வெண்படலத் திசு ஒன்றை எடுத்து திசு வளர்ப்பு முறையில் அதை சோதனைச் சாலையில் வளர்ப்பார்கள். திசு முழு வளர்ச்சி அடைந்து விழி வெண்படலமாக மாறிய பின்னர் அறுவைச்சிகிச்சை மூலம் அதை பாதிக்கப்பட்ட கண்ணில் பொருத்துவார்கள்.



2. ஒருவேளை இரு கண்களிலும் விழி வெண்படலம் பாதிக்கப்பட்டு இருந்தால், வேறு ஒருவரிடமிருந்து விழி வெண்படலத் திசுவைத் தானமாகப் பெற்று அதை சோதனைச்சாலையில் வளர்த்துப் பொருத்துவார்கள்.

தற்போது இந்த இரண்டு முறைகளுக்கும் அப்பாற்பட்ட வகையில் கன்னத்தின் உட்புறத்திசுவை எடுத்து சோதனைச்சாலையில் வளர்ப்பதன் மூலம் புதிய விழி வெண்படலத்திசுவை உருவாக்க முடியும் என்று ஜப்பான் நாட்டின் ஒசாகா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சமீபத்தில் இங்கு விழி வெண்படலம் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக 4 நோயாளிகள் வந்தனர். இவர்களுக்கு இயற்கையாக விழி வெண்படல திசு வளரும் வாய்ப்பு இல்லை. எனவே, இவர்களின் கன்னத்தின் உட்பகுதியில் இருந்து திசுவை எடுத்து அதை சோதனைச்சாலையில் வளர்த்து புதிய விழி வெண்படலத்தை உருவாக்கிப்பின்னர் அதை ஆபரேஷன் மூலம் அவர்களுக்குப் பொருத்தினார்கள்.



3 மில்லிலீட்டர் அளவுள்ள திசு மட்டுமே கன்னத்தில் இருந்து எடுக்கப்பட்டது. இது மெல்லிய திசுப்படலமாக வளர்ந்த பின்னர், அதில் இருந்து மிக மெல்லிய படலம் வெட்டி எடுக்கப்பட்டது. பிறகு அதைக் கண்ணில் பொருத்தினார்கள்.

இந்தப் புதிய சிகிச்சை முறை மூலம் விழி வெண்படலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறு வாழ்வு கிடைக்கும் என்று ஜப்பான் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டார் மணி

தனக்கென தனி இடம் வகித்த மணிவண்ணன் வேண்டாத சொத்துக்குவிப்பால் பல பிரச்சினைகளுக்கு ஆளாகி வீணான குழப்பத்தில் இருந்தார். இதனால் படவாய்ப்பில் பெரும் இடைவெளி விழுந்தது. இப்பொழுது ஓரளவிற்கு தனது பிரச்சினைகளை முடித்துக் கொண்டு களம் இறங்கி உள்ளார். நல்ல இயக்குநர், நல்ல நடிகர், நல்லமனிதர் வாய்ப்பு வருகிறதா பார்ப்போம்.

# 'மழைக்காலம்' கிடப்பில்

சூர்யா ஆறு மாதம் உழைத்த 'சென்னையில் ஒரு மழைக் காலம்' படம் 'டிராப்' ஆகிவிட்டது. இந்தப்படத்தை இயக்க ஒப்புக் கொண்ட கௌதம் மேனன் 'காக்க காக்க' வெற்றியால் காற்றில் பறக்க ஆரம்பித்ததும் தெலுங்கு, தமிழ் எனப்பல படங்களுக்கு முற்பணம் வாங்கிக் குவித்து விட்டார். இந்தப் படத்தை கிடப்பில் போட்டு விட்டார். இப்பொழுது 'உலகநாயகர்' படத்தை இயக்கவுள்ளாராம். பாவம் சூர்யா.

# கவர்ச்சியில் அடிபடும் அழகிகள்

பிரஷாந்த் நடித்து வரும் படம் 'ஆயுதம்'. இப்படத்தில் ஜோடியாக 'விரும்புகிறேன்' படத்திற்குப் பின்னர் மீண்டும் மடிசார் மாமியாக ஸ்நேகா இணைகிறார்.

படப்பிடிப்பு நேரங்களில் மடிசார் கட்டிக் கொள்ள இரண்டு மணிநேரம் ஸ்நேகாவிற்குத் தேவைப்படுகிறதாம்.

படம் முழுக்க முழுக்க மடிசார் மாமியாகவே ஸ்நேகா வலம் வருவதால் அவரால் ரசிகர்களை கவர்ச்சி மழையில் நனைக்க வைக்க முடியவில்லை.

உடனே சிந்தித்த இயக்குநர் மும்பையிலிருந்து இளம் கவர்ச்சிப் புயல்களை இறக்குமதி செய்துள்ளாராம். படம் முழுக்க இவர்கள் கவர்ச்சி காட்டுவதில் நானா? நீயா? என போட்டா போட்டி போட்டு நடித்துள்ளனராம்.

நடிப்பு உண்டா? என்று கேட்டால்... அது யாருக்கு வேண்டும் என்று கேட்கிறார்கள் படப்பிடிப்புக் குழுவினர். படத்தில் ரசிகர்கள் வாய் பிளந்து ரசிக்க இறக்குமதியான அழகிகள் பெயர் ரஸ்னா, மீனல்.

பெயரிலேயே ஒரு போதை இருக்கு. அப்ப படத்தைப் பார்க்கலாம். குடும்பத்தோட இல்லை; காதலியோட.


அப்படி என்னதான் ...
'ஆயுதம்' -பிரசாந்த் ...

# வருத்தத்தில் ரவிக்குமார்

'சந்திரமுகி' கன்னடத்தில் விஷ்ணுவர்த்தனை வைத்து வாசு இயக்கிய படம். இந்தப் படத்தைப் பார்த்த சூர்ப்பர் ஸ்டார் தமிழில் தனக்காக இதை இயக்கக் கேட்டுக்கொண்டாராம். இந்தப் படம் சிவாஜி புரொடக்ஷனல் தயாரிக்கிறது. ஆனால் ரஜினிக்காக காத்திருந்த கே.எஸ்.ரவிக்குமார் இதைக் கேள்விப்பட்டு மிகுந்த வருத்தத்தில் உள்ளாராம். 'நட்புக்காக' பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

# சினி டிப்ஸ்

சதாவுக்கு 'அந்நியன்' படம் மட்டுமே கைவசம் உள்ளதாம்.

* * *

'செல்லமே' நாயகன் விஷால் கூத்துப்பட்டறையில் மூன்றுமாதம் நடிப்புப் பயிற்சி பெற்றவராம்.

* * *

விவேக் கதாநாயகனாக நடிக்கும் 'சொல்லி அடிப்பேன்' படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்துள்ளது.

* * *

'தொட்டி ஜெயா' படத்தில் பிதாமகன் புகழ் மகாதேவன் வில்லனாக நடிக்கிறார்.

* * *

இயக்குநர் கஸ்தூரிராஜா தனது அடுத்த 'அலை அலையாய்' படத்திற்கு பதினைந்து பாடல்களுக்கு மெட்டுப் போட்டு வைத்துள்ளாராம்.

* * *

கோவை சரளா 'என் காதலே' என்ற படத்தில் தாயும் மகளுமாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

* * *

'காற்றுள்ளவரை' படத்தில் நடிகை பிரணதியின் கார்ச் சாரதியாக நடிக்கிறார் ஜெய் ஆகாஷ்.

* * *

'மதுர' படத்தைத் தொடர்ந்து ரக்ஷிதாவுக்கு தனுசுடன் ஒரு படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது.

* * *

'காதலே ஜெயம்' படத்தைத் தயாரித்த நடராஜன் பிலிம்ஸ் அடுத்து தயாரிக்க உள்ள புதிய படத்திற்கு 'முருகன் எம்.ஏ.பீ.' எனப் பெயரிட்டுள்ளார்.

* * *

'அந்நியன்' படம் தெலுங்கிலும் 'அப்ரஜித்துடு' எனும் பெயரில் படமாக்கப்படுகிறதாம்.

* * *

விஜய் நடித்த வசீகரா படத்தை இயக்கிய கே.செல்வபாரதி புதுமுகங்களை வைத்துப் புதிய படமொன்றை இயக்கவுள்ளார்.

* * *

சுள்ளான் படத்தைத் தயாரித்த சந்திரசேகர் மீண்டும் தனுஷ் நடிக்க ஒரு படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

* * *

'ஆனந்தம்' படத்தின் தெலுங்குப் பதிப்பில் வெங்கடேஷ் ஜோடியாக ஸ்நேகா இணைகிறார்.

* * *

இயக்குநர் அகத்தியன் முதன் முதலாக 'அகரம்' எனும் படத்தில் நடிக்கிறார்.


அணைக்கத்தான் ஆசை
'காதல் எப்ளம்'
-மணிகண்டன், சிவானி சிங்'

# விஜய... சொல்...

கேப்டன் விஜயகாந்... துக்கொள்ளப் போகிற... வைக் குறைக்கத்தானா... சம்பளப் பணத்தை குறை... அனைத்து நடிகர்களுக்கும் ... ஆனால், மற்ற...டிகர்கள் இ... என்று கேள்வி...

# பெயரில் ம...

பல குடும்பப் படங்களை எடு... இப்பொழுது 'ஏய்' என்ற படத்தை... தொகையில் முடிக்கப்பட வேண்... செலவினால் கையைக் கடித்து ... படத்தை வெளியிட படாதபாடுப... ரைக் 'மரியாதையாக' வைக்கா... படி ஏற்பட்டதோ?

# இரட்டைக்கு... தயாராகும் வி...

'மதுர' படத்தின் வெற்றி விஜய்... உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது. 'திருப்... தைத் தொடர்ந்து தாணு...ற்காக ஒ... விஜய் நடிக்கவிருக்கிறார...

இந்த வயதில் இவ்வளவு சாதித்த... சாதனை என்று மகிழும் விஜய்க்கு இரட்... தின் மீது கொள்ளை ஆசையாம். அதற்... கதைக்கு காத்திருக்கிறாராம்.

இரட்டை வேடக்கதை உள்ளவர்கள்... பாவை அணுகலாம்.

# பாசிலின் தவ...

பாசில், பல காதல் படங்களை வெளியிட்ட... இயக்கத்தில் மென்மையான பல காதல் கதைகள்... துள்ளன.

இப்பொழுது மாதவனை வைத்து தமிழில் ஒ... இயக்க உள்ளார்.

இந்தப் படத்தில் இளையராஜாவின் இசைக்... னையில் வந்து முகாம் அடித்துள்ளார். ராஜா இ... பல மெட்டுக்களைப் போட்டு அசத்தியுள்ளாராம்...

# ஐஸ் நடித்த ஹொலிவுட் படம்

ஐஸ் — என்றால் சின்னக் குழந்தை கூட சட்டென ஐஸ்வர்யா ராய் என்று சொல்லிவிடும். அந்த அளவுக்குச் சர்வதேச அளவில் தொடர்ந்து புகழின் உச்சியில் இருக்கிறார். அவர் நடித்துள்ள ஹொலிவுட் படம், 'பிரைடு அண்டு ப்ரிஜுடிஸ்' சக்கை போடு போடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரேநேரத்தில் இந்தியாவிலும், பிரிட்டனிலும், அடுத்து அமெரிக்காவிலும் வெளிவருகிறது.

படத்தை தயரித்துள்ளவர் இந்தியப் பெண்தான். பெயர் குரீந்தர் சத்தா. இப்படம் 200 கோடி ரூபா செலவில் படமாக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும் இந்தப் படத்தின் 450 பிரதிகள் போடப்பட்டுள்ளன. இந்தியாவில் இந்தப் படம், 'பல்லே பல்லே அமிர்தரஸ் டு எல் ஏ, (லொஸ் ஏஞ்சல்ஸ்)' என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. இந்தியாவில் இருந்து அமெரிக்கா செல்லும் பெண், அங்கு கடை வைத்து பிழைக்க நினைக்கிறார். கடை வைக்கிறார். அதில் வெறும் இந்தியப் பெருட்களை விற்பதுடன், அமெரிக்கர்களுக்கு புது உலகையே காண்பிக்கிறார். இப்படிப் போகிறது கதை. இந்தப் படம் சர்வதேச அளவில் ஐஸ்வர்யாவுக்கு பெருமையைத் தேடித் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் படத்தின் மூலம் ஹொலிவுட் படவுலகில் ஐஸ்வர்யாவுக்கு நிச்சயம் பெரிய புகழ் கிடைக்கும் என்பது உறுதி. காரணம், சமீப காலங்களில் ஹொலிவுட்டில் ஆசியர்களுக்கு இடம்தரப்படுவது தான். ஏன்? ஜாக்கிசானும், ஸ்டீபன் சேகாலும் அமெரிக்க சீனர்கள் தான். அந்த வகையில் ஜாக்கி சானின் சீன நடிகையான லூசி லியூவுக்கும் இடம் கிடைத்தது.

இப்போது ஐஸ்ஸுக்கு அமெரிக்கா, ஐரோப்பாவில் நல்ல செல்வாக்கு உள்ளது. இந்தப் படம் இன்னும் பிரபலமாக வாய்ப்பு அதிகம் உண்டு என்பது நிச்சயம்.


-ஐஸ்வர்யா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...தான் சிக்கிக்கிச்சு?
...சாந்த், ஸ்னேகா

# ...ஜய்காந்த் ...ல்லிட்டார்!

...ஜயகாந்த் தனது சம்பளத்தை இனி குறைத்
...போகிறாராம். எல்லாம் தயாரிப்பு செல
...தானாம். தன்னைப்போல் அனைவரும்
... குறைத்துக் கொள்ளவேண்டும் என
...க்கும் வேண்டுகோள் விடுத்துள்ளாராம்.
...கள் இ... ும் செவி சாய்க்கவில்லை

# ... மரியாதை!

...ள எடுத்த திருவள்ளுவர் கலைக்கூடம்
...டத்தைத் தயாரித்து வருகிறது. குறிப்பிட்ட
...வேண்டிய இந்தப்படம், கட்டுக்கடங்காத
...டித்து விட்டதாம். இப்பொழுது இந்தப்
...பாடுபட்டு வருகின்றனர். படத்தின் பெய
...வைக்காததால் இப்

## ...க்குத் ... விஜய்

...விஜய்யை மேலும்
... 'திருப்பாச்சி' படத்
...காக ஒரு... டத்தில்

...சாதித்தது பெரும்
...கு இரட்டை வேடத்
...ம். அதற்காக நல்ல

...வர்கள் விஜய் அப்

# ...வம்!

...யிட்டவர். இவரது
...தைகள் வெளிவந்

...ழில் ஒரு படத்தை

... இசைக்காக சென்
... ராஜா இவருக்காக
...ளாராம்.

# 'ஒண்ணும் ஒண்ணும் நாலு'

சந்தியா மூவீஸ் சார்பில் பூவை கே.நடராஜனின் முதல் படைப்பாக உருவாகும் படம் 'ஒண்ணும் ஒண்ணும் நாலு'. இப்படத்தின் கதாநாயகன் ஜெய் ஆகாஷ். இவரது ஜோடியாக 'ஆட்டோகிராப்' மல்லிகா. மற்றும் 'வெண்ணிற ஆடை' மூர்த்தி, சிட்டிபாபு, எம்.எஸ்.பாஸ்கர், 'வண்டார் குழலி' ஸ்மிதா மற்றும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க புதுமுகங்களின் தேர்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இப்படத்தின் இயக்குனராக அறிமுகமாகும் கன்னியப்பன், துளசி தாஸ், அகத்தியன், தங்கர்பச்சன், ஹயாத் இவர்களிடம் பணியாற்றியவர்.

காதல் மறக்க முடியாதது. ஆனால் மறுக்கக் கூடியது. 'காதல்' இந்த ஸ்பரிசம் தொடாத ஆணும், பெண்ணும் இவ்வுலகில் இல்லை. ஆனால், சில காதலித்த ஆணும், காதலிக்கப்பட்ட பெண்ணும் திருமண பந்தத்தில் இணைவதில்லை.

வேறு வேறு திசையில் இவர்களின் வாழ்க்கை ஆரம்பிக்கிறது.

வாழ்வில் சந்தித்த இந்தக் காதலர்கள் மீண்டும் சந்தித்துக் கொண்டால், என்ன நிகழும் என்பதை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதே இப்படத்தின் கதை.

இப்படத்தின் படப்பிடிப்பு இம்மாதம் சென்னையில் ஆரம்பமாகி கேரளா, புதுச்சேரி, விசாகப்பட்டணம் போன்ற இடங்களில் நடக்கிறது. பாடல் காட்சிகளை லண்டனிலும், நம் நாட்டிலும் படமாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இசை– ரெமியன், எடிட்டிங் – லான்சி மோகன், சண்டைப் பயிற்சி – ஜாக்குவார் தங்கம், நடனம் – சிவசங்கர் அசோக்ராஜ், 'கொம்பு' முருகன், கலை – 'வெங்கல்' ரவி, பாடல்கள் – பா.விஜய், யுகபாரதி, கபிலன், கவிபாணி, தயாரிப்பு – சந்தியா மூவீஸ் பூவை. கே.நடராஜன், கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் – பி.கே.கன்னியப்பன்.



"தின்னாதே எனை தின்னாதே......."
-கத்தரின் கைவ்

# அந்த நாள் ஞாபகம்

செந்தமிழ் கலைக்கூடம் என்ற புதிய நிறுவனம் 'அந்த நாள் ஞாபகம்' என்ற படத்தைத் தயாரிக்கிறது.

இந்தப் படத்தில் ரமணா கதாநாயகனாகவும், ஸ்ரீதேவிகா, ஜோதி ஆகிய இருவர் கதாநாயகிகளாகவும் அறிமுகமாகின்றனர். மற்றும் 'அழகிய தீயே' படத்தில் சித்தப்பாவாக வந்து கலக்கிய குமாரவேலு, ஒய்.ஜி.மகேந்திரா, ராம்ஜி, சரண்ராஜ், டெல்லி கணேஷ், மதன்பாப், ஜெயா முரளி, கே.ஆர்.வத்சலா, தேவதர்ஷினி மற்றும் பலர் நடிக்கின்றனர்.

இவர்களுடன் முன்னணி நகைச்சுவை நடிகரும் நடிக்கிறார். இந்தப் படத்தை மிகுந்த பொருட் செலவில் செந்தமிழ் சேகர் தயாரிக்க, ஒளிப்பதிவு செய்கிறார் ஏ.எம்.சேதுராமன், கலை – நந்தகுமார், படத்தொகுப்பு – சுரேஷ் அர்ஸ், சண்டைக் காட்சிகள் – பவர் பாஸ்ட், இசை– பரத்வாஜ், கதை, திரைக்கதை, இயக்கம் – மணிபாரதி.

# 'சந்திரமுகி' குழப்பம்



'சந்திரமுகி' படத்தின் ஆரம்பவிழா தொடர்பாக கிடைத்த தகவலால் ரஜினிகாந்த் ரசிகர்களுக்கு குழம்பமும், ஏமாற்றமும் ஏற்பட்டது. சிவாஜி பிலிம்ஸின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு அந்நிறுவனம் நடிகர் ரஜினிகாந்தை கதாநாயகனாக வைத்து பி.வாசு இயக்கத்தில் 'சந்திரமுகி' என்ற படத்தைத் தயாரிக்கிறது.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு தயாராகும் ரஜினிகாந்த் படம் என்பதால், பெரிய அளவில் ரசிகர்களிடையே இப் படம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இப்படத்தின் ஆரம்பவிழா நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் பிறந்த நாளான ஒக்டோபர் முதலாம் திகதி சிவாஜிகணேசனின் அன்னை இல்லத்தில் நடக்கவிருப்பதாக பல பத்திரிகைகளில் செய்திகள் வந்தன.

அதனால், அன்றைய தினம் காலையில் அதிகமான ரஜினி ரசிகர்கள் அன்னை இல்லத்திற்கு ஆர்வத்துடன் வந்தனர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததுபோல் 'சந்திரமுகி' படத்தின் ஆரம்பவிழா நடைபெறவில்லை.

வருடா வருடம் நடைபெறுவது போல் நடிகர் திலகத்துக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி மட்டும் நடைபெற்றது.

அதில் பல சினிமா உலகப் பிரமுகர்களும், ஆயிரக்கணக்கான சிவாஜிகணேசன் ரசிகர்களும் கலந்து கொண்டனர்.

ரஜினி படத்தின் துவக்கவிழா நடைபெறாத ஏமாற்றத்தில் இருந்த ரசிகர்களை திடீரென வந்த ரஜினிகாந்தின் வருகை உற்சாகப்படுத்தியது.

ஆனால், படத்தின் ஆரம்பவிழா நடைபெறவில்லை. எவ்வாறாயினும் ரஜினி ரசிகர்களுக்கு ஏமாற்றமே!

# சூர்யா நடிக்கும் 'மாயாவி'

சேது, நந்தா, பிதாமகன் போன்ற மாபெரும் வெற்றிப் படங்களைத் தந்த இயக்குநர் பாலா அடுத்து ரசிகர்களுக்குத் தரவிருக்கும் படம் 'மாயாவி'.

இவர் திருமணத்தின் பின்னர் இயக்கும் முதலாவது படம் இதுவாகும். இவர் இயக்கிய நந்தா பிதாமகன் ஆகிய இரு படங்களிலும் சூர்யா கதாநாயகனாக நடித்துள்ளார்.

பாலாவின் சொந்த நிறுவனமான 'பி ஸ்டுடியோஸ்' பிரமாண்டமான முறையில் தயாரிக்கும் இப்படத்தில் சூர்யா கதாநாயகனாக நடிக்க ஜோதிகா அவருக்கு ஜோடியாக இணைகிறார். பேரழகன் படத்திற்குப் பிறகு சூர்யா — ஜோதிகா மீண்டும் இப்படத்தில் இணைகின்றனர்.

முழு நீள நகைச்சுவைப் படமாய் தயாராகும் இப்படத்தை கதை, திரைக்கதை, வசனம் எழுதி டி.பி.சிங்கம்புலி இயக்குகிறார்.

அஜித் கதாநாயகனாக நடித்த 'ரெட்' படத்தை ராம் சத்யா எனும் பெயரில் இயக்கியவரே இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாதம் 11 ஆம் திகதி சென்னையில் முதற்கட்டப் படப்பிடிப்பு ஆரம்பமாகி இடைவிடாமல் தொடருமாம். தேவி ஸ்ரீ பிரசாத் எனும் புதுமுக இசையமைப்பாளர் இப் படத்திற்கு இசை அமைக்கிறார்.

அடுத்த ஆண்டு காதலர் தினமாக பெப்ரவரி 14 ஆம் திகதி மாயாவியை ரசிகர்கள் திரையில் காணலாம்.

# பார்த்திபனின் 'கண்ணாடிப் பூக்கள்'

பார்த்திபன் இப்போது ஓய்ந்து விட்டார். 'குடைக்குள் மழை' கொஞ்சம் மழையும், மீதி வெயிலுமாக பார்த்திபனை பதம்பார்த்த அனுபவத்திலிருந்து மீண்டு விட்டார்.

திருட்டு வி.சி.டிக்கு எதிராக இவர் மூட்டிய உண்ணாவிரதப் போராட்டம் தமிழ்நாடு முதல்வர் வரை சென்று சுமுகமாக முடிந்ததில் அவரின் மனசுக்குள் மழை.

அடுத்து, இடையில் நின்றுபோன 'கண்ணாடிப் பூக்களுக்கு' மீண்டும் உயிர் கொடுக்கும் வேலையில் இறங்கியிருக்கிறார்.

இப்படம் 'குடைக்குள் மழை' போன்று வித்தியசமான படமா என்று கேட்டால் ஐய்யோ என்றார் பார்த்திபன்.

தொடர்ந்தும் வித்தியாசமாகக் கொடுத்தால் அதில் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். அதனால், கண்ணாடிப் பூக்கள் அனைத்தும் கலந்த படமாய் தயாராகி வருகிறதாம். தொட்டுக்க ஊறுகாய்போல படத்தில் பார்த்திபனின் 'டச்'சும் உண்டாம்.

இப்படத்தைத் தொடர்ந்து சூப்பர்குட் பிலிம்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் மம்முட்டி, பார்த்திபன் இணைந்து நடிக்கும் படத்திற்கும் பேச்சுக்கள் நடந்து வருகிறது.

இந்தப் படமும் சரி என்றால் பார்த்திபன் பிஸியாகி விடுவார். அவரின் கல்ஷீட் கிடைப்பது கொஞ்சம் கஷ்டம்தான்.

அதுசரி, ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க 'ஏலேலோ' என்ற படத்திற்கு பார்த்திபன் பூஜை போட்டாரே. அது என்னவாச்சு?

இக்கேள்வியை பார்த்திபனின் காரியாலயத்தில் கேட்டால் அங்கு உள்ளவர்கள் கேட்பவர்களை ஒரு மாதிரியாகப் பார்க்கின்றனர். ஏலேலோ எப்போதோ ஏ..லே....லோ ஆகிவிட்டதாம்.

பார்த்திபனின் மனைவி சீதாவைப் போல,...



சிக்கிக்கிச்ச ஏட்டுறு வயசா இது?
'எம்.குமரன்'
-ஜெயம் ரவி, அசின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்ம மாளிகை!



– மு.ஐ.முபாறக் –

1978 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் திகதி. அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் வசித்து வந்த கில்லரி என்ற 16 வயது நிரம்பிய இளம்பெண் திடீரென மாயமாய் மறைந்து போனாள்.

அன்று கில்லரியின் தாய் மேரியின் 40 ஆவது பிறந்த நாள். பிறந்த நாளை மிகச் சந்தோசமாகக் கொண்டாட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. உறவினர்கள் அனைவரும் கில்லரியின் வீட்டுக்கு வந்திருந்தனர். ஆனால், பாடசாலை சென்றிருந்த கில்லரி மட்டும் இன்னமும் வீடு திரும்பவில்லை.

நேரம் பின்னேரம் நான்கு மணியைத் தாண்டி இருந்தது. வழமையாக மூன்று மணிக்குள் வந்துவிடும் கில்லரி நான்கு மணியாகியும் வராததால் கில்லரியின் தாய் மிகவும் ஆத்திரப்படத் தொடங்கினாள்.

ஆனால், நேரம் 6,7,8 மணியென நகர்ந்து கொண்டே போனது. இன்னும் கில்லரி வரவில்லை. கில்லரியின் தாயாரின் கோபம் உச்சமடைந்தது.

இவ்வாறே இருக்க நேரம் 10 மணியைத் தாண்டியதும் தாய் மேரிக்குப் பயம் பிடித்தது. ஒரு நாளும் இப்படித் தாமதித்திடாத கில்லரி இன்று மட்டும் ஏன் இப்படித் தாமதிக்கிறாள்? ஏதும் ஆகியிருக்குமோ? என தாய் மேரி அஞ்சினாள்.

கில்லரியின் தோழிகளின் வீடுகளுக்கு தந்தை ரொபேட் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்துப் பார்த்தார். அங்கு வரவில்லை என அவர்கள் கூறினர்.

அன்றைய இரவு விடிந்து போனது. காலை சிக்காக்கோ நகரில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றுக்குச் சென்று ரொபேட் முறைப்பாடு செய்தார்.

பொலிஸார் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர். கில்லரியின் நண்பிகள், தனிப்பட்ட ரீதியில் தொடர்புடையவர்கள் போன்றோரின் விபரங்களைப் பொலிஸார் கில்லரியின் பெற்றோர்களிடமிருந்து திரட்டினர்.

அந்த வீடுகளில் அடங்கியோரில் கிரேஷ்வீன் என்ற தொழிலதிபரும் ஒருவர். கட்டட நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் ஒன்றின் அதிபர். அவரது நிறுவனத்தில் பகுதிநேரமாக வேலை செய்ய சில பெண்களும், ஆண்களும் தேவைப்பட்டதால் கில்லரியும் அவரது நிறுவனத்தில் பகுதிநேர ஊழியராக வேலைசெய்ய விரும்பினாள். ஒருவாறு கிரேஷ்வீனின் தொலைபேசி இலக்கங்களையும் கில்லரி பெற்றிருந்தாள்.

பொலிஸாருக்கு கில்லரியின் பெற்றோர் கொடுத்த தகவல் இவ்வளவுதான். கிரேஷ்வீனின் முகவரி தெரியாதெனவும் கில்லரியின் பெற்றோர் தெரிவித்துவிட்டனர்.

பொலிஸார் இந்தத் தொலைபேசி இலக்கங்களைக் கொண்டு கிரேஷ்வீனின் முகவரியைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கினர். டெலிபோன் டிரெக்டெரிகளைப் பயன்படுத்தி ஒருவாறு கிரேஷ்வீனின் முகவரியைக் கண்டுபிடித்தனர்.

கட்டட ஒப்பந்த நிறுவனங்கள் வரிசையில் இவரது முகவரியும், தொலைபேசி இலக்கங்களும் அடங்கியிருந்தன.

இந்த முகவரியைப் பெற்ற பொலிஸார் இதனைச் சிக்காக்கோ பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி இவர் தொடர்பாக ஏற்கனவே குற்றச்சாட்டுகள் ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா என முதலில் ஆராய்ந்தனர். கிரேஷ்வீன் பாலியல் சேட்டைகளில் அதிக ஈடுபாடு உடையவர். ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக இவருக்கு 1968 ஆம் ஆண்டு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. நன்நடத்தை காரணமாக 18 மாதங்களில் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தத் தகவலை சிக்காக்கோ பொலிஸ் தலைமையகம் உளவுத்துறையினருக்குத் தெரிவித்தது. இதனை அடுத்து உளவுத்துறையினர் உஷார் அடைந்தனர்.

கிரேஷ்வீன் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணையின் போது அப்படியொரு பெண்ணைத் தனக்குத் தெரியாது என்றும், தன்னைப் பார்க்கவரவில்லை என்றும் – தெரிவித்தார்.

ஆனாலும் உளவுத்துறையினர் கிரேஷ்வீனின் வீட்டைச் சோதிக்க அவரிடம் அனுமதி கோரினர். அவர் மறுப்பேதும் கூறாது அனுமதி வழங்கினர்.

உளவுத்துறையினர் தேடுதலை நடத்தினர். எந்தத் தகவலும் அவரின் வீட்டில் இருந்து உளவுத்துறையினருக்குக் கிடைக்கவில்லை. இதனையடுத்து அவரின் பல அலுவலகங்கள் மற்றும் அவருக்குச் சொந்தமான இடங்கள் போன்றவைகளும் உளவுத்துறையினரின் தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டன. அங்கும் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

இருந்தபோதிலும் உளவுத்துறையினர் சோர்ந்து விடவில்லை. கிரேஷ்வீன் மீதே அவர்களுக்குச் சந்தேகம் இருந்தது. இதனால் அவரின் நடமாட்டங்கள் உளவுத்துறையினரால் மிக்க உன்னிப்பாக அவதானிக்கப்பட்டன.

அவர் போகின்ற இடங்கள், சந்திக்கின்ற மனிதர்கள், பேசுகின்ற வார்த்தைகள் என எல்லாம் உளவுத்துறையினரால் அவதானிக்கப்பட்டன.

அவ்வாறு அவதானிக்கப்பட்டதில் ஜோன் கிரேஷி என்பவர் முக்கியமான ஒருவர். சிக்காக்கோ நகரில் பெரிய மருந்துக் கடை ஒன்றை வைத்து நடத்தி வந்த அவர் கிரேஷ்வீனின் நெருங்கிய நண்பர். இவர் உளவுத்துறையைச் சார்ந்த ஒருவருடன் விரைவில் நண்பனானார். ஜோன் கிரேஷி மூலம் உளவுத்துறையினருக்கு மேலும் பல தகவல்கள் கிடைத்தன. இதனால் மீண்டும் ஒருமுறை கிரேஷ்வீனின் வீட்டைச் சோதனை செய்வதென உளவுத்துறையினர் தீர்மானித்தனர்.

இம்முறை திடீரெனப் பாய்ந்த உளவுத்துறையினர் கிரேஷ்வீன் வீட்டில் இல்லாத சமயத்திலேயே தேடுதலை நடத்தினர். முன்பு மேலோட்டமாகத் தேடப்பட்ட பொருட்கள் இம்முறை மிகவும் ஆழமாகத் துருவித் துருவி தேடப்பட்டன.

சுமார் இரண்டு மணிநேரமாகாத் தேடுதல் நடத்தினர். அப்போது வீட்டின் ஒரு பகுதியில் இருந்து சந்தேகத்திற்கிடமான ஜெக்கெட் ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

அந்த ஜெக்கெட்டை அணியக்கூடிய உடம்பின் அளவு கிரேஷ்வீனுக்கு இல்லை. ஆனால் இது இளவயதினருக்கே பொருத்தமானது. அந்த ஜெக்கெட்டை நன்கு சோதனையிட்டனர்.

அதனுள் இருந்து படக்கசட்டுக்களை வாடகைக்குவாங்கிய ரசீது ஒன்று இருந்தது. அதனையும் ஜெக்கட்டையும் எடுத்துக் கொண்டு கில்லரின் வீட்டுக்குச் சென்றனர்.

அதனை கில்லரின் பெற்றோரிடம் அவர்கள் காட்டினார்கள். கில்லரி இறுதியாக அணிந்து இருந்தஜெக்கட் இது எனப் பெற்றோர் உறுதிப்படுத்தினர். டிசெம்பர் மாதம் சிக்காக்கோவின் பனிக்காலம்.

இதனையடுத்து உளவுத்துறையினரால் மூன்றாவது முறையாகவும் கிரேஷ்வீனின் வீடு சோதனையிடப்பட்டது. அது என்றுமில்லாத பாரிய தேடுதல் வேட்டையாய் இருந்தது.




அத்தேடுதலின்போது வீட்டின் ஒரு பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியது. அது உயிரினம் ஒன்று இறந்து அழுகிய நாற்றம் என்பதை உளவுத்துறையினர் உணர்ந்தனர்.

வீட்டுத் தரை ஒன்றில் காணப்பட்ட வெடிப்பின் ஊடாகவே அந்த நாற்றம் வெளிவந்தது. அந்த இடம் தோண்டப்பட்டது. அங்கே அழுகிய நிலையில் 10 சடலங்கள் காணப்பட்டன.

ஆனால், இப்பிணங்களிடையே கில்லரின் பிணம் இருக்கவில்லை. இப்பிணங்கள் பல மாதங்களுக்கும் முன்பு புதைக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து உஷாரான உளவுத்துறையினர் வீட்டைச் சுற்றித் தேடுதல் நடத்தினர். வீட்டைச் சூழப் படர்ந்திருந்த பனிக்கட்டிகளையும் உடைத்து அகற்றினர்.

வீட்டுக்குப் பின்புறம் இருந்த பனிக்கட்டிக்கும்பம் ஒன்றை உடைத்து அகற்றும் போது அதற்குள்ளே அரைகுறை ஆடையுடன் இன்னொரு பெண்ணின் சடலம் சிக்கியது. அதனை வெளியே எடுத்தபோது அது கில்லரின் சடலம் என கில்லரின் பெற்றோர் அடையாளம் காட்டினர்.

இதனையடுத்து இன்னும் பல சடலங்கள் வீட்டின் பல இடங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்டன. கிரேஷ்வீன் கைது செய்யப்பட்டார்.

வேலை தருவதாகக் கூறி பல இளம் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய பின்பு அவர்களைக் கொலை செய்து, தனது வீட்டுக்குள்ளும், வெளியேயும் புதைத்ததை அவர் ஒத்துக்கொண்டார். இவ்வாறு 27 பெண்களின் உடல்கள் அந்த மர்ம மாளிகையில் இருந்து கண்டெடுக்கப்பட்டன.

சிக்காக்கோ நீதிமன்றம் கிரேஷ்வீனுக்கு மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

## சூரியகாந்தியில் மாசில்லா எரிபொருள்

சூரிய காந்தி எண்ணெயில் இருந்து அதிகளவு ஹைட்ரஜன் ஆற்றலைப் பெற முடியும் என்று சமீபத்தில் நடைபெற்ற ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் கார் ஓட்ட முடியும்.



உலகமெங்கும் மாற்று எரிபொருள்கள், மரபுசாரா எரிபொருட்கள் குறித்த விரிவான ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. ஹைட்ரஜன் ஆற்றல் தற்போது அனைத்துத் தொழிற்துறைகளிலும் அதிகமான அளவில் பயன்படுத்தப் படுகின்றது.

தனிம வரிசை அட்டவணையில் முதல் தனிமமான ஹைட்ரஜன் ஆற்றல் அதிகளவு திறன் உடையதாகக் கருதப்படுகின்றது. மற்றைய ஆற்றல்களோடு ஒப்பிடுகையில் இது சுற்றுச் சூழலுக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்பது இந்த ஆற்றலின் கூடுதல் அம்சமாகக் கருதப்படுகிறது.

இந்த ஹைட்ரஜன் ஆற்றல் தற்போது 'ஆட்டோமொபைல்' துறையிலும் வீடுகள், தொழிற்சாலை மற்றும் அலுவலகங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

'அமெரிக்க கெமிக்கல் சொசைட்டி' ஹைட்ரஜன் ஆற்றலை, அறிவியல், தொழில் நுட்பம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்பட வேண்டும் எனத் தற்போது பரிந்துரை செய்துள்ளது.

சூரியகாந்தி எண்ணெயில் இருந்து பெறப்படும் ஹைட்ரஜன் ஆற்றல் மிகவும் மலிவானதாக இருக்கிறது. மற்ற முறைகளில் ஹைட்ரஜன் ஆற்றலை உற்பத்தி செய்யும் போது கார்பன் மோனாக்சைடு, கார்பன் டையாக்சைடு, ஹைட்ரோ கார்பனான மீதேன் போன்றவாயுக்கள் வினை பொருட்களாக உற்பத்தியாகின்றன. இந்த உடன் வினை பொருட்களில் சுற்றுச் சூழல் மாசுபாட்டை ஏற்படுத்தும் வாய்ப்புகள் மிகுதியாய் உள்ளன.

ஆனால், சூரியகாந்தி எண்ணெயில் இருந்து ஹைட்ரஜன் ஆற்றலைத் தயாரிக்கும் போது இத்தகைய மாசுபடுத்தும் உடன் விளை பொருட்கள் தோன்றுவதில்லை. தற்போது சூரியகாந்தி எண்ணெயை நேரடி எரிபொருட்களாகப் பயன்படுவதை விட அவற்றில் இருந்து ஹைட்ரஜன் ஆற்றலை உற்பத்தி செய்து அதனை எரிபொருட்களாகப் பயன்படுத்தும் முறை பரவலாகி வருகிறது.



## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெட் குறும்பு




முன்னால் பார்த்தால் நாய்முகம் தெரிகின்றது. ஆனால், பின்னால் பார்க்கும் போது தெரியும் முகம்...?

# சித்திரச் சிரிப்பு




# ஒளிந்திருக்கும் ஓவியம்



இரண்டு யானைகள் சேர்ந்துதான் இன்னொரு யானையை உருவாக்கும். ஆனால், அருகேயுள்ள படத்தில் சில உயிரினங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு யானையை உருவாக்கியுள்ளன.

இவற்றில் ஊர்வன, பறப்பன, நடப்பன, ஓடுவன, நீந்துவன என்று எல்லா வகையான உயிரினங்களும் அடங்கியுள்ளன. கொஞ்சம் ஆற அமர்ந்து என்னென்ன விலங்குகள் இதிலே அடங்கியுள்ளன என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம். ஆகக் கூடுதலான மிருகங்களைக் கண்டுபிடிப்பவரை - சுடர் ஒளி நிறுவனத்துக்கு அழைத்து பெரிய விழா ஒன்று ஏற்பாடு செய்து - பண முடிப்பொன்றை பரிசாக வழங்கலாம் என்று எ.... எங்களுக்கு ஆசை தான். ஆனால், தற்போதைய விலைவாசி ஏற்றத்துக்கு மத்தியில் இதெல்லாம் நடக்கக்கூடிய காரியமா என்ன...? எனவே, நீங்களே கண்டுபிடித்து... உங்களை நீங்களே பாராட்டிக் கொல்லுங்கள்... சீ..... கொள்ளுங்கள்.

# ஜோக்

தொழில் அதிபர் ஒருவர் முக்கியமான கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிக் கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் எவராவது தனக்கு தொலைபேசி எடுத்து தொந்தரவு செய்வார்கள் என்பதற்காக - யார் தொலைபேசி எடுத்தாலும் தன்னை இப்போது தொடர்பு கொள்ள முடியாதென்று சொல்லும்படி தனது உதவியாளரிடம் சொல்லி இருந்தார்.

தொடர்ச்சியாக தொலைபேசிகள் அவருக்கு வந்து கொண்டே இருந்தன.

உதவியாளரும் "தொழில் அதிபர் முக்கியமான வேலையில் இருக்கிறார். இப்போது அவருடன் பேச முடியாது" என்று கூறிக் கொண்டே இருந்தார்.

இறுதியாக ஒரு தெலைபேசி அழைப்பு வந்தது. தொழில் அதிபரின் பெயரைச் சொல்லி, "அவர் இருக்கிறாரா?" என்று கேட்டது ஒரு பெண் குரல் கண்டிப்புடன்.

அவருக்கும்.. "இருக்கிறார் ஆனால், தற்போது தொடர்புகொள்ள முடியாது" என்று சொன்னார் உதவியாளர்.

"நான் அவருடைய மனைவி பேசுகிறேன்... அவசரமாகப் பேசவேண்டும்.." என்றது மறு முனைக்குரல்.





உதவியாளர் சொன்னார், "மன்னிக்க வேண்டும் அம்மணி. அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கும் எல்லாப் பெண்களும் இப்படித்தான் சொல்கிறார்கள்" - என்று சொல்லியபடி தொலைபேசியை வைத்துவிட்டார்.

# கண்ணாமூச்சி



மேலேயுள்ள படத்தை வைத்தகண் வாங்காமல் ஒரு நிமிடத்துக்குப் பாருங்கள். அதே பார்வையை சொஞ்சம் திருப்பி அருகே உள்ள வெள்ளைத் தாளின் மீது பதியுங்கள். அந்தப் படத்தின் உண்மையான விம்பம் தெரியும்.

# நெட் கற்பனை



தற்போதெல்லாம்.. நவீன குளிரூட்டப்பட்ட பஸ் வண்டிகள் தெருவிலே ஓடிக் கொண்டல்ல.... மிதந்து கொண்டு செல்லும் காலம்... ஆனால், அவை எல்லாம் நகரப்புறத்துக்குத் தான் சரி... புளுதியை வாரி இறைக்கும் குண்டும் குழியுமான வீதிகளை கொண்ட கிராமப்புறங்களுக்கு அவை ஒத்துவரா. எனவே.... அவ்வாறான வீதிகளில் ஓட இவ்வாறாக பழைய கைவிடப்பட்ட ரயில் பெட்டிகளை எடுத்து - லாரிகளுக்குப் பின்னே பொருத்தி ஓட விட்டால் மலசல வசதிகளுடன் கூடிய பஸ் வண்டி தயார்.... ஏதோ எமக்கு இது நல்ல ஐடியாவாகப் படுகிறது. முடிந்தால் செய்து பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடக்கமா...? முடிவா...?

அன்றும் அவள் வழமை போல் அதிகாலையில் எழுந்து வீட்டுவேலைகள் சிலவற்றினைச் செய்துவிட்டு, நீராடி வெள்ளை உடை அணிந்துகொண்டுவர அம்மா உணவு கொண்டுவந்தாள். அவசரம் அவசரமாக இரண்டு வாய் சாப்பிட்டுவிட்டு சிட்டாகப் பறந்தாள் பாடசாலை நோக்கி.

வதனி இப்போது க.பொ.த. உயர்தரம்படிப்பவள். அவளுடைய குடும்பம் ஆறுபேரைக் கொண்டது. மூத்தவர் அண்ணா சிவா. அவன் உயர்தர பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காக காத்திருந்தான். அடுத்தது அக்கா சிந்து. அன்னியன் எம்மண்ணை ஆட்டிப் படைப்பதை அடக்குவதற்காகப் போராடச் சென்றுவிட்



டாள் அவள். வதனிக்குப் பின் ஓர் தம்பி. அவன் இப்பொழுதுதான் நேசறி படிக்கின்றான். அம்மா, அப்பா என்று ஓர் நடுத்தரமான எண்ணிக்கையை உடையது அவளுடைய குடும்பம்.

அவளுடைய குடும்பத்தவர்களும் ஈழத்தமிழர்படும் இடம் பெயர்வு அவலத்துக்கு உட்பட்டவர்கள் தான். சொந்த மண்ணை இழந்தாலும் வன்னியில் பொருளாதாரச் சிக்கலினால் கொடூரமான வறுமை அவர்களைச் சூழ்ந்திருந்தது. உண்ணுவதற்கு உணவின்றி மூன்று வேளையும் கஞ்சி குடித்து காலங்கடத்தி வரும் வேளையில் தான் கடவுளும் கண்திறந்தான்.

யுத்தம் ஒய்ந்து சமாதானம் உதயமானது. சமாதானம் உருவானதும் வதனியும் அவளது குடும்பமும் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பினர். வறுமையின் கோரப்பிடியில் அகப்பட்டிருந்தவர்களுக்கு, அவர்களின் ஊர் கை கொடுத்தது. வறியவர்களும் வாழ வழிசெய்யும் கற்பகத்தருக்களும், தென்னையும் நிறைந்திருந்த அந்த ஊர் அவர்களுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது.

மேலும், அவர்கள் தங்கள் தகுதிக்கேற்ப ஒரு சிறிய கடையும் போட்டு நடத்திவந்தார்கள். பாடசாலை முன்பு அது இருந்ததால் ஓரளவு வியாபாரம் போனது. இவ்வாறு அவர்கள் இன்று மற்றவர்களுக்குக் கடமைப்படாமல் வாழ்கின்றார்கள் என்றால் அது அவளது அம்மாவினால் தான். வதனியின் அப்பா மதுவிற்கு அடிமையான மனிதர். தன் வீட்டைப்பற்றி சிந்திக்காது குடியிலேயே வாழ்பவர். போதாக்குறைக்கு அம்மாவுக்கு அடியும், உதையும் தான். வதனி பிடிக்கப்போனால் அடியில் கொஞ்சம் அவளுக்கும் தான்.

அவளுக்கு அப்பா மேல் எப்போதும் வெறுப்பு. அம்மாதான் அவளின் உயிர் மூச்சு கண்கண்ட தெய்வம் எல்லாம்.

வதனியின் இன்றைய இலட்சியம் எல்லாம் கல்வி தான். அவள் படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் கெட்டிக்காரி. போதாக்குறைக்கு, நாடகங்கள் தலைமைத்துவங்கள் என்று எல்லாத் துறைகளிலும் மற்றோர் வியக்கத்தரும் வகையிலே திகழ்ந்து வருகிறாள். அவள் தன் நண்பிகளுக்கு அடிக்கடி கூறுவது "நான் நன்றாகப் படித்து அம்மாவுக்குப் பெருமை சேர்ப்பதுடன் அவளைக் கண் கலங்காமல பார்க்கணும்" என்பது தான்.

இவ்வாறு தானும் தன் குடும்பமும் என்று வாழ்ந்து வந்தாள் வதனி.

ஒரு நாள் அவள் வீட்டினுள்ளே இருந்து படித்துக் கொண்டிருந்த வேளை யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டு வெளியே வந்தாள். கேற்றடியில் யாரோ இளைஞன் நிற்பதைக் கண்டாள். எனவே, கொஞ்சம் எட்டவே நின்றுகொண்டு "யார் நீங்கள் என்ன விசயம்" என்று அமைதியாகக் கேட்டாள்.

"நான் அருண். சிவாவின் பிறண்ட். சிவா நிற்கிறானா?" என்று அவனும் கொஞ்சம் அமைதியாகத் தான் கேட்டான்.

வந்திருப்பவர் தன் அண்ணாவுடன் நண்பர் என்பதைப் புரிந்த வதனி "இல்ல அண்ணா எங்கையோ போட்டார். இப்ப வந்திடுவார். நீங்கள் உள்ள வந்து இருங்கோ" என்றாள்.

அவளின் அழகில் அருண் கொஞ்சம் மயங்கித் தான் போனான். தன் நண்பனுக்கு இப்படி ஒரு அழகான தங்கை இருக்கிறாளா என்று எண்ணி ஆச்சரியப் பட்டான்.

"என்ன யோசிக்கிறியள் உள்ள வாங்கோ" என வதனி மீண்டும் கேட்க சுய நினைவுக்கு வந்த அருண் அமைதியாகப் போய் நாற்காலியில் அமர்ந்தான்.

வதனி தன் அம்மாவிடம் சென்று "அண்ணாவின் பிறண்ட் வந்திருக்கிறார்" என்று கூறியதும், அவளும் ஆவலுடன் கடைக்குள் இருந்த சோடா ஒன்றினையும் எடுத்துக் கொண்டு அங்கு சென்றாள். சோடாவினையும் அருந்தக் கொடுத்து சிறிது நேரம் இருந்து அருணுடன் உரையாடிவிட்டு "தம்பி இப்ப வந்திடுவான் இருங்கோ... நான் கடைக்குள்ள போறன்" என கூறிச் சென்றாள்.

[illegible] வதனி யைப் பார்த்து.

"நீங்கள் என்ன படிக்கிறியள்?" என்று கேட்டான் அருண்.

"நான் இம்முறை ஏ.எல். சோதனை எடுக்கிறன்"

"அப்படியா.... பரீட்சை நெருங்கிறதே படித்து விட்டீர்களா?"

"ஓ! ஓரளவு படிச்சிட்டன்"

இவ்வாறு அவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும் போது சிவாவும் வந்து சேர்ந்தான்.

அட மச்சான் எப்படி வந்தனி என்று கேட்டுக் கொண்டே சைக்கிளால் இறங்கினான் சிவா.

"இப்ப கொஞ்சம் முன்னர் தான் வந்தனான். எங்கையோ போட்டாய் இப்ப வந்திடுவாய் என்றிச்சினம், அது தான் இருக்கிறன்."

"சரி என்ன மாதிரியடா படிப்புக்கள். போனமுறைதான் ரிசல்ட்டும் அப்பிடி இப்பிடியாய்ப் போச்சு. இம்முறையாவது வந்துட்டுதெண்டால்" என்று அவர்கள் உரையாடிக்கொண்டிருந்த போது வதனி அவர்களுக்குத் தேநீர் கொண்டு வந்தாள்.

தேநீரை எடுத்துகுடித்துவிட்டு சிறிது நேரத்தின் பின்பு அருண் அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு வீடு செல்ல சைக்கிளை மிதித்தான்.

அருணால் வதனியை மறக்க முடியவில்லை. அவளது பால்போன்ற வதனம் கண்ணுக்குள் வந்து வந்து போனது. அவளது நீண்ட கூந்தல், மெல்லிய உடல், பெண்களுக்கென்றே அமைந்த நடை, உடை, பாவனை எல்லாமே அருணைக் கொள்ளை கொண்டு விட்டன.

'ஆ.... இப்படியொரு பெண் கிடைக்க வேண்டுமென்று எத்தனை நாளாய் எதிர்பார்த்திருந்தன். இவள் மட்டும் என் காதலியாய் கிடைச்சிட்டால்'.... என்றெல்லாம் கற்பனையில் மிதந்தவாறு வீடு வந்து சேர்ந்தான்.

நாட்கள் நகர்ந்தன. ஆனால் வதனி மட்டும் அவன் மனதைவிட்டு நகரவில்லை.

நண்பனுடைய சாட்டில் அடிக்கடி அவர்களுடைய வீடு செல்வதும் நன்றாகப் பழகுவதும் தேவைப்படும் வேளையில் சிறுசிறு உதவிகள் செய்வதுமாக மாதங்கள் பல கடந்தன.

அருணால் தனது காதலை மறைத்து வைத்திருக்க முடியவில்லை. தன் நண்பன் குமாரை அணுகி வதனியிடம் தன் விருப்பத்தினைக் கூறுமாறு தெரிவித்தான். அவனும் அதற்கு சம்மதித்து சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தான்.

ஒரு நாள் கோயிலுக்கு வந்த வதனியைத் தனியே கண்டகுமார், அருணின் விருப்பத்தை தெரிவிப்பதற்காக அவளிடம் சென்றான்.

"வதனி நான் உங்களை ஒன்று கேட்பன். இதை நீங்கள் வீட்டிலோ அல்லது வேறு எவரிடமோ கூறக்கூடாது" என்றான்.

"பரவாயில்லை குமாரண்ணா கூறுங்கள்" என்றாள் வதனி.

"அது வந்து வதனி இவன் அருண் இருக்கிறானே...!"

"ஆம் அருண் அண்ணா அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் நெடுக வரும் [illegible], ரொம்ப நல்லவரும் எங்களுக்கு நிறை உதவி கூடச் செய்திருக்கிறார்."

"அவன் உங்களிடம் ஒன்று கேட்கச் சொன்னவன். அதற்கு நீங்கள் சம்மதிக்கணும் வதனி"

"சரி என்னால் முடியுமான விடயம். எதுவாக இருந்தாலும் கட்டாயம் சம்மதிப்பன்."

"வதனி உங்களை அருண் விரும்புகிறான்... உங்களில் உயிரையே வைத்திருக்கிறான். நீங்கள் இல்லாமல் வாழமாட்டான் என்கிறான்." என ஓர் பேரிடியையே இறக்கினான் குமார்.

இதனைக் கொஞ்சம் கூட எதிர்பார்க்காத வதனி பெரும் அதிர்ச்சி அடைந்தாள்... சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டுப் பின்பு கூறினாள்.

"நான் அவரை என் சொந்த அண்ணாவில் ஒருவராத்தான் நினைச்சுப் பழகினனான். வேறு எந்த நினைப்பும் என் மனதில் சற்றேனும் இருக்கவில்லை. அவர் இப்படித்தான் நினைத்துப் பழகினார் என்று சிறிதளவாவது எண்ணிப் பார்த்ததில்லை.

எனக்கு இப்போது காதலிக்கிற எண்ணமே இல்லை.நான் படிக்கணும். தன் இரத்தம் பிழிந்து எனக்காக உழைக்கும் அம்மாவினுடைய எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் காக்கவேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக என் அம்மாவை கடைசிவரை கண்கலங்காது பார்க்கணும்.

இன்றைய நிலையில் எனக்கு கல்விதான் முக்கியம். வேறு எதுவுமே எனக்கு முக்கியமாகத் தெரியவில்லை.

தயவு செய்து அருண் அண்ணாவிடம் சொல்லுங்கள். என்னில் ஏதும் தப்பிருந்தால் மன்னிக்கச் சொல்லி. நான் அவரில் அளவற்ற அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறன். ஆனால் காதல் என்று இப்ப என்னால் கூறமுடியாது" என்றாள் வதனி.

வீடு சென்ற வதனிக்கு எதுவுமே செய்ய முடியவில்லை. ஏதோ தப்புச் செய்துவிட்டதுபோல் மனம் தத்தளித்தது. இரவு படிக்கக் கூட அவளால் முடியவில்லை.

'என்மேல் அளவற்ற அன்பு வைத்திருந்த அருண் அண்ணாவின் மனதைப் புண்படுத்திவிட்டேனா. அல்லது அம்மாவுக்குத் துரோகம் செய்து விட்டேனா?' என்று தனக்குள்ளே மாறி மாறி வினாக்களை எழுப்பிக்கொண்டு இருந்தவள் இறுதியில் ஓர் முடிவுக்கு வந்தாள்.

'கல்விக்காக எதையும் இழக்கலாம். ஆனால், எதற்காகவும் கல்வியை இழக்கக்கூடாது என்றுதான் எங்கட ரீச்சர் அடிக்கடி சொல்லுறவ. எனவே இன்றைய நிலையில் கல்விதான் எனக்கு முக்கியம்' என்று யோசித்தவள்.

'வாழ்க்கையின் வட்டத்தில் காதல் என்பதும் இருக்கும் தானே. இது உலகில் உள்ள எல்லோருக்கும் உரியது தானே. எதிர்காலத்தில் எனக்கு ஓர் அன்பானவரைத் தேடிக்கொள்வது நானாக இருந்தால் என்ன? அருண் அண்ணா மிகவும் நல்லவர். எங்கள் குடும்ப நிலையை நன்கு அறிந்தவர். அதைவிட அம்மாவுக்கும் அவரை நல்லாய்ப்பிடிக்கும் எனவே அவரை நான்...?' என்று சிந்தித்தவள் மீண்டும் சுயநினைவுக்கு வந்தவளாக 'எல்லாத்துக்கும் முதலில் நல்லாய்ப்படிச்சு சோதினையை எழுதுவம். அதுக்கு பிறகு எல்லாத்தையும் யோசிப்போம்' என்று தனக்குள்ளே முடிவு கண்டவள் போல படிப்பதற்காகப் பாடப்புத்தகத்தை விரித்தாள்.

(யாவும் கற்பனை)

செம்பியன் புதல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் பாதையில் டெனிஸ் உலகில் இந்திய வீரர் பிரகாஷ் அம்ரித்ராஜ்

முன்னணி டெனிஸ் வீரர் விஜய் அம்ரித்ராஜின் மகனான பிரகாஷ் அம்ரித்ராஜ், தந்தையைப் போன்று டெனிஸ் அரங்கத்தில் பிரகாசிக்க ஆரம்பித்துள்ளார்.

இவரின் தந்தையான விஜய் அம்ரித்ராஜ் இந்தியாவின் சிறந்த டெனிஸ் வீரர்களுள் ஒருவராவார். இவர் 16 ஒற்றையர் பிரிவுகளிலும், 13 இரட்டையர் பிரிவுகளிலும் சம்பியன் பட்டம் வென்றுள்ளதோடு, இந்தியாவை இருதடவைகள் டேவிஸ் கிண்ண இறுதிப் போட்டிக்கு இட்டுச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல் பிரகாஷின் சிறிய தந்தையான அனன்ட் என்பவரும் சிறந்த டெனிஸ் வீரராக மிளிர்ந்தவர். அவர் கூட 12 போட்டிகளில் வெற்றி பெற்று டெனிஸ் விளையாட்டில் இந்தியாவின் கீர்த்தியை மேலும் உயர்த்தியவர். தந்தையைப் போன்று பிரகாஸும் டெனிஸ் உலகில் பிரகாசிப்பார் என அனைவரும் எதிர்பார்ப்பது ,பிரகாஸுக்கு ஒரு பெரும் சுமையைத் தோளில் சுமப்பது போல இருந்தாலும், அது அவர் விருப்பத்துடன் சுமக்கும் சுமையே.



பிரகாஷ் அம்ரித்ராஜ்

21 வயதாகும் பிரகாஷ் டெனிஸில் சாதனைகள் படைக்கவில்லை என்றாலும் ரசிகர்கள் அவர் சாதனை படைப்பார் என்று எதிர் பார்க்கின்றனர். இந்த எதிர்பார்ப்பு அவருக்கு அவர் நன்றாக விளையாட வேண்டும் என்ற அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ள போதும், அவர் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

''என் மீது பெரும் எதிர் பார்ப்பு உண்டு. இதற்குக் காரணம் எனது தந்தை. அவரை முழுஇந்தியாவும் நம்பியது. தந்தையும் அந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறே நடந்து கொண்டார் அதே எதிர்பார்ப்பையே என்னிலும் இந்தியா வைத்துள்ளது'' எனத் தெரிவித்திருக்கிறார் பிரகாஷ். தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் டெனிஸ் தொடர் ஒன்று அண்மையில் நடைபெற்றது. இதில் பிரகாஷ் பெரும் வரவேற்புப் பெற்றார். ஆயினும் அத்தொடரில் அவர் சோபிக்க வில்லை. 6–3, 6–3 என்ற செட் கணக்கில் பிரேஸிலைச் சேர்ந்த பிலேவியோ சரேட்டாவிடம் தோற்றார். எனினும், பிரகாஷ் அந்த ஆட்டத்தில் சிறப்பாகவே முயன்றிருந்தார். பிரகாஷ் பங்கேற்ற அத்தொடரைக் கண்டுகளிக்க அவரின் தந்தை விஜய்யும் தாய்லாந்து சென்றிருந்தார்.

பயிற்று விப்பாளர் என்ற வகையிலும் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர் என்ற வகையிலும் விஜய் தனது மகனை உற்சாகப் படுத்தினார். ஐம்பது வயதை எட்டும் விஜய், சிறிய அளவிலான டெனிஸ் ஆட்டங்களில் தற்போது விளையாடி வருகின்றார். அத்தோடு வர்ணனையாளராகவும் கடமையாற்றுகின்றார். சர்வதேச டெனிஸ் வட்டத்தில் இருந்து ஓய்வு பெற்றதும் சினிமாவில் தனது முகத்தைக் காட்டி வருகிறார். ஒக்டோபசி (Octopussy) எனும் படத்தில் ஜேம்ஸ் பான்ட் என்பவராக விஜய் நடித்திருக்கிறார்.

பிரகாஷின் தந்தையைப் போலவே, பிரகாஷும் டேவிஸ் கிண்ணத்திற்காக விளையாட ஆவல் கொண்டுள்ளார். இந்தியாவை 1974 இல் டேவிஸ் கிண்ண இறுதிப் போட்டிவரை விஜய் இட்டுச் சென்றார். இறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியா போட்டியிட்டது. இன ஒதுக்கல் காரணமாக இந்தியா விளையாடாமல் போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்ள, இதனால் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது.

தானும் சில டேவிஸ் கிண்ணத் தொடர்களில் விளையாடியுள்ளதாகக் குறிப்பிட்ட பிரகாஷ் இது தனக்குப் பெரிதும் உதவியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அன்டி ரோடிக், மரட்சபின் போன்ற முன்னணி வீரர்களுடன் பயிற்சியில் ஈடுபடும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்ததாகவும், அவர்களிடமிருந்து தான் நிறையக் கற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறியுள்ள பிரகாஷ், அவர்களை அண்மிக்க தனக்கு அதிக தூர இடைவெளி இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.



தந்தை விஜய் அம்ரித்ராஜுடன் பயிற்சியை முடித்து விட்டு மைதானத்தைவிட்டு வெளியேறும் பிரகாஷ் அம்ரித்ராஜ்

கடந்த வருடம், தொடர்ச்சியாக 3 தொடர்களை பிரகாஷ் வென்றுள்ளார். இன்னொரு தொடரில் அரையிறுதிக்கும் தெரிவாகியிருந்தார். ஆயினும் எ.டி.பி டெனிஸ் தொடரில் தனது முழுத்திறமையையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதில் அவர் ஆர்வமாக உள்ளார்.

டெனிஸ் விளையாட்டில் இந்தியாவின் பெயரை முத்திரைபதிக்க வைக்கும் ஒரு பாதையில்தான் தாம் இருக்கின்றார் என பிரகாஷ் உணர்கிறார். எனவே டெனிஸ் அரங்கத்தில் சாதனைகளை ஏற்படுத்தக் கூடிய ஒரு சிறந்த வீரராக பிரகாஷ் வருவார் என்றே கூறலாம்.

# எல்லாமே பணத்திற்காக மியாண்டட் எதிர்ப்பு

மினி உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் எனப்படும் ''ஐ.சி.சி சாம்பியன் டிராபி தொடர் இங்கிலாந்தில் நடப்பதற்கு பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் ஜாவிட் மியாண்டட் கடும் எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறார்.

இது குறித்து அவர் கூறியதாவது:–

''இங்கிலாந்தின் பருவநிலை மோசமாக இருந்தது. அங்கு கிரிக்கெட் போட்டி நடத்துவதற்குரிய கால நிலை அப்போது இல்லை. அந்தச் சூழ்நிலையில் மினி உலகக்கிண்ணத் தொடரை அங்கு நடத்துவது பொருத்தமற்றது. மேலும் இரண்டு புதிய விதிகளை பரிட்சார்த்தமாக இந்த போட்டியின் மூலம் அறிமுகப் படுத்தியுள்ளார். இது பாரம்பரிய கிரிக்கெட்டிற்கு எதிரானது. இதையெல்லாம் பார்க்கும்போது பணத்திற்காக திட்டமிட்டே இந்தப்போட்டி நடத்தப்படுகிறதோ? என்ற சந்தேகம் ஏற்படுகிறது '' என்று கூறி இருக்கிறார் மியாண்டட்.



# இந்தியாவிற்கே வெற்றிபெற அதிக வாய்ப்புள்ளது – கங்குலி

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடரில் இந்தியாவுக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:–

''கடந்த சில மாதங்களில் நடைபெற்ற ஒரு தின ஆட்டங்களில் இந்திய அணி சிறப்பாக விளையாடவில்லை.

''அதேநேரத்தில் உலக சாம்பியான அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்தியாவுக்கு மனோரீதியாக சாதகமான அம்சங்கள் உள்ளன.

''தங்களுக்கு எதிராக மிகச் சிறப்பாக விளையாடக்கூடிய அணி இந்தியா என்பதை அவுஸ்திரேலியாவும் உணர்ந்துள்ளது. உள்நாட்டில் சிறப்பாக விளையாடும் அணி என்ற பெ[illegible] இந்தியாவுக்கு உள்ளது. இவை எல்லா[illegible] நமக்கு சாதகமான விடயங்களாகும்.

அதனால், இத்தொடரை நிச்சயமாக வென்றுவிடுவோம் என்று இப்போதைக்குக் கூறமாட்டேன். எதையும் தற்போதைக்கு ஊகிக்க முடியாது.

ஆனால், வெற்றிபெறும் வாய்ப்பு எமக்கே அதிகம்''– எனக் கூறினார்.




இந்தியா, ஆவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே தற்போது நடைபெற்று வரும் டெஸ்ட் தொடர் 'பார்டர் காவஸ்கர் டிராபி' என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கிண்ணத்தை தொடர்ச்சியாக இருமுறை இந்திய அணிதான் வென்றிருக்கிறது. 2000–01 ஆம் ஆண்டு மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஸ்டீவ் வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணியை சௌரவ் கங்குலி தலைமையிலான இந்திய அணி 2 – 1 என்ற முன்னிலையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. கடந்த ஆண்டு இந்திய அணி அவுஸ்திரேலிய சென்ற போது தொடர் 1 – 1 என்ற சமனில் முடிந்தது.

இதன்படி இந்தியா கிண்ணத்தை தக்கவைத்துக்கொண்டது. இம்முறை தொடர் சமனில் முடிந்தாலோ... அல்லது இந்தியா வெற்றி பெற்றாலோ கிண்ணம் அந்த அணிக்கே. அவ்வாறு நடந்தால் தொடர்ந்து மூன்றாவது முறையாக 'பார்டர் கவாஸ்கர் டிராபி'யைக் கைப்பற்றி இந்தியா 'ஹட் ரிக்' அடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார 'ராசிபலன்' 10–10–2004 , 16 –10–2004

### பொ. சந்திரன்

# ராசிபலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | செவ்வாய் அத்தம் சந்திரன் / புதன் சித்+சுவாதி செவ்+ராகு / சுக்கிரன் பூரம் சுக்கிரன் / சூரியன் சித்திரை செவ்வாய் / குரு அத்தம் சந்திரன் / சனி புனர்பூசம் குரு | | |
| | | | சுக்கிரன் |
| | | கேது புதன் | சூரியன் செவ் குரு |

புரட்டாதி 25முதல் ஐப்பசி 01வரை

சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை

**மேடம் : அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8)உரிய செவ்வாய்6இல் இருப்பது விசேஷம். மேலும், சந்திர சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ராகு ராசியில் இருப்பது பிரச்சினை. மன அமைதி இருக்காது.(2,7)உரிய சுக்கிரன் ஐந்தில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. திருமணத்துக்கு குரு முக்கியமானவர். அவர் மறைவது நல்லதல்ல. நான்காம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும்.(10,11)தொழிலுக்கும்,லாபத்துக்கும் உரிய சனி மூன்றாம் வீட்டில் இருப்பது சிறப்பு. தொழில் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். 7இல் கேது இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் நாலில் இருப்பது விசேஷம். மேலும், தன் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில்அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு.வீடு,வாகனம் வாங்கப் பலன் உண்டு.(2,5)உரிய புதன் 6இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும்.குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தரும்.(7,12)உரிய செவ்வாய் ஐந்தில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். இருப்பினும் குரு சுகம் இருப்பதால் நிலைமையில் மாற்றம் உண்டாகலாம். குரு ராசியைப் பார்ப்பதும் நல்லது. சகல தோஷங்களும் நிவர்த்தியாகும்.(9,10)தர்ம கர்மாதிபன் சனி இரண்டில் இருப்பது நல்லதல்ல.தொழில் துறையைப் பாதிக்கலாம்.சுக்கிரன் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால் ஆறுதல் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4)உரிய புதன் ஐந்தில் இருப்பது சிறப்பு. மேலும்,செவ்வாயின் நட்சத்திரத்திலும்,அதன் பின் ராகுவின் நட்சத்திரத்திலும் இருப்பது பரவாயில்லை. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு.வீடு, வாகனம் லாபம் தரும். ராசியில் சனி இருப்பது தேவையில்லாத பிரச்சினை எல்லாம் வீடு தேடி வரும். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும்.(7,10)உரிய குரு நாலில் இருப்பது நல்லதல்ல. திருமண வாய்ப்புப் பாதிக்கலாம்.தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. மேலும், சனி இவ்விரு வீடுகளையும் பார்ப்பது தடைகளை ஏற்படுத்தலாம். மேலும், ராசிக்குரிய புதனோடு கேது கூடுவதும் பிரச்சினை தான். சனி வழிபாடு நன்மை செய்யும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிக்குரிய சந்திரன் சிங்கம் முதல்விருச்சிகம் வரை அதாவது 2ஆம்,3ஆம்,4ஆம்,5ஆம் வீடுகளைக் கடந்து செல்வர். இதில் மூன்றாம் வீட்டில் மட்டும் நன்மை செய்வர். ஆகவே, எடுத்த முயற்சி தாமதமாகலாம். இரண்டுக்குரிய சூரியன் மூன்றில் நல்லது. இரண்டில் சுக்கிரன் அதுவும் நல்லது. கையில் பணம் இருக்கும். சுக்கிரன்(4,11) ஆதிபத்தியம் பெறுவதால் வீடு, வாகனம் லாபம் தரும். மூத்த சகோதரத்துக்கும் நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்புப் பாதிக்கலாம்.(5,10) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் தொழில் துறை முன்னேறும். (6,9) உரிய குரு மூன்றில் இருப்பது பிதாவுக்குக் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் இரண்டில் இருப்பது நல்லதல்ல. மேலும், செவ்வாயின் சாரத்தில் இருப்பது பரவாயில்லை. எடுத்த முயற்சி தாமதமாகலாம்.(3,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது சிறப்பு. தொழில் துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் செய்யும். (4,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது பெற்றோருக்கு நன்மையில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. முன்பு இருந்த நோய் விலகும். பழைய கடன் தீரும். குடும்பத்தில் அமைதி இருக்கும். மேலும், குரு சுகம் இருப்பதால் குறை ஒன்றும் இருக்காது. ஆனால், சனி இராசியைப் பார்ப்பது குறை தான்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் இரண்டில் இருப்பது விசேஷம். மேலும், செவ்வாயின் சாரத்திலும் பின்பு ராகுவின் சாரத்திலும் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். தொழில் துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும். (2,9) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது கையில் பணம் இருக்கும். பிதாவுக்குநல்லது. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். மேலும், இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது. குடும்பத்தில் அமைதி இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. சனி, குரு வழிபாடு தீவிரத்தைக் குறைக்க உதவும். அவதானமாக இருப்பது நல்லது. சூரியன் ராசியை விட்டு விலகுவது ஆறுதல் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விசேஷம். மேலும் தன் நட்சத்திரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பிரயாண வாய்ப்பு உண்டு. ராசியில் கேது இருப்பது குறை. மன அமைதி இருக்காது.(2,7)உரிய செவ்வாய் 12இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். அல்லது தடைப்படலாம். (4,5)உரிய சனி 9இல் இருப்பது கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கும் நல்லதல்ல. குழந்தைகளின் செயல்பாடு திருப்திதராது.10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில் துறை முன்னேறும். 7இல் ராகு இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. குரு மறைவது நல்லதல்ல. குரு வழிபாடு அமைதியைத் தரும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1, 6)உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம். மேலும்,சந்திரனின் சாரத்தில்இருப்பதும் நலமே. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு.(2,5)உரிய குரு11இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளில் செயல்பாடு திருப்திதரும்.(3,4)உரிய சனி 8இல் இருப்பது தாய்க்கும் கூடாது. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது.(7,12) உரிய சுக்கிரன் 10இல் இருப்பது நல்லதல்ல. திருமணவாய்ப்புப் பாதிக்கலாம். சயன சுகம் குறையலாம்.10க்குரிய சூரியன் 11இல்இருப்பது தொழில்துறை முன்னேறும். குருசுகம் இருப்பதால்தீய பலனில்இருந்து விடுபட்டு நல்ல பலனை அனுபவிக்கலாம்.

**தனு:மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் இருப்பது அவ்வளவு சிறப்பு இல்லை. ஆனால் சந்திர சாரம் பெற்று இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தாமதமாகலாம். வீடு,வாகனம் செலவை ஏற்படுத்தலாம். ராசியையும், 4ஆம் வீட்டையும் சனிபார்ப்பது கூடாது. (2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில்பணம்இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,10) உரியபுதன்11இல்இருப்பது விசேஷம். திருமணவாய்ப்பு உண்டு. தொழில்துறை முன்னேறும். இருப்பினும் சனி 7 இல் இருப்பது குடும்பத்தில் அமைதி இருக்காது. வெளியாரின் தலையீடு இருக்கலாம்.9க்குரிய சூரியன்10இல் இருப்பது பிதாவுக்கு நல்லது. சனி, குரு வழிபாடு செய்யின் இவ்விரு கிரகங்களும் தோச நிவர்த்தி பெறுவது நல்லது.

**மகரம்:உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும், குரு சாரம் பெறுவது சிறப்பு.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும்.கையில் பணம் இருக்கும்.(4,11)உரிய செவ்வாய்9இல் இருப்பது சிறப்பில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்கள் விசுவாசமாகஇருக்கமாட்டார்கள். (5,10)உரிய சுக்கிரன் 8இல் இருப்பதால்தொழில்துறை முன்னேறும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.7ஆம் வீடு சுத்தமாக இருப்பதாலும், குரு சுகம் இருப்பதாலும் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். (3,12)உரிய குரு 9இல் இருப்பது இளைய சகோதரத்துக்கு நல்லது. சயன சுகம் உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12)உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. குருவின் சாரத்தில் இருப்பது சிறப்பு. எடுத்த முயற்சி தடைப்படலாம். சயன சுகம் குறையலாம்.(2,11)உரிய குரு8இல் மறைவது நல்லதல்ல.கையில் பணம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு கூடாது. நண்பர்களால் தொல்லை இருக்கும்.(3,10)உரிய செவ்வாய் 8இல் இருப்பது தொழில்துறையைப் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது.(4,9) உரிய சுக்கிரன்7இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்லதல்ல.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 7க்குரிய சூரியன்8இல் இருப்பதால் திருமணவாய்ப்புப் பாதிக்கலாம்.7இல் சுக்கிரன் இருப்பதால் கெட்ட பேர் கேட்க வேண்டிய நிலை வரலாம் பாலியல் விவகாரத்தில்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10)உரிய குரு7இல் இருப்பது விசேஷம். மேலும்,சந்திரசாரம் பெற்று இருப்பதும் நல்லது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பக்க உதவிகள் கிடைக்கும்.தொழில்துறை முன்னேறும். இவ்விரு வீடுகளையும் சனி பார்ப்பது கூடாது.(2,9)உரிய செவ்வாய்7இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கு நல்லதல்ல. (4,7)உரிய புதன் 8இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்புப் பாதிக்கலாம். இருப்பினும் குரு7இல் இருந்து நிலைமைகளை சாதகமாக்கலாம். சூரியன், செவ்வாய்7இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 6க்குரிய சூரியன்7இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். சனி வழிபாடு தீயபலனைக் குறைக்கும்.

## சொற்சிலம்பம் போட்டி இல.129

சொற்சிலம்பம் 128 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஒக்டோபர் 17 ஆம் திகதி ஆகும். விடைகள் ஒக்டோபர் 24 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 31 ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.127க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,

கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.129

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | ■ | |
| 13 | | | 14 | | ■ | 15 | |
| | ■ | 16 | | ■ | 17 | | |
| ■ | 18 | | | | ■ | | ■ |
| 19 | | | | ■ | 20 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.127

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 கு | ந் | 3 த | 4 லை | ■ | 5 கு | 6 தி |
| 7 ம | றி | ■ | 8 க | லா | 9 ர | சி | கை |
| த் | ■ | 10 த | டு | ■ | 11 க | னி | ■ |
| 12 து | க | ள் | ■ | 13 க | ளை | ■ | 14 ஆ |
| 15 வ | ள் | ளு | 16 வ | ர் | ■ | 17 த | ர |
| ம் | ■ | 18 ப | டி | ப் | 19 ப | க | ம் |
| ■ | 20 ஆ | டி | ■ | 21 ப | ண் | ■ | ப |
| 22 ஓ | சை | ■ | 23 அ | ம் | பு | ஜ | ம் |

## சொற்சிலம்பம் போட்டி இல.129

**இடமிருந்து வலம்**

1. பாவனை/ நடிப்பு.
4. தங்களுடையது.
7. இரும்பில் பிடிப்பது.
8. சுவை நிரம்பியது.
9. பண் வகைளுள் ஒன்று.
11. துஷ்டதனம்/ அசப்பியது.
12. விழுது விடும் மரம்.
13. விவாதம்.
15. ரக.
16. உயிரின் ஆரம்பம் இங்கு.
17. ஒரு காட்டு மிருகம்.
18. விலங்கின் அடிப்பாதம்.
19. (தாவரத்தின்) முளைவிடும் பகுதி.
20. இது சிறிது என்றாலும் காரம் பெரிது.

**மேலிருந்து கீழ்**

1. பந்தோபஸ்துக்குக் கொடுத்தல் / தீங்கு வராமல் பேணுதல்.
2. சேரும்.
3. இரத்தம்.
4. புதினம் / செய்தி.
5. தரு.
6. கூட்டுவதற்கு உதவும் கருவி.
10. யுத்த முனை.
12. சம்மதச் சொல்.
14. இனிமையான தாவரம்.
15. கலை / துரத்து.
18. சிஷ்யர்களின் தலைவர்

## சொற்சிலம்பம்-126 பரிசு பெறுவோர்.

1. என். சாந்தி,
   பாலத்தோப்பூர்,
   தோப்பூர்.
2. சி. கோபிராம்,
   இல–8, நகரசபை, கண்டி வீதி,
   வவுனியா.
3. ப.கிருசாந்தன், ஆண்டு 5ஏ,
   மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
   மீசாலை.

### பாராட்டுப் பெறுவோர்

1. சுரேந்தினி சண்முகலிங்கம்,
   71/9, காலி வீதி,
   தெகிவளை.
2. ஆர்.ஏ.ஜெயராஜா,
   68/3, கன்னாரு தெரு வீதி,
   கொழும்பு– 13.
3. நா. அச்சுதன்,
   இல.389, திருநகர்,
   யோகபுரம்.
4. சி.மனோகரன்,
   தண்ணீரூற்று,
   முள்ளியவளை.
5. வீ. இராசதுரை,
   வீரபாண்டியன் வீதி,
   துன்னாலை தெற்கு,
   கரவெட்டி.
6. த.ரஜிதரன்,
   பி.மா. சுகாதார சேவைகள் பணிமனை,
   திருகோணமலை.
7. சி.கிருஷ்ணவேணி,
   அம்பாள் நகர்,
   இரணைமடு,
   கிளிநொச்சி.
8. வே. ஞான பண்டிதன்,
   6ஆம் கட்டை,
   சாளம்பைக்குளம்,
   வவுனியா.
9. அ. ஆனந்தி,
   சேனையூர்– 06,
   மூதூர்.
10. இ. சிவசிறிதரன்,
    நாயாறு,
    முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

*செ.யாழினி—வெள்ளவத்தை*

**கேள்வி:**—பித்தா— தற்போது முன்னணியில் நிற்கும்திரைப்படங்களை வரிசைப்படுத்துங்கள்.



**பதில்:**—
வசூல்ராஜா
மதுர
குடைக்குள் மழை

*செ.நளாயினி—மூதூர்.*

**கேள்வி:**— பித்தா! பலகணவன்மார்— மனைவிமாரைக் கை நீட்டி அடிக்கிறார்களே! இது தப்பா?

**பதில்:**— தப்பா, சரியா என்று சொல்லும் அளவுக்கு எனக்கு அறிவு கிடையாது. ஏனென்றால், பல மனைவிமார் — கணவன்மாரைக் கை நீட்டி அடிக்கிறார்களே என்றுநினைத்துக்கவலைப்பட்டுக்கொண்டிருப்பவன் நான். ஆனால், கணவன்— மனைவிமாருக்கு அடிப்பதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவற்றில் ஒரு காரணம் இந்தக் கதை.

நீதிமன்றம் ஒன்றிலே வழக்கு நடந்து கொண்டிருந்தது. அங்கே குற்றவாளியைப்பார்த்து நீதிபதி கேட்டார். ''நீ உனது மனைவியை அடித்துக் கொடுமைப்படுத்துகிறாய் என்று குற்றஞ்சாட்டப்படுகிறதே... ஏன் அவளை அடித்தாய்?'' என்று.

குற்றவாளி சொன்னான். ''என் மனைவி மிகவும் நல்லவள். எந்தத் தப்பும் செய்ய மாட்டாள். அதனால்தான் அடித்தேன்...''

நீதிபதிக்கே ஆச்சரியம். ''ஒரு தப்பும்செய்யாத — நல்லவளான மனைவியை ஏன் அடித்துத் துன்புறுத்தினாய்'' என்று கேட்டார்.

குற்றவாளி சொன்னான். ''ஐயா, எனது மனைவிமிகவும்நல்லவள். பணிவானவள், உத்தமி, பத்தினி... ஆனால் நானோ முரடன், குடிகாரன், கெட்டவன்எனவே இப்படிப்பட்ட நல்லவனான நீ — ஏன் என் போன்ற ஒரு கெட்டவனைத் திருமணம் செய்தாய்... உனக்கு உன்னைப்



போல் ஒரு நல்லவனைப் பார்த்து திருமணம் செய்ய இயலாமல் போய்விட்டதா என்று கேட்டு— கோபத்தில் அடித்தேன் ஐயா'' என்றான் பணிவாக.

*து.விசாலினி, அச்சுவேலி.*

**கேள்வி:**— உமக்கு கவிதை எழுதத் தெரியுமா? தெரியுமென்றால் நல்ல கவிதை ஒன்று தாருமேன்?

**பதில்:**— எழுதுவதைவிட... கவிதையை ரசிப்பதில் நான் தீவிரவாதி... அண்மையில் எஸ்.ரபீக் என்பவர் எழுதிய 'எழுத மறந்த கவிதைகள்' என்ற நூல் கையிலே கிடைத்தது. சும்மா மேலோட்டமாக மேய்ந்து பார்த்தேன். பிடித்தவை சில...

1. காதல் ஓர்
எளிமையான
பாடம்தான்
ஆனால் பலபேர்
அதில்
தோற்றுப் போகிறார்கள்

சன நூலகம்
யாழ்ப்பாணம்

2. நினைவுகள்
குழந்தைகள் மாதிரி
அழுதபின்பு தான்
உறங்குகின்றன.

*த.செந்தமிழன்—வட்டக்கச்சி*

**கேள்வி:**— பித்தா நாம் ஒரு குறும்படம் தயாரிக்கத்திட்டமிட்டுள்ளோம். அதில் உம்மை நடிக்க வைக்கலாம் என்று நினைக்கிறோம். உமக்கு நன்றாக நடிக்கத் தெரியுமா?

**பதில்:**— என்னய்யா கேள்வி இது... திருமணம் முடித்து நான்கு வருடங்கள் முழுதாக முடிந்துவிட்ட ஒருவரைப் பார்த்து நடிக்கத் தெரியுமா என்று கேட்கிறீரே! கேவலமாக இல்லை? ஐயா நான் இப்போது முழுநேர நடிகன்...உமது படத்தில்.

*ஆர்.செல்வி— புதுமுறிப்பு.*


**கேள்வி:**— டியர் பித்தா! ஒரு பெறுமதி மிக்க பொருளைத் தருவதாகக் கூறிவிட்டு ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

**பதில்:**— செல்வி... கவனம். சில பொருட்களை இன்றைக்கு உம்மிடம் தந்தால்... அது உமது கைக்கு வந்து சேரப் பத்து மாதங்கள் ஆகலாம். எனவே... அப்படியான சாமானோ தெரியவில்லை. கவனம்.

*கவின்பூ—யாழ்.*

**கேள்வி:**— அன்பின் பித்தா! ஆண்கள் கர்ப்பம் தரிக்க வெளிக்கிட்டால் அவர்கள் பாடு என்னவாகும்— பெண்கள் நிலை என்னவாகும்?

**பதில்:**— ஆண்களுக்கு ஏற்கனவே தொந்தி. இதில் கர்ப்பமும் தரித்தால் அவர்கள் நிலை என்ன என்பதையும், இப்போது பெண்கள் தங்கள் வயிற்றைத் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு ஒரு வாளி தண்ணீரைச் சுமந்து கொண்டு செல்ல— ஆண்களோ காலைஆட்டிக்கொண்டு பேப்பர் பார்த்துக் கொண்டிருப்பார்களே! அதே நிலை மாறி நடக்கும் என்பதை எமது ஓவியர் சாமி படமாக வரைந்துள்ளார். பார்த்து ரசியுங்கள்.



*சி.நித்தியா—கனகாம்பிகைக்குளம்.*

**கேள்வி:**— பித்தா! நீர் எதிர்வரும் தமிழீழ மாவீரர் நாளுக்கு வன்னி விளாங்குளம் துயிலும் இல்லம் வருவீரா? எதிர்பார்த்திருப்போம்.

**பதில்:**— அம்மா நித்தியா... மாவீரர் நாள் என்பது ஒரு புனிதமான நாள். எமக்காக... எமது இனத்துக்காக, விடுதலைக்காக தமது இன்னுயிரை ஈந்த தியாக தீபங்களை நினைவு கூரும் நாள். அந்த நாளிலே நான் அங்கே வந்து... நான் தான் பித்தன் என்று பந்தா பண்ணுவதை விரும்பவில்லை... அப்படி பந்தா பண்ண... நான் திரைப்பட நடிகனுமில்லை. அப்பாவித் தமிழ் மகன்.

*சி.நித்தி—கிளிநொச்சி.*

**கேள்வி:**— ஜோதிடர்பித்துமணி.. எட்டாம் நம்பரும்—ஆறாம் நம்பரும் சேர்ந்தால் எப்படி?

**பதில்:**— நான் ஜோதிட மணியில்லை.... ஜோதிடத்தில் எல்லாம் நம்பிக்கை இல்லாத மணி. ஆனால், கணக்கிலோ புலி. எட்டாம் நம்பரும், ஆறாம் நம்பரும் சேர்ந்தால் பதினான்கு என்பதைச்சுலபமாகச் சொல்லிவிடும் கணி தப்புலி.



*சு.வதனி, தெஹிவளை.*

**கேள்வி:**— என்ன தற்போது விஜய்யின் காட்டில் மழைபோல் தெரிகிறது. கில்லி — மதுர என்றெல்லாம் வெற்றிப் படமாகவே அமைகிறதே?

**பதில்:**— ஆம்.... அடுத்து வர உள்ள 'திருப்பாச்சி' யும் நிச்சயமான வெற்றிப் படம் என்கிறது சினிவட்டாராம்.

ஏனென்றால் சூப்பர் குட்பிலிம்ஸ் தயாரிப்புகளில் இதுவரை வெளியான விஜய்யின் படம் எதுவும் தோற்றதில்லையாம். எனவே திருப்பாச்சியும் சக்கை போடு போடுமென்கிறார்கள்.

*க.செந்தூர்— முத்து ஐயர் கட்டு*

**கேள்வி:**— அன்பின் பித்தா! சிறு வயதில் பெண்கள் நட்பாகப் பழகுகிறார்கள். வளர்ந்த பின்பு அந்த நட்பை மறந்து விடுகின்றார்கள். இதற்கு காரணம் என்ன?

**பதில்:**— இதுவெல்லாம் அந்த ஹோர்மோன்கள் என்ற இழவுகள் செய்கிற வேலை. சிறுவயதிலே... அப்பா, அம்மா விளையாட்டு விளையாட ஆவலோடு ஓடிவரும் பெண்கள், வளர்ந்த பின்பு இதே விளையாட்டை விளையாட வா என்றால் சீ... போ... என்கிறார்களே! நாங்கள் என்ன இசகுபிசகாகவா கேட்கிறோம். இல்லையே.. சிறுவயதிலே போல்... இல்லாமல் கொஞ்சம் பெரிதாக சட்டி பானை வைத்து அதிலே சமைத்து.. நான் வேலைக்கு போய்விட்டு வருவனாம் நீ சமைத்து வைப்பியாம். நான் வந்து கூப்பிடுவனாம். அதுக்குப்பிறகு இரண்டு பேரும் போய் படுத்துநித்திரை கொள்ளுவமாம்என்று அதேவிளையாட்டை தான் விளையாடக் கேட்கிறோம். ஆனால், எந்தப் பெண்களும் அதற்குச் சம்மதிப்பதில்லையே! ஏன்... அது... அது... அதுவேதான் இந்த ஹோமோன்களின்.. விளையாட்டு......

*தீபன்— உருத்திரபுரம்.*

**கேள்வி:**— பித்தனே! பெண்களுக்காக ஏதாவது நல்லது செய்ய வேண்டும் போல் இருக்கிறது... விட்டவன் மனைவியை அல்லது செத்தவன் மனைவியை திருமணம் செய்யலாம் என நினைக்கிறேன். இவர்களில் யாரைச் செய்யலாம். பித்தனே?

**பதில்:**— நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கும் உமது எண்ணம் பாராட்டப்பட வேண்டியது. இதில் யாராவது ஒருத்தரை திருமணம் செய்யலாம். அது வரவேற்கத்தக்கது தான்.

எதற்கும் விட்டவன் மனைவியைத்திருமணம் செய்வதற்கு முன் அவன் என்ன காரணத்துக்காக விட்டான் என்பதையும்— செத்தவன் மனைவியைத் திருமணம் செய்வதற்கு முன் அவன் ஏன் செத்தான் என்பதையும் விசாரித்துப் பார்த்துவிட்டுத் திருமணம் செய்தால் உமது வாழ்க்கையில் வசந்தம் வீசும்.

*எஸ். ராஜேந்திரன்— வெலியமனை*

**கேள்வி:**— நகைச்சுவைக்கு சிரித்திரனும், இலக்கியத்துக்கு மல்லிகையும் வந்தனவே... இப்போ காணோமே. என்ன ஆயிற்று பித்தா?

**பதில்:**— சிரித்திரன், அதன் ஆசிரியர் மறைவுக்குப்பின் வரவில்லை. மல்லிகை தொடர்ந்து வருகிறது. ஆனால், மக்களின் கைகளில் காணமுடிவதில்லை. ஏனென்றால் இரண்டும் பெருமளவு வாசகர்களைத் தேட முடியாததற்கு முக்கிய காரணம் வர்ணத்தில் சினிமா செய்திகளும், படங்களும், நடிகர், நடிகைகளின் அரை குறைப்படங்களும் வெளியிடப் படவில்லையே! அது தான்.

*ம.துளசி— செல்வபுரம்—பளை*

**கேள்வி:**— இல்லற வாழ்வு இனிமையாக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும். தயவுசெய்து அறிவுரைசொல்லுங்களேன்?

**பதில்:**— ஐ அம்மணி. அது தெரிந்தால் நான் ஏன் தினமும் மனைவியிடம் அடி வங்குகிறேன்.

## பித்தனின் கேள்வி

**கேள்வி:**— தெய்வீகக்காதல் என்றால் என்ன?

## வாசகர்கள் பதில்கள்

*நியூட், மீசாலை.*

கடற்கரை, பூங்கா என்று அலையாது யாத்திரை ஸ்தலங்களில் ஒருவர் ஒருவரைத் தொடாமல் காதலிப்பதுதான் தெய்வீகக் காதல்.

*சிவாஜிகாலு, மாத்தளை.*

அழகில் சிறந்த ஒரு ஆணோ, பெண்ணோ பார்க்கவே சகிக்காத குரூபி ஒருத்தியையோ அல்லது ஒருவனையோ காதலித்தால் அதை தெய்வீகக்காதல் எனலாம். ஏனைய காதலெல்லாம் வெறும் கத்தரிக்காய்க்காதல் தான், ஜல்சா... ஜல்சா... கப்சா... கப்சா... டுபுக்கு... டுபுக்கு! என்ன ஏதாவது புரியுதா?

*அபிராமி, கொழும்பு – 13.*

காதலில் எங்கே ஐயா உள்ளது தெய்வீக காதல்...? எல்லாமே காமத்தை நோக்கமாக கொண்டு வருவதுதான்.

*ரீ.அஞ்சலோ.கல்முனை.*

பேய்க்குணாம்சமான பெண்களைக் காதல்செய்யாதுவிடின் அது தெய்வீகக்காதல்.

*பிரசன்னா, கொழும்பு.*

இதயங்களின் சங்கமிப்பில் இரு இதயங்கள் மட்டும் பேசிக்கொள்ளும் நிலையில் ஊற்றெடுப்பது!

**கேள்வி:**— பித்தா! ஒருவேளை விடுதலைப் புலிகள் போரை திரும்ப ஆரம்பித்தால் ஸ்ரீலங்கா அரசுக்கு இந்தியா உதவுமாம். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:**— இது பேரினவாதிகளாலும்— இனவெறியர்களாலும் பரப்பப்படும் பம்மாத்துக்கதை. எப்படியாவது திரும்ப யுத்தத்தை உருவாக்க வேண்டும். அதில் தாங்கள் குளிர் காய வேண்டும் என்ற ஆவலில் பரப்பப்படும் பசப்பு வார்த்தை. ஏற்கனவே இங்கே கையை வைத்து விரலைச் சுட்டுக்கொண்ட இந்தியா இனிமேல் அப்படியான விஷப் பரீட்சையில் எப்போதும் இறங்க முன்வராது என்பது தான் உண்மை.

*செ.விபுலன், சிலாபம்.*


**கேள்வி:**— பித்தா! நீர் திருமணம் முடித்த புதில் உமது வீட்டிலே உமக்கு இருந்த மரியாதை எப்படி? இப்போ மரியாதை எப்படி?

**பதில்:**— திருமணம் முடித்த புதிதில் என்னை எனது மனைவி அன்பாக வரவேற்பாள்.... ஆனால், அவர்கள் வீட்டு நாய் யாரடா இது புதிய ஆளாக இருக்கிறதே என்று என்னைப்பார்த்து குரைக்கும். ஆனால், இப்போ.... நாய் என்னுடன் நன்றாகப் பழகிவிட்டது. அதனால் வாலையாட்டி வரவேற்கிறது.. ஆனால், மனைவிதான் என்னைக் கண்டதும் குரைக்கிறாள்.

*வி.சதாராணி—விசுவமடு.*

**கேள்வி:**— பித்தா! இன்றைய இளைஞர்களின் குறிக்கோள் என்னவாக இருக்கிறது?

**பதில்:**— இன்றைய இளைஞர்களின் குறிக்கோள் Quick money தான். விரைவிலேயே நிறைய சம்பாதிக்க வேண்டும். மொபைல் தொலைபேசி வாங்க வேண்டும் — மோட்டார் சைக்கிள்— அடுத்து கார் வாங்க வேண்டும். அழகான வீடு கட்ட வேண்டும். அதிலே குடும்பத்தவர்களைக் குடியேற்ற வேண்டும். வீட்டிலே ரி.வி, டெக், டிவிடி, பிரிஜ், வோஷங் மெஷின், ETC. ETC இருக்க வேண்டும். மொத்தத்தில் பணத்திலே புரள வேண்டும். ஆனால், அதற்காகத் தமது திறமைகளை, தகுதிகளை வளர்த்



துக்கொண்டு ஏராளமாகச் சம்பாதிக்க அவர்கள் தயாரில்லை. வெளிநாட்டுக்கு ஓடிப்போய் பீங்கான் கழுவியோ, ரொய்லட் சுத்தம் பண்ணியோ தமது இலக்குகளை அடையவே இன்றைய சமூகம் விரும்புகிறது. அது தான் கவலை.

*ஆ.சகாயமேரி, யூனியன்குளம்.*

**கேள்வி:**— டியர் பித்தா! மாணவ பருவம் என்பது மிகவும் மகிழ்ச்சியான காலமல்லவா.. உமது மாணவப் பருவம் எப்படி?

**பதில்:**— மகிழ்ச்சியானது தான்... .ஆனால், இப்போதுள்ள மாணவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாங்கள் பாவம் தான்...

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான — குறும்பான — யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.





**கேள்வி:**— நாளுக்குநாள் புதுமுக சினிமா நடிகைகளின் அறிமுகம் பற்றிய என்ன நினைக்கிறீர்?

**பதில்:**— பழையன கழிதலும் புதியன புகுதலும் சினிமாவில் அறிமுகமாகும் நடிகைகளுக்கும் பொருந்தும்.

இந்தக்கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. **நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85, ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தாவில் முத்தமிழ் விழா

தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரிய விழுமியங்களையும், தமிழர் தம் ஒழுக்க நெறிகளையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாணம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமிழ் மன்றத்தினர் முத்தமிழ் விழா ஒன்றை நடத்தினர்.

முத்தமிழ்களான இயல், இசை,நாடகம் என்பவற்றின் பல்வேறு அம்சங்களை நிலைநிறுத்தி, கலைநிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டிருந்தன. தமிழர் தம் பாரம்பரியக் கலைகளைக் கண்டு, களித்து ரசிக்கவும், தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணி வளர்க்கவும் ஸ்கந்தா மாணவர் முன்னெடுத்த முத்தமிழ் மன்றம் ரசிகர்களுக்கு வழி சமைத்துக்கொடுத்தது.

கல்லூரி அதிபர் க.சிவாஜியின் வழிகாட்டலிலும், உப






அதிபர் செஞ்சொற் செல்வன் ஆறு.திருமுருகனின்நெறிப்படுத்தலுடனும்,ஏனைய ஆசிரியர், மாணவர் ஒத்துழைப்புடனும் மிகச்சிறப்பாக நடைபெற்றது முத்தமிழ் விழா.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் வளர்க்கப்பட்ட நேர்த்தியான உச்சரிப்பும், எழுத்து நடையும் கொண்டமைந்த செந்தமிழ் இன்றும் யாழ்ப்பாணத்து மக்களால் போற்றிப் பாதுக்காக்கப்படுகிறது என்பதை முத்தமிழ் விழாவில் இடம்பெற்ற ஆடல்கள், ராக தாளப் பாடல்கள், உணர்ச்சி மிக்க நடிப்பு, வீரம் செறிந்த நடிப்பு என்பன துல்லியமாக நிரூபித்திருந்தன.

யாழ்ப்பாணத்திலே ஆங்காங்கே இவ்விதமாக தமிழ்ப் பாரம்பரியங்கள், கலாசாரங்கள் பேணப்பட்டு வந்தாலும் கூட தனித்துவம் மிக்க தமிழுக்கு மாசு ஏற்படும் வகையில் ஒரு சிலரின் நடவடிக்கைகள் அமைந்து காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது.

அண்மைக்காலமாக தமிழுடன் ஆங்கிலம் கலந்து பேசும் ஒருவித நாகரீகத் தன்மை வளர்ந்து வருகிறது. நாவலராலும், நல்லறிஞர்களாலும் போற்றிப் பேணி வளர்க்கப்பட்ட தமிழ் மொழியை கொலை செய்யும் வகையில் இது அமைந்துள்ளது.

ஒரு இனத்தினை அடையாளப் படுத்து கின்ற குறிகாட்டிகளுள் முதன்மை பெற்றது மொழியே ஆகும். மொழியை இழப்பதன் மூலம் இனத்தையே இழக்க நேரிடுகிறது. கலைகள், விளையாட்டுக்கள், பழக்க வழக்கங்கள், உணவு வகைகள் கூட அந்த இனத்தை அடையாளப்படுத்துகின்றன.

ஒரு சில காலங்கள் மட்டும்வெளிநாடுகளில்இருந்துவிட்டுத் தாயகம் திரும்பும் மக்கள் பேசுகின்ற மொழி, உரையாடல்கள், உடுத்தும் உடைகள், அவர்களின் பழக்க வழக்கங்கள் எல்லாம்வேற்று மொழிக்கலப்புடன் அமைந்து காணப்படுகின்றன.

தமிழின் மேம்பாட்டுக்காக, தமிழின் விடுதலைக்காக தமது மூச்சினை அடக்கிக்கொண்டு கல்லறைக்குள் உறங்கிக்கிடக்கும் ஆயிரக் கணக்கான இளம் தமிழ் உள்ளங்களுக்கு மாறான உணர்வைத் தரக்கூடிய செயற்பாடுகளாக இவை அமைந்துள்ளன.

தமிழில் தம் பிள்ளைகளுக்கு பெயர் சூட்டக் கூச்சப்படும் பெற்றோர்கள்; சுத்தமான தமிழைப் பேசுவது அநாகரிகம் என வெட்கப்பட்டு, பிற மொழி கலந்து பேசுவதே பெருமை, மதிப்பு எனக் கருதும் இளைஞர் கூட்டம் இத்தகைய தமது நிலைகளில் இருந்து விடுபட வேண்டும். தமிழ்ப் பெயர்களைச் சூட்டி, சுத்தமான தமிழில் உச்சரித்து எமது பாரம்பரிய பண்பாட்டுக் கலாசாரங்களைப் பேண முன்வர வேண்டும்.

இவற்றை உணர்த்தும் வகையில் ஸ்கந்தா மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட முத்தமிழ் விழா தமிழ் இனத்தின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்தது பாராட்டத்தக்கதாகும்.

**வி.பி.சர்மா.**




இணுவையூர் இ.இரத்தினம் எழுதிய நாட்டிய அரங்கு, கவிதை நேரங்கள், நாடக அரங்கு ஆகிய மூன்று நூல்களின் வெளியீடு கொழும்புதமிழ்ச்சங்கத்தில் அண்மையில்நடைபெற்றது. நூல்களின் முதல்பிரதிகளை புரவலர் ஹாஷிம் உமர், தமிழ்ச்சங்கத் தலைவர் பெரியபிள்ளை விஜயரத்தினத்திடமிருந்து பெறுகிறார். திருமதி ஞானம் இரத்தினமும் படத்தில் காணப்படுகிறார்.



தண்ணீரை தனியார் மயப்படுத்தலை எதிர்த்து பேராதனைப் பூங்காவின் முன்னால் சிறுவர்கள் அண்மையில் வீதி நாடகங்களை நடத்தினர். கண்டி மனித அபிவிருத்தித்தாபனம் இதனை ஏற்பாடு செய்திருந்தது. (ஐ-256)

# தமிழீழப் பெண்கள் எழுச்சி நாள்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சியின் குறியீடாக 2 ஆம் லெப் மாலதியின் ஈகம் வரலாற்றில் இடம் பிடித்தது.

இந்திய இராணுவ காலங்களில் போராட்டத்தை காத்து வளர்த்த தேசியத் தலைவர் பெண் போராளிகளைத் தனது நேரடிக் கவனத்தில் நெறிப்படுத்தினார். அந்தக் காலப் பகுதியின் பெறுமதி இன்றைய மகளிர் படையணிகளின் ஒவ்வொரு கட்டமைப்பிலும் பிரதிபலிப்பதை அவதானிக்க முடியும்.

2 ஆவது கட்ட ஈழப் போரில் பல வெற்றிச் சாதனைகளை நிலைநாட்டிய மகளிர் படை அணிகளின் போரியல் வரலாறு 3 ஆம் ஈழப் போரின் ஆரம்பக் கட்டத்திலேயே புதிய பரிணாமத்தையும், விரிவாக்கத்தையும் கண்டது. பெரும் சமர்களை தொடர்ச்சியாக எதிர் கொண்டு களமுனைகளில் தனி முத்திரைகளைப் பதிக்கத் தொடங்கியது.

தனித்து முடிவெடுக்கும் ஆற்றல், நெருக்கடி மிகுந்த போர்க் களங்களில் அணிகளை வழி நடத்தும் ஆற்றல், களமுனைகளிலும், மக்கள் மத்தியிலும் திட்டமிட்டு நிர்வாகங்களை நடத்தும் ஆற்றல், இப்படிப் பல ஆற்றல்கள் அவர்களுக்குள் உருவாகின.

இதேவேளை சமுகத்திலும் மெல்ல மெல்ல மாற்றங்கள் முகிழ ஆரம்பித்தன.

பெருமளவு பெண்கள் தம்மை போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர். சமுகம் அதை இயல்பாகவே ஏற்றுக் கொண்டது.

பல்கிப் பெருகிய பெண் போராளிகளின் வேகம் மகளிர் படையணிகளாக விரிவடைவதற்கு வழி வகுத்தது. ஸ்ரீலங்கா இராணுவத்துடனான சமர்களில் மகளிர் படையணிகள் களம் இறங்கின.

வன்னி பெருநிலப்பரப்பு மீதான ஸ்ரீலங்கா படைகளின் போர்களில் - குறிப்பாக ஜெயசிக்குறு சமர்கள் பெண் போராளிகளை மேலும் புடம் போட்ட களம் ஆகும்.

ஸ்ரீ லங்காவின் அதிவிசேட சிறப்பு அணிகளை எதிர் கொண்டு வெற்றி பெற்று பலரையும் வியப்பில் ஆழ்த்திய வரலாறுகள் இக்காலப் பகுதியில் தான் நடந்தேறின.

நெருக்கடியான முன்னணிக் காவல் நிலைகளில் மாறி மாறி வரும் எல்லாக் கால நிலைகளையும் எதிர்கொண்டபடி தொடர்ச்சியான காத்திருப்புக்கள், இடையறாத தொடர் மோதல்கள், இவற்றினை அவர்கள் எதிர் கொண்ட விதம் உலகினில் இதுவரை வேறெந்தப் பெண்களாலும் நிகழ்த்தப்படாத சாதனை. பெண்களுக்கே உரித்தான அடிப்படை பிரச்சினைகள் பலவற்றையும் மிகுந்த சகிப்புணர்வுடன் தாக்குப்பிடித்தனர்.



இந்த இடர்பாடுகளை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு போரை எதிர் கொண்டு வெற்றி வெற்றமையானது இவர்களின் ஆழமான மனவுறுதியை உலகுக்கு வெளிக்காட்டியது.



ஓயாத அலைகள் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் மகளிர் படையணிகள் கடலிலும், தரையிலும் தமது வீரத்தைப் பதித்துக் கொண்டன.

எதிரிப்படைகளை ஊடறுத்து, உள் நுழைந்து, நிலை அமைத்து, மறித்துத் தாக்கி நூற்றுக்கணக்கான எதிரிப் படைகளை அழித்தொழித்தவர்கள். அத்துடன், கரும்புலிகளாக எதிரிப்படைகளின் இதயத்துக்குள் புகுந்து அவர்களின் உயிர்க்கூட்டையே ஆட்டியசைத்து பலம் பொருந்திய ஆட்லறி நிலைகளையும் முக்கிய இலக்குகளையும் தாக்கி அழித்தவர்கள்.

இன்று, ஸ்ரீலங்கா அரசு சமாதானப் பேச்சுக்களுக்கு இறங்கி வருவதற்கு வழி அமைத்தவர்களில் பெண்போராளிகளின் பங்கும் முக்கியமானது.

அதுமட்டும் அல்ல, மருத்துவம், அரசியல், சட்டம் எனத் தமிழீழத்தின் அடிப்படைக் கட்டுமாணங்களில் பெண்கள் முக்கிய இடங்களை வகிக்கின்றனர்.

இந்த அக, புறநிலை மாற்றங்கள் சமுகப் பெண்களின் வாழ்விலும் பல மாற்றங்களை உருவாக்கி உள்ளது.

இதுவரை காலமும் குடும்பம் என்ற கட்டமைப்புக்குள் இருந்த பெண்கள் வெளியே வந்து போராட்டத்தில் இணைந்தனர்.


தற்பொழுது குடும்பத்துடன் வாழுகின்ற பெண்கள் எல்லைப் படையாகக் கடமையாற்றுகின்றனர்.

இந்த வகையில் தமிழீழப் பெண்கள் ஈட்டி உள்ள சாதனைகள் காலத்தால் அழியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறார்களின் கைவண்ணம்



ஜே.கௌசிக்கா
தரம் 5,
கே.சி.ஐ



மு.ஸ்ரீபனா
தரம் 5,
சென். அன்ரனிஸ் றோ.க.பாடசாலை.



ம. மேரி பாமிலா
கிராஞ்சி,
சிவபுரம், பூநகரி.



சி. அகன்யா
தரம் 2,
யா/ இந்து ஆரம்ப பாடசாலை.

## யாருக்கு பிறந்தவன்!

முன்னொரு காலத்தில் பாண்டியபுரத்தை பாண்டு என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனது அரச சபைக்கு இரண்டு கண்களும் தெரியாத ஒரு பெரியவர் வந்தார். பார்வை இல்லாது போயினும் அறிவு மிக்க அவர் எதையும் கூறும் ஆற்றல் பெற்றவர்.

அவரைப் பற்றி சபையோர் அரசனிடம் கூறினர்.

அந்த நபரைச் சோதிக்க விரும்பிய அரசன் அவரிடம் ஒரு நல்ல வைரக்கல்லையும், ஒரு போலியான கல்லையும் கொடுத்து எது நல்ல வைரம் என கூறிடச் சொன்னார்.

அவர் இரு கற்களையும் சூரியவெளிச்சத்தில் காட்டி, கல்லில் ஏற்படும்வெப்பத்தைஆய்வுசெய்துசரியானவைரம்எதுஎன்றுகூறிவிட்டார்.



பார்வை தெரியாதபோது அவரது அறிவுத்திறனை எண்ணி வியந்தான் மன்னன். எனவே, இன்னொரு சோதனை செய்ய விரும்பினான்.

பிறகு கோவேறு கழுதை, குதிரை இரண்டையும் கட்டி வைத்து எது குதிரை எது கழுதை எனக் கேட்டான் அரசன்.

பார்வையற்ற பெரியவரோ இரண்டையும்கிள்ளினார். ஒன்று கத்தியது. மற்றது கனைத்தது. இதனை வைத்து எது கழுதை, எது குதிரை என சரியாகக் கண்டுசொன்னார்.


இதுபோல் நடந்த பல சோதனைகளிலும் அவர் வெற்றிபெற, மகிழ்ந்து போன அரசனுக்கு, அவருக்குத் தினமும் தயிர்ச்சாதம் கிடைக்க வழிசெய்யுமாறு அமைச்சர்களுக்கு உத்தரவிட்டான்.

வெகு நாட்களாகவே அரசன் தனது பிறப்பு குறித்து மனதில் ஒரு சந்தேகம் இருந்தது. தான் அரசனுக்கு பிறந்தவனா இல்லை ஆண்டிக்குப் பிறந்தவனா என்ற ஐயமே அது.

அது குறித்து பெரியவரிடம் அரசன் கேட்டார். அவர் கொஞ்சம் கூட தயக்கமே இல்லாது, "அரசே! நீர் ஆண்டிக்குத் தான் பிறந்தீர்" என்று கூறினார்.

"அரசே உண்மையிலேயே அரச பரம்பரையில் பிறந்திருந்தால் என் திறமைக்கு நீங்கள் வைரத்தை பரிசாகத் தந்திருப்பீர்கள். ஆனால், நீரோ வெறும் தயிர்ச்சாதம் கிடைக்க வழி செய்ததால் நீர் நிச்சயம் ஒரு ஆண்டிக்கு மட்டுமே பிறந்திருக்க முடியும்." என்றார் அவர். வெட்கத்தில் தலைகுனிந்தான் மன்னன்!

## படம் சொல்லும் பழமொழி-08




அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். செப். 19 ஆம்திகதி சுடர் ஒளியில் உள்ள பழமொழிகளுக்கு சரியான விடைகள் வருமாறு.

1. காவோலை விழ குருத்தோலை சிரிக்கும் 2. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் 3. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? 4. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு

செப். 19 ஆம் திகதி சரியான விடையை அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:
1. லோ.நேருஜா, தரம் 9, கிளி/புனித திரேசா பெ.கல். 2. க.தர்மினி, 163 உக்குளாங்குளம், வவுனியா. 3. யோசப் டொரிங்டன் ஸ்பெக், 59/1 லேடி மெனிங் டிரைவ் மட்டக்களப்பு. 4. லோ. நிரோஜா, தரம் 9, கிளி/புனித திரேசா பெண். கல்லூரி. 5. து. துஷ்யந்தி, யா/கைதடி குருசாமி வித்.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி',*
*சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## கலை இலக்கியத் தகவல்

01. தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல்?
தொல்காப்பியம்

02. கவிக்குயில் என மக்களால் அழைக்கப்பட்டவர்?
சரோஜினி நாயுடு (இந்தியா)

03. கவியரசு கண்ணதாசனின் இயற் பெயர் யாது?
சா. முத்தையா

04. பாரதி தாசனின் இயற்பெயர் யாது?
கனக சுப்பு ரத்தினம்

05. இலங்கைத் தமிழ் நாடகத் தந்தையார்?
கலையரசு சொர்ணலிங்கம்

06. ஈழத்தில் எழுந்த முதல் பள்ளு நூல் எது?
கதிர மலைப் பள்ளு

**இ. பேபிநிஷாந்தினி, தரம் 10, கிளி/ அக்கராயன் மகா வித்தி.**

## விடுகதைகளும் விடையும்

* தீக்குளித்தாலும் திடமாக இருப்பவர் அவர் யார்? **செங்கல்**
* வயலில் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை அவன் யார்?
**மண்புழு**
* வெயிலில் மலரும், காற்றில் உலரும் அது என்ன? **வியர்வை**
* புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓராண்டு. அவன் யார்? **கலண்டர்**
* உயிரில்லாத நீதிபதி உரிய தீர்ப்பு வழங்குவார் அவர் யார்?
**தராசு**

**து. சுஜி**
**தருமபுரம்**

## சிறைக் காவியங்கள்

சிறையிலிருந்த போது தலைவர்கள் சிலர் எழுதிய நூல்கள்

* மகாத்மா காந்தி — சத்திய சோதனை
* மார்க்கோ போலோ — பயண அனுபவங்கள்
* சுபாஷ் சந்திரபோஸ் — சுதந்திரப் போராட்டம் (1920 – 1934)
* மார்டின் லூதர்கிங் — பைபிள் (ஜேர்மன் மொழிபெயர்ப்பு)
* திலகர் — கீதையின் சாரம்
* சேர் வோல்டர் ரேவிஃப் — உலக வரலாறு
* வ.உ. சிதம்பரப்பிள்ளை — திலகரின் வாழ்க்கை வரலாறு
ஜேம்ஸ் அலனின் 'எண்ணமோ வாழ்வு'
* ஜவஹர்லால் நேரு — டிஸ்கவரி ஒஃப் இந்தியா

**எஸ்தர் ஜெபிக்கா**
**தரம் 9**
**யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.**

## பொது அறிவு விடயங்கள்

1. தமிழ் என்ற சொல்லின் பொருள் யாது? இனிமை
2. 2000 ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றவர்?
கிம்டேயுங் (தென்கொரிய ஜனாதிபதி)
3. 2008 ஆம் ஆண்டு 29 ஆவது ஒலிம்பிக் போட்டி நடைபெற இருக்கும் நாடு எது? **சீனா**
4. 2004 ஆம் ஆண்டு கிரேக்க ஒலிம்பிக் போட்டியல் முதலிடத்தைப் பிடித்த நாடு எது? அமெரிக்கா
5. இலங்கை எத்தனையாம் ஆண்டு ஐ.நா.வில் உறுப்பு நாடாகியது?
1955 ஆம் ஆண்டு
6. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை ஏற்பட்ட ஆண்டு எது? 1978 ஆம் ஆண்டு
7. முதலாவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி யார்?
ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

**சுமணா, காஞ்சனா,**
**தரம் 9, யா/ அம்மன் அ.மி.த.க.பாடசாலை**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதற்கும் கொஞ்சம் முக்கியத்துவம் கொடுங்கள்!

பொதுவாக அழகு என்பது எல்லோரா லும் இரசிக்கக் கூடிய ஓர் அம்சம் தான். ஆனால், சில வேளைகளில் பெண்களின் அழகுக்கே பிரச்சினையாக அமைபவற்றில் ஒன்று தான் இந்த மார்பகப் பிரச்சினை. அதாவது மார்பகங்கள் தொய்ந்து போதல், சரியான அமைப்பில் இல்லாது போதல் என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கவலை. இவை எல்லாவற்றுக்கும் அடிப்படை அவர்கள் அணிகின்ற தவறான மார்புக்கச்சை தான் என்கிறது ஓர் ஆராய்ச்சி. ஆயிரக் கணக்கில் காசைச் செலவழித்து சுடிதாரும், சேலையும் வாங்கும் பெண்கள் பலருக்கு மார்புக்கச்சைக்கு நிறைய ஏன் செலவு பண்ணுவான் என்கிற எண்ணம் தான் இதற்குக் காரணம்.

ஆனால்,சரியான மார்புக்கச்சை என்பது உங்கள் மார்பகங்களில் கச்சிதமாகப் பொருந்த வேண்டும். மார்பகச் சதைகள், மேலேயோ, பக்கவாட்டிலோ வழியவோ, பிதுங்கவோ கூடாது. உள்ளாடையின் அடிப்பட்டைகள் மிகச் சரியாக மார்பகங்களுக்கு அடியில் நிற்க வேண்டும். அகலமான பட்டைகள் வைத்த மார்புக்கச்சை அணிவதற்கு சிறந்தது. மார்புக்கச்சை அணிகிற போது, அதன் பட்டைகள் தோள் பட்டையில் பதிந்து,கோடு,கோடாகத் தெரியக் கூடாது.

கண்கள், உதடுகள், கன்னங்கள் என்பன அழகு பெற வேண்டும் என பார்த்துப் பார்த்துச் சாப்பிடும் பெண்கள் மார்பக அழகுக்கும் உணவு உண்டு என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாள் தோறும் உணவில் கரட், சோயாபீன்ஸ், ஒலிவ் எண்ணெய் சேர்த்துக் கொள்கிறவர்களுக்கு மார்பக அழகு மெருகு பெறுவதோடு மார்பகப் புற்று நோயும் தவிர்க்கப்படும் என்று கூறப்படுகிறது.

பொதுவாக இளமைக்கு விடைகொடுப்பதை அறிவிக்கும் பகுதிகளில் முதலிடம் பெறுவது மார்பகங்களும், கழுத்தும் தான். அவற்றைச் சுற்றியுள்ள தசைகள் மிகவும் மென்மையானவை. எளிதில் சுருக்கங்கள் விழக்கூடியவை. இதனைத் தவிர்ப்பதற்கு முகத்துக்கு நாம் செய்யும் கிளென்சிங், டோனிங் மற்றும் மாயிச்சரைசிங்கை மார்பகங்களுக்கும் செய்ய வேண்டும். அதாவது முதலில் கிளென்சிங் மில்க்கில் பஞ்சை நனைத்து மார்பகங்களைத் துடைத்து எடுக்க வேண்டும். அதன் மேல் டோனரில் நனைத்த பஞ்சை ஒற்றி எடுக்க வேண்டும். சில நிமிடங்கள் கழித்து மாயிச்சரைசர் தடவிக் கொள்ள வேண்டும்.

வாரம் இரண்டு அல்லது மூன்று முறை நீங்கள் உங்கள் மார்பகங்களுக்கான அழகுச் சிகிச்சையை மேற்கொள்ள வேண்டியது முக்கியம். மார்பகங்கள் தொய்



வடைந்து காணப்பட்டால் வேப்பிலை மற்றும் கரட் விழுது கலந்து பக் (pack) மாதிரி போடலாம்.

மாதுளம்பழத்தின் தோலைக் காய வைத்துத் தூளாக்கிக் கொள்ளவும். அத்துடன் கடுகு எண்ணெய் கலந்து மார்பகங்களில் தடவி சிறிது நேரம் ஊற விட்டுக் குளித்து வந்தாலும், மார்பகங்கள் நல்ல வடிவமும், அழகும் பெறும். வயதுக்கேற்ற மார்பக வளர்ச்சி இல்லாத பருவ வயதுப் பெண்கள் இந்த சிகிச்சையை மேற்கொண்டால் நல்ல பலனைப் பெறலாம்.

****

# டிப்ஸ்

தணணா!ல வன!கா அலலது எலுமிசசைச் சாறு கலந்து அலசினால், தலைமயிர் பளபளப்பாக இருக்கும்.

பாலூட்டும் தாய்மார்களின் முலைக் காம்பு புண்ணாக இருந்தால், அதன் மீது சிறிதளவு தேனை தினமும் தடவி வந்தால், வலி குறைவதுடன், நோவும் விரைவில் மாறி விடும். குழந்தைக்கும் தேன் நல்லது.

தினமும் காலை வெறும் வயிற்றில் 2 பூண்டுப் பற்களைத் துண்டுகளாக்கி விழுங்கி வந்தால், ஆறு மாதத்தில் மூட்டு வலி குணமாகும்.

வேப்பங்கொழுந்தை விழுதாக அரைத்து, தயிரில் கலந்து சாப்பிட்டு வந்தால் முகப் பரு குறையும்.

## ஞாபக சக்தியை தருகிறது பால்

பால் மற்றும் பாற் பொருட்களால் செய்யப்பட்ட உணவுகள் சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், பாற்பொருட்களால் பெரும்பாலும் நன்மையே ஏற்படுகிறது என்று வைத்தியர்கள் கூறுகின்றனர்.

பால் ஒரு சிறந்த ஊட்டச்சத்து மிக்க உணவு. எமக்குத் தேவையான சக்தியையும், ஞாபகத்தையும், நீடித்த ஆயுளையும் அளிக்கும் தன்மை உடையது பால். ஒரு லீட்டர் பாலில் ஒரு மனிதனின் அன்றைய தேவையான அனைத்துச் சத்துகளும் அடங்கியுள்ளன.

கண் பார்வை தெளிவடைய, இரத்தம் குறைந்து காணப்படுபவர்கள் மற்றும் உடல் மெலிந்து காணப்படுபவர்கள் பாலை சிறந்த உணவாக அருந்தி வரலாம்.

## இவ்வார பொன்மொழி

உங்களுக்குத் தேவையானவை குறித்து தீர்மானமாய் முடிவெடுங்கள். உங்கள் தீர்மானத்தை நிறைவேற்ற உங்கள் மனமும், உடலும் அநேக தடை போடும். அவற்றைத் தகர்த்தெறிந்து அவற்றை உங்கள் ஆளுமையில் வைத்துக்கொண்டால் எந்த விடயத்தை வேண்டுமானாலும் சாதிக்கலாம்.

# சமையல் குறிப்பு

## தாளித்த பிட்டு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| அரிசி மாப்பிட்டு | 2 குழாய் அளவு. |
| உழுத்தம் பருப்பு | 2 தேக்கரண்டி |
| கடுகு | 1 தேக்கரண்டி |
| பச்சை மிளகாய் | 3 |
| கறிவேப்பிலை | தேவையான அளவு |
| காய்ந்த மிளகாய் | 2 |
| இஞ்சி | 1 துண்டு |
| சின்ன வெங்காயம் | 4 |
| தே.எண்ணெய் | 3 தேக்கரண்டி |



*செய்முறை*

சமையல் பாத்திரத்தில் எண்ணெயை விட்டு, வெங்காயத்தை நறுக்கிப் போடுங்கள். கடுகு, உழுத்தம் பருப்புச் சேருங்கள். கறிவேப்பிலையையும் கலக்க வேண்டும். இஞ்சி, பச்சை மிளகாய்,காய்ந்த மிளகாய் போன்றவைகளையும் சேர்த்துத் தாளித்து, அதில் பிட்டை சேர்த்துக் கலந்தால் தாளித்த பிட்டு ரெடி. சுவைத்துப் பாருங்கள்— பரிமாறி மகிழுங்கள்.




## எதிர்மறையான எண்ணங்களே நோய்க்குக் காரணம்

எமது மனமும், எதிர்மறையான எண்ணங்களுமே நாம் அடிக்கடி நோய்வாய்ப்படுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன என்று நியூயோக்கைச் சேர்ந்த மனநோய் ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் கூறியுள்ளார்.

பொதுவாக 60முதல் 90 சதவீதம் வரும் தலைவலி, மார்பு வலி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு எதிர்மறையான எண்ணங்கள் தான் காரணம் என்கிறார்.

எதிர்மறையான எண்ணங்களால் மரணத்தை வரவழைக்கும் ஒழுங்கற்ற இதயத்துடிப்பு இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.



# குழந்தை பிறந்தவுடன் கவனமாய் இரு பெண்ணே!

குழந்தைகள் எமது நாட்டின் நாளைய சிற்பிகள். நாளைய தலைமுறை ஆரோக்கியமாக இருக்க இன்றைய குழந்தைகளின் ஆரோக்கியத்தில் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பச்சிளம் குழந்தைப் பராமரிப்பு என்பது குழந்தை பிறந்த நாள் முதல் 28 நாள் வரை குழந்தையைத் தாக்கும் நோய்கள், பிறவியிலேயே ஏற்படும் குறைபாடுகள், அதற்குரிய சிகிச்சை முறைகள் என்ன என்பதைக் குறிப்பதாகும். பிறந்த உடன் குழந்தைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பெரும்பாலும் மருந்து கொடுத்துச் சரி செய்து விடலாம். ஆனால் பிறவிக் குறைபாடுகளை அறுவைச் சிகிச்சை மூலம் மட்டுமே சரி செய்ய முடியும்.

குழந்தை பிறந்தவுடன் அதனிடம் காணப்படும் குறைபாடுகளைக் கண்டு பிடித்து உடனடியாகச் சரிசெய்யாவிட்டால், அதன் உயிருக்கே ஆபத்து உண்டாகிவிடும். அல்லது வாழ்நாள் முழுவதும் ஊனத்துடன் குழந்தை துன்பப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே, குழந்தை பிறந்தவுடன் எல்லா உறுப்புகளும் சரியாக இருக்கின்றனவா என்று நாமே சரி பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதாவது சந்தேகம் வந்தால் உடனடியாக அருகில் உள்ள குழந்தை மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெறுவது முக்கியமானது.

குழந்தையைப் பிரசவிக்கும் போது,மருத்துவமனையில் பிரசவிப்பதே தாய்க்கும், குழந்தைக்கும் நல்லது. அப்போது தான் தாய்க்கு மட்டுமல்ல குழந்தைக்கும் உரிய பராமரிப்புக் கிடைக்கும். பிறப்பிலேயே ஏற்படும் குறைபாடுகளுக்கும் உடனடித் தீர்வு காண முடியும்.

ஆசன வாய் இல்லாமல் பிறப்பது, உணவுக்குழாய் இல்லாமல் பிறப்பது, சிறுகுடல் மற்றும் பெருங்குடலில் அடைப்பு



இருப்பது, உதடு மற்றும் நாடிப்பிளவு, நடு முதுகில் கட்டி ஏற்பட்டு நரம்பு மண்டலம் உரிய வளர்ச்சி இல்லாமல் இருப்பது, சிறு நீர்க்குழாய் மற்றும் சிறுநீர்த்தாரை ஆகியவற்றில் அடைப்பு இருப்பது மற்றும் பிறவியிலேயே ஏற்படும் புற்றுநோய் ஆகியவை குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் ஆகும்.

எனவே சகோதரிகளே, பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தையால் உங்கள் மனம் மகிழ்ச்சியில் திளைக்க [illegible] இந்த அறிவுரையையும் [illegible]

# ஒவ்வாமை ஏற்படும் கவனம்!



இப்போதெல்லாம் விலை மலிவான பொருட்கள் தான் பெண்களில் பலருக்குப்பிடிக்கின்றன. ஆனால், காதுத்தோடு முதல் நெற்றிப் பொட்டு வரை உள்ள பெரும்பாலான அழகு சாதனப் பொருட்கள் எல்லாமே ஒவ்வாமை நோயை ஏற்படுத்துகின்றன என்பது தான். எமது பெண்களுக்குப் புரிவதில்லை.

செயற்கை அணிகலன்களை சிறிது நேரம் அணிந்து கொள்ளலாம். ஆனால் நீண்ட நாள் அணிந்தால் 'கான்டெக்ட் அலர்ஜி' வரும் என்று கூறப்படுகிறது.

சிலருக்கு முகத்தில் கீறல்போல் வெடிப்பு இருக்கும். சிலருக்கு காது, மூக்கில் வெடிப்பு இருக்கும். கழுத்தில் சொறிபோல் சிவப்புக் கோடு உண்டாகும். சாதுவான வீக்கம் ஏற்படும். இவையெல்லாம் செயற்கை அணிகலன்களால் தான் ஏற்படுகின்றன. தரமில்லாத முகப்பவுடரைப் பயன்படுத்துவது, தரமில்லாத வெள்ளி நகைகளை அணிவது, விலை குறைந்த நெற்றிப்பொட்டு போன்றவையே இந்த ஒவ்வாமை நோயை ஏற்படுத்துகின்றன.

நான் பலகாலமாக அணிந்து வருகிறேன். எனக்கு எதுவும் வரவே இல்லையே என்று சிலர் சொல்லலாம். ஆனால், இப்படி 'கான்டெக்ட் அலர்ஜி' ஆளுக்கு ஆள் வேறுபடும். சிலருக்கு அணிந்த சில நாளில் வரும். சிலருக்கு மாதக் கணக்கில் உள்ளுக்குள்ளேயே இருக்கும். கடைசியில் தொடர்ந்து ஒவ்வாமை



வந்து கழுத்து, காதுபோன்ற இடங்களில் உள்ள தோலில் பாதிப்பு ஏற்படும் என்று வைத்தியர்கள் எச்சரிக்கின்றனர்.

செயற்கை அணிகலன்களை அணிவதில் தவறே இல்லை. ஆனால், நாட்கணக்கில் தொடர்ந்து அணிந்தால், அது தோலில் உரசி உரசி பாதிப்பை ஏற்படுத்தும்.

சிலர் சுவருக்குச் சுண்ணாம்பு அடிப்பது போல் அலங்காரம் செய்வார்கள். காது, மூக்கு, கண்கள் என்று பார்க்காமல் அலங்கரிப்பர். ஆனால், நகை அணிந்த காது, மூக்கு, கழுத்துப் பகுதிகளில் பவுடர் போடுவது தவறு. அடிக்கடி போட்டால் கூட ஒவ்வாமை நோய் வரலாம். அதனால், ஆரம்பத்திலேயே இதனைத் தவிர்த்தல் சிறந்தது.

ஒரு முறை ஒவ்வாமை வந்து அதனால் இலேசாக சிராய்ப்பு, சொறி போன்று வந்துவிட்டால் செயற்கை அணிகலன்களை விட்டுவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# எச்சில் சுகத்துக்கு உரிமைப்போரை கொச்சைப்படுத்தாதீர்!

கடந்த மூன்றாம் திகதி அட்டனில் நடைபெற்ற தோட்டத்தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டப்பேரணி பெருந்தோட்டக்கம்பனிகளை மட்டுமல்ல அரசாங்கத்தையே சிந்திக்க வைத்துவிட்டது.

'அரோகரா என்ற ஓசை ஆண்டவனுக்கு எட்டினால் போதாது. அது அரசாங்கத்துக்கு எட்டவேண்டும்'என்று வீரவசனம் பேசினார் முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி. ஐம்பது வருடங்களுக்கு முன்பு ஒரு சாதாரண திரைப்படமான பராசக்திக்காக எழுதப்பட்ட வசனம் அல்ல இது.

காலம் காலமாக அடக்கியும், ஒடுக்கியும் ஆளப்பட்ட நம்மவர்களின் அறியாமை, அடக்குமுறை, அடிமைத்தனம் என்பனவற்றில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற வேட்கையுடன் எழுதப்பட்ட உயிரோட்டமான வசனங்கள் இவை.

ஆனால் அன்றைய வசனங்கள் இன்று பல தசாப்தங்களைக் கடந்து மலையகத்துக்கு அத்தியாவசியமாகிவிட்டன.

இந்த யாதார்த்த பூர்வமான உண்மையை அரசுக்கு உணர்த்திவிட்டார் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன்.

கடந்த 55 வருடகாலங்களுக்கு மேல் தோட்டத்தொழிலாளர்களின் உண்டியல் பணத்தில் உல்லாசபோகம் கண்ட தொழிற்சங்கத் தலைவர்களின் ஏமாற்று வார்த்தைகளைக்கண்டு, ஓடினர் ஓடினர் வாழ்க்கையின் எல்லைக்கே ஓடினர் என்பது போல் இந்த சுரண்டல் பேர்வழிகளால் ஏமாற்றப்பட்ட அப்பாவிகளான தோட்டத்தொழிலாளர்களும் இந்த தொழிற்சங்க முதலைகளின் அச்சுறுத்தலுக்கு அடிபணியாமல் அட்டனில் ஒன்று கூடிவிட்டனர். இது யதார்த்தம்.

காட்டிக்கொடுத்தே பிழைத்த தொழிற்சங்கப் பெருச்சாலிகளுக்கு ஒரு பலத்த அடியாகிவிட்டது.

'தோட்டத் தொழிலாளர்களின் தலைவிதியை எழுதுபவர்களே நாங்கள் தான் என வீராப்புப் பேசிக் காண்டிருந்த இ.தொ.கா. எதைச் செய்துகிழித்துவிட்டது?' என்று கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

நேற்று வரை இ.தொ.காவை வாய் கிழிய வசைபாடிய புத்திரசிகாமணி இன்று இந்திரன்,சந்திரன் என வாயாரப் புகழ்பாடுகின்றார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சி தீபாவளித்தினத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தி தமிழ் சமூகத்துக்கே துரோகம் இழைக்கப்பட்டது என்று நாடாளுமன்றத்திலேயே வசைபாடிவிட்டு தமிழ் உணர்வுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம்போய் உட்கார்ந்தார்.

அப்போதும்கூட அவர் இ.தொ.காவின் பக்கம்போய் அமரவில்லை. காரணம், கடைசி வரையிலும் காட்டிக்கொடுத்த எட்டப்பர் பரம்பரையினர் என வசைபாடியவர், எப்படிப் போய் இ.தொ.கா. பக்கம் போய் அமர முடியும்? அது நியாயம்.

அன்று அவருடைய புரட்சிகரமான கருத்துக்களையும், துணிச்சலான செய்கையையும் அனைத்து மலையகமும் மட்டுமல்ல எல்லாத் தமிழர்களுமே கரம்குவித்து வரவேற்றனர்.

ஆனால் இன்று அதே சிகாமணி இ.தொ.காவுக்காக வக்காலத்து வாங்குகின்றார். அதுதான் காலம் செய்தகோலம்.

''சம்பள உயர்வு தொடர்பாகப்பேசினோம், பேசினோம் பேசிக்கொண்டே இருக்கிறோம்'' என்றார்.

ஆனால் அங்கே என்ன பேசினார்கள்? சம்பள உயர்வாக இவர்கள் கேட்ட தொகை என்ன? என்பதைக்கூட பகிரங்கமாக வெளியிடும் துணிவு இவர்களுக்கு இல்லையே! அது ஏன்?

'ஜே.வி.பியின் சந்திரசேகரனாக இருக்கட்டும் அல்லது மலையக மக்கள் முன்னணியின் சந்திர சேகரனாக இருக்கட்டும் அவர்களால் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் அதன்பின் நாங்கள் பெற்றுத்தருவோம். அப்போது எவருமே தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு,கூட்டுஒப்பந்தம் தொடர்பாக வாய்திறக்கக்கூடாது' என்று கண்டிசன் போடுகின்றார். இதுதான் தொழிற்சங்க சர்வாதிகாரம். இந்த புத்திரசிகாமணி அப்படிப் பேசவில்லை. நாயின் காதில் ஒட்டிக்கொண்டுள்ள உண்ணிபோல் அவர் ஒட்டிக்கொண்டுள்ள கூட்டம் அவரை அப்படிப் பேசவைத்துவிட்டது.

பரம்பரையாக தொண்டமான்களால் ஏமாற்றப்பட்ட மலையகத்தை இளைஞர் படையணி மூலம் மீட்டு எடுப்போம் என்று முதன் முதலாக மலையகத்தில் மலையக இளைஞர் முன்னணியை உருவாக்கிய புரட்சித்தமிழன் புத்திரசிகாமணியா இன்று சால்ராமணியாக மாறிவிட்டார் என்று மலையக இளைஞர்கள் பரிகாசம் செய்யும் அளவுக்கு இறங்கிப் போகக்கூடாது. அதையும் ஊடகங்கள் மூலம் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடாது. அவர்மீது வைத்துள்ள அன்பினால் வெளிப்பட்ட வார்த்தைகள். வெறுப்பால் அல்ல இவை.

சிலரைப் பலநாள் ஏமாற்றலாம். பலரை சிலநாள் ஏமாற்றலாம்.ஆனால் எல்லோரையும் எல்லா நாட்களிலும் ஏமாற்ற முடியாது.

இந்த யதார்த்தத்தைப் புரிந்து செயற்பட ஆரம்பித்துவிட்டனர் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். தொடர்ந்தும் இவர்களை உங்களால் ஏமாற்ற முடியாது.

உங்களால் வஞ்சிக்கப்பட்டவர்களும் ஏமாற்றப்பட்டவர்களும் தான் கடந்த மூன்றாம் திகதி அட்டனில் கூடினர்.கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் அட்டனில் கூடிய கூட்டங்கள் தலையா இல்லை. கடல் அலையா என வியக்கவைத்துவிட்டது.

இவர்கள் ஏன் இப்படிக் கூறினார்கள்? காலம் காலமாக உங்களுக்கு சமர்ப்பணம் என்று வாய்க்கரிசி போட்டுக் களைத்துவிட்டார்கள். வாழ்க்கைச் செலவுவிஷம்போல் ஏறிவிட்டது. அரைப்பட்டினி, கால்பட்டினி எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர்.

உங்களால் வஞ்சிக்கப்பட்ட தொழிலாளர்கள் தான் உங்களுடைய தொழிச்சங்க இரும்பு வேலியையும் உடைத்து எறிந்துவிட்டு வர்க்க ரீதியாக ஒன்றுபட்டுவிட்டனர். இனிமேலும் அவர்களை உங்களால் கட்டுப்படுத்தமுடியாது. உங்களுடைய விலாங்குத் தன்மையை தெரிந்து கொண்டார்.

ஆர்ப்பாட்டம் நடத்துவதாலும், பேரணி நடத்துவதாலும் சம்பள உயர்வு பெற்றுவிட முடியுமா? இது ஒரு சுயநல விளம்பரம் என்று நீங்கள் கூறுகின்றீர்கள்.

அப்படியானால் இதைக்கண்டு ஏன் நீங்கள் பயப்படவேண்டும் தோட்டம் தோட்டமாகவந்து ஆர்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று ஏன் கட்டளை இடவேண்டும்?

இதை எல்லாம் விட, தோட்டத்துரைமாரிடம் ஞாயிற்றுக்கிழமை எல்லாத் தோட்டங்களிலும் வேலை வைக்கும்படி கேட்டுக் கொண்டது ஏன்?

ஒன்றரை நாள் சம்பளம் என்றவுடன் தொழிலாளர்கள் வாயைப் பிளந்து கொண்டு வேலைக்குப் போய் விடுவார்கள் என்று கனவு கண்டீர்கள். உங்களுடைய கனவு பகல் கனவாகிவிட்டது. உங்களுடைய இறுமாப்பை உழைப்பாளர்கள் உடைத்து எறிந்து விட்டனர். இந்த நிலை தொடர்ந்தால் உங்களையே ஓரம் கட்டிவிடுவார்கள் என்பது உறுதி.

என்ன ஐயா உங்களுடைய வீராப்பு இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தனிப்பட்ட சந்திர சேகரனின் மலையக மக்கள் முன்னணி மட்டும் கலந்துகொள்ளவில்லை. மலையகத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 12 தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டன. முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரத்ன, இடதுசாரிகளின் புரட்சித்தலைவர்கள் வாசுதேவ நானயக்கார உட்பட விழிப்புணர்ச்சி எண்ணம் கொண்ட இ.தம்பையா போன்றவர்களும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அரசியல் வேறுபாட்டை மறந்து கூடினர்.

தனிப்பட்ட முறையில் இ.தொ.காவுக்கு எதிரானவர்கள் இ.தொ.காவுக்கு எதிராக நடத்தியபேரணி அல்ல இது. அரசுக்கும், தோட்டத்துரைமாருக்கும் வால் பிடிக்கும். ஆமாம் சாமி போடும் கூட்டங்களுக்கு எதிராக தொடரப்பட்ட போராட்டம் அல்ல இது.

உழைக்கும் தொழிலாளர்களுக்கு ஊதியம் கேட்டு நடத்தப்பட்ட உணர்வு பூர்வமான போராட்டம். அதைக் கொச்சைப்படுத்த முயன்று நீங்கள் மூக்குடைபட்டதுதான் மிச்சம். இனி மேலாவது உங்கள் சுயவிருப்பத்தை மட்டும் பார்காமல் தொழிலாளர்களின் நலனில் அக்கறைகொண்டவர்களுக்கு இடம்விட்டு ஒதுங்கிக்கொள்வதே மேல்.

சராகோகுலன்



# டேஸ்ட்கடை தணிகாசலம்

நற்பணி மன்ற வளாகம் என்றும் இல்லாத வகையில் கலகலப்பாகக் காணப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து மலையக யுவதிகள் பெருமளவில் கூடி இருந்தனர்.

ஆம். தணிகாசலம் அண்ணனின் ஏற்பாட்டில் மலையகத்தில் உள்ள அனைத்துப் படித்த இளைஞர், யுவதிகளும் ஓரணி திரண்டு ''மலையக இளைஞர் பேரவை'' என்ற அமைப்பை உருவாக்கப் போகின்றனர்.

இதை அமைப்பதற்கு பிளாண்டேசன் கம்பெனி நிர்வாகி கதிரேசன், கல்விப்பணிப்பாளர் இராசாத்தி ஆகியோர் பெரும் சிரத்தையுடன் செயற்பட்டனர்.

தூர இடங்களில் இருந்து வந்த இளைஞர், யுவதிகளுக்கு ஒரே வியப்பாக இருந்தது. பெரிய பதவிகளில் இருந்த போதிலும் நட்போடு நயமாகப் பழகியதும்,பண்பாகப் பேசியதும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்திவிட்டது.

அவர்களுக்கு ஏற்பட்ட ஆச்சரியமும் நியாயமானது தான். கதிரேசன் துரையும், இராசாத்தியும் இதே தோட்டத்தில் பிறந்து தணிகாசலம் அண்ணனின் ஆதரவுடனும் வழிகாட்டலிலும் இன்று சிறந்த கல்விமான்களாக உயர் பதவிகளில் இருக்கின்றனர்.

எல்லோரும் விழா மண்டபத்துக்கு வந்துவிட்டனர். அப்போது கதிரேசன் துரை சிவலிங்கத்தை அழைத்து ''எங்கே சிவா இன்னும் அண்ணனைக் காணவில்லையே'' என்று கேட்டனர்.


இருவரும் பேசிக்கொண்டே வாயில் பக்கம் வரவும் தணிகாசலம் அண்ணன் ஆட்டோ ஒன்றில் இருந்து இறங்கவும் சரியாக இருந்தது.

''வணக்கம் அண்ணே''

''வணக்கம் கதிர்; எப்படி நல்ல சுகமாக இருக்கிறீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டே இறங்கினார் தணிகாசலம் அண்ணன். நாங்கள் நல்ல சுகம். ஏதோ ஆத்தாவுக்குச் சுகம் இல்லையாமே, இப்ப எப்படி இருக்கு?''

''மழைக்காலம். அதோட வயதும் போச்சி. லேசா காய்ச்சல். இப்ப ஓரளவு நல்லா இருக்காங்க''

இப்படிப் பேசிக் கொண்டே விழா மண்டபத்துக்கு வந்த போது , தணி அண்ணனுக்கு ஒரே ஆச்சரியம். 'ஒரே ஒரு சிறிய அறிவித்தலைக் கேட்டு இத்தனை ஆயிரம் இளைஞர், யுவதிகள் திரண்டு வந்துவிட்டார்களே. இவ்வளவு காலமும் இலை, மறை, காய்களாக அல்லவா மூடி வைத்திருந்தனர்' என ஆதங்கப்பட்டார். உணர்ச்சி மிக்க இளம் நெஞ்சங்களைப் பார்த்ததும் தணி அண்ணனின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்தது.




எல்லோரும் மேடைக்கு வந்தனர். எல்லா இளைஞர்,யுவதிகளுக்கும் ஒரே சந்தோஷம். கரகோஷம் செய்து தமது மகிழ்ச்சியைத் வெளிப்படுத் தினர்.

வழமையான மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம் என்பனவற்றுடன் 'மலையக இளைஞர் பேரவை' உதயமானது.

தணி அண்ணன் இந்த அமைப்பை உருவாக்கியதன் அடிப்படைக்காரணத்தை தெளிவுபடுத்தினார். தனது அழைப்பை ஏற்று வந்த இளைஞர்,யுவதிகளுக்கு நன்றி தெரிவித்தார்.இந்தப்புரட்சிகரமான அமைப்பை உருவாக்க பக்கபலமாக இருந்த கதிரேசன் துரை, பணிப்பாளர் இராசாத்தி ஆகியோரின் பங்களிப்பைப் பாராட்டினார்.

கதிரேசன் துரை இரத்தினச்சுருக்கமாகப் பேசினார். ''எமது பெற்றோர்கள் ஏமாந்தது போதும். இனிமேலும் நாமும் ஏமாறக்கூடாது. மலையகத்தில் படித்தவர்கள் இல்லை என்றார்கள். இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்வோம் என்றனர். எனக்கும் கூட என்னடா மலையகத்துக்கு இப்படி ஒரு சோதனை? படித்த இளைஞர்கள் இல்லையா? என்ற ஏக்கம் ஏற்பட்டது. ஆனால், இராமானுஜம் ஐயா நத்தைக்குள் புதைந்து கிடந்த முத்துக்களை வெளியே கொண்டு வந்துவிட்டார்.

இதனால் வயிற்றெரிச்சல் அடைந்தவர்கள், உங்களுக்கு கிடைக்கவிருந்த நியமனங்களை எல்லாம்கிடைக்கவிடாமல் தடுக்க முயற்சிக்கின்றார்கள். அதற்கு நாம்இடம் கொடுக்க முடியாது. இவ்வளவு காலம் தான் படித்தவர்கள் இல்லை என்றனர். இப்பொழுது அங்கீகரிக்கப்பட்ட அரச சான்றிதழ்களுடன் தகுதியானவர்கள் இருக்கின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்தி விட்டோம். எங்களுக்கு நியமனங்களைப் பெற்றுத்தாருங்கள் என ஒரே குரலில் வலியுறுத்த வேண்டும். 3500 ஆசிரியர், 1000 பொலிஸார், 3500 அரச ஊழியர் என நியமனங்களைக் கேட்டுள்ளனராம். இனி எங்கேயும் ஆள் தேடி அலைய வேண்டாம். எங்களுக்குப் பெற்றுத்தாருங்கள் என்று போராட்டம் நடத்த வேண்டும்.

[illegible] அரசியல்வாதியின் பின்னும் போக மாட்டோம். இதனை ஒரு சுய உரிமைப் போராட்டமாக நடத்த வேண்டும். அதற்கான உறுதியை எடுத்துக்கொள்வதற்காகவே இன்றுகூடி உள்ளோம்''

இப்படி இளைஞர்களுக்குத் தெளிவு படுத்தினார் கதிரேசன் துரை.

தொடர்ந்து பேசிய கல்விப் பணிப்பாளர் இராசாத்தி நேரடியாகவே இளைஞர்களின் உள்ளங்களைத் தொட்டுவிட்டார்.

''எம்மில் படித்த இளைஞர்,யுவதிகள் எட்டாயிரத்துக்கும் அதிகமானோர் இருக்கிறோம். இதைவிட ஜீ.சீ.ஈ உயர்தரம் சித்தியடையாமல் மூவாயிரம் பேர் இருக்கிறோம்.

இப்படி சாதாரணமாகப் பார்த்தால் சாதாரணமாக 11ஆயிரம் பேர் இருக்கிறோம். நாம் எல்லோரும் பிரஜா உரிமை பெற்றவர்கள். எமது கைகளில் 11ஆயிரம்வாக்குகள் இருக்கின்றன. இதன் அடிப்படையில் எமது தாய், தந்தையர் என 22ஆயிரம் பேர், எமது சகோதரர்கள் தலா இருவர் என்றாலும் 22ஆயிரம் பேர் இருக்கிறோம். இதை எல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் 55ஆயிரம் வாக்குகள் இந்தப் படித்த இளைஞர்,யுவதிகளின் குடும்பங்களில் இருக்கின்றனர்.

இந்த எட்டாயிரம் இளைஞர், யுவதிகளுக்கு நியமனங்கள் வழங்குவதை தடை செய்தால் இந்த 55ஆயிரம் வாக்குகளையும் அந்த அரசியல் வாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்த தயங்கக் கூடாது'' என்றார் கல்விப் பணிப்பாளர் இராசாத்தி.

இராசாத்தியின் இந்த ஆவேசப் பேச்சு எல்லா இளைஞர்,யுவதிகளுக்கு பெரிதும் தெம்பூட்டியது. நிச்சயமாக நாம் ஒன்றுபட்டு விட்டோம்.இனிமேலும் எம்மை ஏமாற்ற முடியாது' என்று உறுதி எடுத்துக்கொண்டனர்.

'இனி என்ன கவலை. மலையத்தின் மூலை, முடுக்குகளில் எல்லாம் அரசியல் கலப்பற்ற மலையக இளைஞர் பேரவையின் கொடிகள் பறக்கப் போகின்றன. மலையகத்தின் இளைஞர் சமுதாயம் வெகுண்டு எழுந்துவிட்டது. நிச்சயம் புரட்சி வெடிக்கும். நாளையே தமது இயக்கத்தை ஆரம்பித்து விடுவார்கள் என்ற நம்பிக்கை உதயமாகிவிட்டது' என்று தணிகாசலம் அண்ணன் பெருமிதம் அடைந்தார். நாளைய பொழுது நல்லதாக விடியட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவின் வட மாநிலங்களை அச்சுறுத்தும் தீவிரவாதம்

உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் கிலி கொள்ள வைக்கும் தீவிரவாதத் தாக்குதல்கள், எங்கு, எப்படி நிகழப் போகிறன என்று மதிப்பிட முடியாத வகையில் நிகழ்ந்த வண்ணமுள்ளன. அந்தவகையில் உலகுக்கே அஹிம்சாவாதத்தைப் போதித்த மகாத்மாவின், காந்தி ஜெயந்தி தினமான ஒக்டோபர் இரண்டில் இந்தியாவின் அஸாம், நாகலாந்துப்பிரதேசங்களில் நிகழ்த்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர் தாக்குதல்களுக்கான பிள்ளையார் சுழியாகக் கருதப்படுகின்றன.

பொதுமக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் தமது தாக்குதல்களை நடத்தி அவற்றின் மூலம் தமது சக்தியை உலகுக்குப் புரியவைப்பது தீவிரவாதத்தின் வழமை. அவ்வகையில் இத்தாக்குதல்கள் நாகலாந்தின் திமாபூர் ரெயில்வே நிலையத்திலும், அங்குள்ள ஹொங்ஹொங் சந்தையிலும் இடம்பெற்றுள்ளன.

தீவிரவாதிகள் 3 நாட்கள் தொடர்ந்து நடத்தியதாக்குதல்களில் 76பேர் பலியாகிவிட்டனர். இந்தத் தாக்குதல்கள் குறித்து நடத்தப்பட்ட முதல் கட்ட விசாரணையில் உல்பா மற்றும் போடா தீவிரவாத அமைப்புகள் சம்பந்தப்பட்டு இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்தியாவில் தீவிரவாதத் தாக்குதல்கள் காஷ்மீர் பிரதேசங்களிலேயே அதிகளவு இடம் பெற்றுவந்தன. ஆயினும், தற்போது இத் தீவிரவாதத் தாக்குதல்கள் வடகிழக்கு மாநிலங்களை நோக்கி இடம்பெயர்ந்துள்ளன.

தனி நாடு கோரிக்கையை வலியுறுத்திப் போராடும் நாகலாந்துப் பிரிவினைவாதக் கிளர்ச்சிக் குழுக்களின் முக்கியக்குழுவொன்று 1997இல் அரசுடன் போர் நிறுத்த உடன்படிக்கையை ஏற்படுத்தியது. தொடர்ந்து ஏழு வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்ட நிலையிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. தமது மக்கள் என்றும் பார்க்காமல் பாடசாலை மாணவ — மாணவிகள் மற்றும் பெண்களை கொன்று இருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்திய ஒற்றுமையை சீர்குலைக்க விரும்பும் சக்திகளுடன் இந்த அமைப்புகள் தொடர்பு வைத்திருப்பது தெரிய வந்துள்ளது. இதனால் வடகிழக்கு மாநிலங்களில் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி என்பதன் சுருக்கமே உல்பா. பிமகாந்தா, ராஜீவ் ராஜ்கோன்வார், கோலப்பாருக், சமாரியன் கோகெய்ன், பிரேஷ் பாரேக் ஆகிய ஆறு பேரும் இணைந்து 1979ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி இந்த அமைப்பைத் தொடங்கினர். அப்போது சுதந்திர சமத்துவ அஸாம் என்ற பெயரில் உல்பா அமைப்புச் செயற்பட்டது.

அஸாமை மையமாகக் வைத்து தனிநாடு உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அமைப்பு செயற்பட்டு வந்தது. இவர்களை அரசு ஒடுக்க முயன்றது. இதை அடுத்து உல்பா அமைப்பில் இராணுவப்பிரிவு 1996ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதி உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பின் பெயர் சாஞ்சுக்தா முக்திபவுச் (எஸ்.எம்.எப்).

இந்திய இராணுவத்தைப் போல் உல்பா இராணுவப் பிரிவும் அதிக கட்டமைப்புக்களைக் கொண்டது. இவற்றில் ஏழு படைப்பிரிவுகள் உள்ளன. இதில் 3 படைப்பிரிவுகள் (7,28,709 பட்டாலியன்கள்) தனித்து இயங்கும்சக்திகொண்டவை. இவர்களுக்குப் பூட்டான் அரசு ஆதரவு கொடுத்ததால் அங்கும் முகாம் அமைத்துத் தங்கினார்கள்.

அப்போது ரோயல் பூட்டான் இராணுவ அதிகாரிகள் மற்றும் பூட்டான் பொலிஸாருடன் உல்பா அமைப்பினருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களிடமிருந்து ஆயுத உதவி மற்றும் நிதி உதவியைப் பெற்று வேகமாக வளர்ந்தனர். சுமார் 2000 படைவீரர்கள் பூட்டான் முகாமில் பயிற்சி பெற்றனர்.

வங்க தேசமும் உல்பா தீவிரவாதிகளுக்கு உதவி வருகிறது. 1989ஆம் ஆண்டு முதல் அங்கு முகாம் அமைத்து உல்பா தீவிரவாதிகள் பயிற்சி பெற்று வருகிறார்கள். வங்க தேசத்தில் உல்பா அமைப்பு சார்பில் 3 ஹோட்டல்கள், மருத்துவமனை, பாடசாலைகள், தொழிற்சாலைகள், கடைகள் ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. இங்கிருந்து கிடைக்கும் பணம் மூலம் ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை வெளிநாடுகளிடமிருந்து வாங்குகிறார்கள்.



வங்கதேசத்திலுள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் மூலம் உல்பா அமைப்பினருக்கு பாகிஸ்தானுடன் தொடர்பு ஏற்பட்டது. இதன் மூலம் பாகிஸ்தானின் உளவுப் பிரிவு, ஆப்கானில் முஜாகிதீன் ஆகிய தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அந்த நாடுகளுக்கும் சென்று பயிற்சி பெற்றனர்.

சுமார் 200 உல்பா தீவிரவாதிகள் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானில் முறையான இராணுவப் பயிற்சி பெற்றுள்ளனர். உல்பா அமைப்பின் இராணுவத் தலைமைத் தளபதி பாரேஷ் பாராக் 1996ஆம் ஆண்டு அடிக்கடி கராச்சிக்கு சென்று வந்தார். அப்போது ஒசாமா பின்லேடனைச் சந்தித்துப் பேசியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் சர்வதேச தீவிரவாத அமைப்புடன் உல்பா தீவிரவாதிகளுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

பூட்டான் வழியாகச் சீனாவுக்கும் சென்று இராணுவப் பயிற்சி பெற்றனர்.

தற்போது உல்பா அமைப்பின் தலைவராக இருப்பவர் அரபிந்தா ராஜ்கோவா. துணைத் தலைவர் பிரதிப் கோகாய். இவர்கள் இரண்டு பேரும் அஸாம் பொலிஸாரால் 1998ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். தற்போது இருவரும் கவுகாத்தி சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். உல்பாவின் இராணுவத் தலைமைத் தளபதி பரேஷ் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை.

அடைக்கலம் கொடுத்த பூட்டான் நாட்டில் ரகளை செய்ததால் உல்பா முகாம் மீது கடந்த டிசெம்பர் மாதம் திடீர் இராணுவத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஏராளமான உல்பா தீவிரவாதிகள் பலியானார்கள். மூத்த தலைவர்களும், மீதம் உள்ளவர்களும் வங்காள தேசம், மியான்மார் நாடுகளிலும் நாகலாந்து, மேகலாயா, அருணாசல பிரதேச மலைப் பகுதியிலும் பதுங்கி இருக்கிறார்கள்.

போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணியின் சுருக்கமான பெயர் தான் போடோ(என்.டி.எப்.பி). 1986ஆம் ஆண்டு ஒக்டோபர் 3ஆம் திகதி போடோ பாதுகாப்புப் படை என்ற பெயரில் ரஞ்சன் தாய்மாரி என்பவரால் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

பிரமபுத்திரா ஆற்றை மையமாக வைத்து சுதந்திர போடோலாந்து என்ற நாட்டை உருவாக்குவதே இவர்களது லட்சியமாக இருந்து வந்தது. இதற்காகப் போடா அமைப்பினர் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள்.

போடா அமைப்பினர் அஸாம் மாநிலத்தில் பிரமபுத்திரா ஆறு ஓடும் வடக்கு மற்றும் வடமேற்குப் பகுதியில் தங்கி தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டனர். அதன்பிறகு மேகாலாயா—அஸாம் எல்லையில் இருக்கும் கார்கோமலைப் பகுதி மற்றும் அருணாசலப் பிரதேசத்துக்கு தமது இருப்பிடத்தை மாற்றினார்கள்.

அவர்களுக்கு பூட்டான் இராணுவம் அதிக அளவு உதவி செய்து வந்தது. அங்கு 12 முகாம்கள் அமைக்கப்பட்டு இருந்தன. இதன்பயனாக மியான்மார், வங்காள தேசம் ஆகிய நாடுகளிலும் முகாம் அமைக்கும் உதவியைப் பெற்றனர். சீன இராணுவமும் இவர்களுக்குப் பயிற்சி அளித்தது.

ஆனால், பூட்டான் நாட்டில் பிரச்சினை செய்ததால் போடா மற்றும் உல்பா அமைப்புகள் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதில் ஏராளமான போடா தீவிரவாதிகள் பலியானார்கள். தற்போது 2000ஆயிரம் பேர் மட்டுமே இருப்பார்கள் என்று கூறப்படுகிறது.

போடா தலைவர்களில் பெரும்பாலனோர் கைது செய்யப்பட்டுவிட்டனர். துணைத் தலைவர் திரன் போரா 2003ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி சிக்கிம் மாநிலத்தில் கைது செய்யப்பட்டார்.

பாங்காக் பொலிஸாரால் ஜூலை மாதம் கைது செய்யப்பட்ட போடோ இராணுவத் துணை தலைமைத் தளபதி பிஜாய் போரோ தற்போது அஸாம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு இருக்கிறார்.

பிரசார இயக்கச் செயலாளர் லெப்டினென்ட் ராக்டோவை டிசம்பர் மாதம் முதல் காணவில்லை. அவர் பூடான் இராணுவ நடவடிக்கையில் பலியாகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

காந்தி ஜெயந்தி அன்றும், அதற்குப் பின்னரும் வட கிழக்கு மாநிலங்களை கலங்க வைத்த தீவிரவாத தாக்குதல்கள், போடோலாந்து தேசிய ஜனநாயக முன்னணி என்ற தீவிர வாதக் குழுவின் 18 ஆவது நிறைவையொட்டியும் நடத்தப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.


வீட்டு யுத்தம் தீர்ந்தது!
வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும் சுவைமிக்க விட்டமின் பானம்
Hungry Plus

வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.




ஹங்ரி பிளஸ்
பசியைத் தூண்டும்...
இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.
Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290



திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை
எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு:-
திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் — கொழும்பு விமான சேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஒக். 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.